உ

தமிழ்த்தாய் வாழ்க.

# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக்
கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்
திங்கள் வெளியீடு.

---

## விபவ ஆண்டு.

**(1928—29.)**

---

நான்காம் துணர்.

பொழிற்றொண்டர்,

திரு L. உலகநாத பிள்ளையவர்கள்.

திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்.

தஞ்சைக்
கரந்தைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

## கட்டுரை எழுதிய திருவாளர்களும், கட்டுரைகளும்.


L. உலகநாத பிள்ளையவர்கள்.

*இராசராசன், 1, 81, 161, 325.*

*பதி பசு பாச வகை, 74.*

*பதி பசு பாசப்பனுவல், 98, 226.*

*குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், 167, 328, 365,*

*தத்துவ விளக்கம், 382.*

*தமிழ் நாட்டுப் பெண்பாற் புலவர்கள், 408.*

இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்.

*குமரகுருபர அடிகளும், அவர் நூல்களும், 11, 204.*

*சுவாமிநாதம், 351, 369.*

சங்க அமைச்சர்.

*துயரம், 16.*

ஔவை, சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்.

*வாமினன்னும் வைப்பு, 17.*

*மதுரைக் காஞ்சியாராய்ச்சி, 331, 420.*

R. நரசிம்மலுநாயுடு அவர்கள்.

*நட்பு, 36.*

சி. வேதாசலம் பிள்ளையவர்கள், B.A., B.L.

*அண்ணுமலைப் பல்கலைக் கழகம், 49.*

வை. சுந்தரேச வாண்டையாரவர்கள்.

*ஓர் ஆராய்ச்சி, 53.*

ஊ. சா. வேங்கடராமையர் அவர்கள்.

*ஐயவினுத் தொடர், 56.*

*இன்ப வாழ்க்கை, 462.*

*ஏழை மக்களை எவ்வழி யுயர்த்தலாம், 469.*

R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்.

*பச்சையப்ப முதலியார், 57.*

*எனது பற்பல வேலைகள், 128.*

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.

*மார்க்கண்டேயர், 69.*

கி. அரங்கராசன் அவர்கள்.
*திருச்சுழியல் வெண்பா வந்தாதி*, 78, 145, 476.

அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்.
*எனது நனவிற் கனா*, 90.
*தன்னலமும் பொது நலமும்*, 173
*தன்னலப்பாட்டு*, 385.
*முப்பாலிற்கண்ட மூவகை யுதவிகள்*, 414.
*எனது காதலர்*, 455.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.
*மாதங்கள்*, 101.
*கிறித்தவர் கிழமைகளும் மாதங்களும்*, 441.

T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்.
*பாண்டியர் வரலாறு*, 121, 210, 394.
*மிழலைக் குறும்ப நாயனார்*, 141.
*புறநாட்டுப் பொருள்கள்*, 390.

K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், B.A.
*பண்டைத் தமிழ் மக்களும், தனித்தமிழ் மொழியும்*, [183, 431.
*பதி பசு பாசம்*, 474.

பண்டிதர், அ கந்தசாமிப் பிள்ளையவர்கள்.
*பாடவேறுபாடுகள்*, 196.

இராம. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள்.
*கண்ணகியும் மாதவியும்*, 231, 340.

ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்.
*பள்ளிக்கூடப் பாடங்களின் உரையாராய்ச்சி*, 241.

சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T.,
*உடல் இயலும் உடல் நல வழியும்*, 294, 371.

பொழிற்றெண்டர். வே.
*பஞ்சாபகேசன் மதிப்புரை*, 240.
*நமது பொழில்*, 361.
*கட்டுரை எழுதும் அறிஞர்கட்கு வேண்டுகோள்*, 363.

---

உ

# தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் : ச. | விபவ—சித்திரை, வைகாசி. | மலர் : க-உ. |
| --- | --- | --- |

உ

## இராசராசன்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 331-ஆம் பக்கம்.)

இனி, திருவிரிஞ்சியீச்வரமன்றி இராசராசன் காலத்தில் மும்மடி சோழமண்டலம் என வழங்கிய ஈழத்தில் மாதோட்டமான இராசராசபுரத்தில் உள்ள இராசராசேச்சரமும், பழையாற்றில் அருண்மொழி தேவேச்சரமும், இராசராசன் எடுப்பித்த ஆலயங்கள் போலும் என்று ஊகிக்கின்றனர். இவையல்லாமல், திருவலஞ்சுழி ஆலயத்துள் கேத்திரபாலர்க்கு ஒரு ஆலயம் இவன் எடுப்பித்தமை (No. 633 of the Madras Epigraphical Collection for 1902) புலப்படுகின்றது.

இனி, இராசராசன் காலத்தில், கொள்ளிடத்திற்கு வடகரையிலுள்ள மழநாடான இராசாச்ரய வளநாட்டில், பிடாரி புன்னைத்துறை நங்கை, பிடாரி பொதுவகை ஊருடையாள், காளார் பிடாரியார், பிடாரி குதிரைவட்ட முடையாள், பிடாரி திருவாலுடையாள் என்ற பல்வகைப்பட்ட பிடாரி கோயில்கள் இருந்தன. (Vol. II Part I. p. 57.)

## இராசராசன் திருமுறைகண்டது.

இனி, இராசராசன் திருமுறைகண்ட வரலாற்றினைக் கூறப் புகுவதன் முன், அதுபற்றி ஒரு சாரார் கூறும் தடைகளை எடுத்துரைத்து உண்மை காண்டல் இன்றியமையாததாகலின் அவற்றினை ஆராய்வாம்.

இனி, ஒருசாரார் கூறுவது வருமாறு :—

"உலகமகிழ் தருசைய மீதுதோன்றி யோவாது வருபொன்னி சூழ்சோணாட்டின்
திலகமென விளங்குமணி மாடவாரூர்த் தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சி
யலகில்புகழ் பெறுராச ராசமன்ன னபயகுல சேகரன்பா லெய்துமன்ப
ரிலகுமொரு மூவருள் பதிகமொன்றொன் றேயினிதி னுரைசெய்ய வன்பாற்கேட்டு"

என்னும் திருமுறைகண்ட புராணச் செய்யுட்கண் அபயன் என்னும் பெயர் கூறப்பட்டுள்ளது. அது, முதலாங் குலோத்துங்கனை யன்றிப் பிறரைச் சுட்டாது. தொகுக்கப்பெற்ற திருமுறைகளுள் திருவிசைப்பாமாலையும் ஒன்று. அதன்கண் இராசராசன் காலத்துக்குப் பின்னிருந்தவர் இயற்றிய இசைப்பாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால், திருமுறை இராசராசன் காலத்திற் கண்டதெனல் அமையாது; அபயன் நாளையிற் கண்டதெனலே சால்புடைத்து" என்பது.

இனி, இவர் எடுத்துக்காட்டிய அபயன் என்னும் பெயர், அகளங்கன், உத்துங்கன், குலோத்துங்கன், மானுபரணன் என்றற் றொடக்கத்தன போலச், சோழர்க்குப் பொதுப்பெயராகப் பலவிடத்தும் பயின்றுவந்திருத்தலின் குலோத்துங்கற்கே உரியதெனல் அமையாது. இதுநிற்க, திருமுறைகண்ட புராணமுடையார் சுட்டியது அபயனை யன்று இராசராசனை என்பதற்கு, அப்புராணம் ஆறுவது செய்யுளில், "மல்லன்மிகு சேனையுடனிராசராச மன்னவனு மந்நகரில் வந்து சேர்ந்தான்" எனவும், அவர் இயற்றிய சேக்கிழார் புராணத்து, "சேயதிரு முறைகண்ட

ராசராச தேவர்" எனவும் கூறியிருப்பதே சான்றாகும். ஆகவே, முதற் செய்யுளில் வந்துள்ள அபயன் குலசேகரன் என்பன இராசராசனது புகழ்ப் பெயர்களே யன்றிப் பிறவல்ல என்று தெரிந்துகொள்க.

இனி, தன் தலைநகர்க்கண் இராசராசேச்சரத்தில் திருவாரூர் வழக்கினையொட்டி விடங்கர்த் திருமேனியை எழுந்தருளச்செய்து அவ்வூர் ஐதிகத்திற் கிணங்க நாட்பூசையும், அசபாநடம், சுத்த மத்தளம், எக்காளம், வசந்தவிழா, நாடகம், தேர் முதலாய சிறப்புக்களும் இவன் ஏற்படுத்தமை, இற்றைநாளைய வழக்கினைக் கொண் டறியக்கிடத்தலின், ஆரூரர் பதம் பணிந்து செங்கோ லோச்சினோன் இராசராசனே எனற் கியைபுடைத்தாதல் காண்க.

இனி, திருமுறைகளுள் ஒன்றாகிய திருவிசைப்பாமாலையில், இராசேந்திரன் தன் தந்தைக்குப் பின்னர்த் தலைநகராகக் கொண்ட கங்கைகொண்ட சோழபுரத்தில் எடுப்பித்த கங்கைகொண்ட சோளேச்சரத்தைப் பாடியவையும் பிறவும் சேர்க்கப்பட்டிருத் தலின், இராசராசன் திருமுறை கண்டான் என்பது எவ்வாறு பொருந்தும் எனிற், கூறுவேன்.

மூவர் திருமுறைகளும் திருமந்திரமும் ஒழித்து ஒழிந்தவற்றுள், திருமுறை தொகுத்த காலத்திருந்தனவும் பின்னர்ச் சேர்க் கப்பட்டனவும் இன்ன இன்னவென வரையறுத்துக் கூறுதற் கியலாதெனினும், காலந்தோறும் பிறரால் சேர்க்கப்படும் வழக் குண்டு என்பதை, "ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சக மொன்று" எனத் திருவாசகம் ஒன்றுமே எட்டாந் திருமுறை யாகக் கூறியிருப்பவும், இப்பொழுது திருக்கோவையார் எட்டாந் திருமுறையின் பகுதியாக அமைக்கப்பெற்றிருத்தலையும் நம்பி யாண்டார் நம்பி பதினொரு திருமுறைகளையும் வகுத்த பின்னர்த் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினரெனத் திருமுறை கண்ட புராணம் 29-ஆம் செய்யுளால் அறியக்கிடப்பவும், அதனை யும் அதற்குப் பிறகு அவர் இயற்றிய ஏனைய நூல்களையும் பதினோராந் திருமுறைப் பகுதியாகச் சேர்க்கப்பட்டிருத்தலையும், உற்றுநோக்கின், உய்த்துணரலாம். இவ்வழக்கிற் கிணங்க,

கங்கைகொண்ட சோளேச்சரப் பதிகம் போல்வன பிறவும் பின்னர்ச் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டும். இம்முறைகொண்டு நோக்குமிடத்துப் பின்னர்க் கூட்டிய பகுதியாற் படுவதோர் இழுக்கின்மையின், இராசராசன் திருமுறைகண்டான் என்பது பொருந்துமாறறிக.

இன்னும் இராசராசன் காலத்தில் தஞ்சை இராசராசேச்சரத்தில் தேவாரம் பாடிய மூவர் திருமேனியையும் எழுந்தருளச் செய்திருத்தலையும், முறையாக நாடோறும் திருப்பதியம் விண்ணப்பம் செய்வதற்குப் பண்ணொடு பாடவல்லார் நாற்பத்தெண்மரை அமைத்து அவர்க்கு நிபந்தம் ஏற்படுத்திருத்தலையும், இராசராசனுக்குப் பின்னும் குலோத்துங்கனுக்கு முன்னும் ஆட்சி புரிந்தார் பலர் திருப்பதியம் பாடுதற்கு ஏற்பாடு செய்தமை சாசனங்களால் அறியக்கிடத்தலையும் ஆயுமிடத்து, திருமுறைகண்டவன் குலோத்துங்கன் அல்லன் இராசராசனே எனக்கோடற்கு இயைபுண்மை காண்க.

இதுகாறும் கூறியவாற்றல், திருமுறைகண்டவன் இராசராசன் என்பதும், தியாகேசர் பதம்பணிந்து செங்கோ லோச்சினவன் அவனே என்பதும் பெற்றும்.

இனி, இராசராசன் திருமுறைகண்ட வரலாற்றினைச் சுருங்கக் கூறுமிடத்து, இவன் அரியணை ஏறிய பின் சில யாண்டுகள் வரையும் போர்மேற் செல்லாது நாட்டிற் காவல் செய்திருக்கையில், திருவாரூர்க்குச் சென்று தியாகேசப் பெருமானை வழிபடும் போது, அங்குப் போதரும் அடியாருட் சிலர், திருமுன்னர் மூவர் திருப்பதிகங்களுள் ஒன்றிரண்டு விண்ணப்பம் செய்யக் கேட்டுக் கைகளிரண்டும் உச்சிமேலேறக் கண்ணீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப நெஞ்சம் நெக்குருகி, "எம்பெருமானே! இப் பதிகம் முழுவதும் கேட்டு என்று இன்புறுவேன்" என ஐயன் மலரடிகளை உள்ளத்தே கொண்டு போற்றி, அவ்வரிய முறைகளைத் தேட எங்கும் ஆட்போக்கியும் அகப்படாமையால், நைபு மனத்தினனாகி இருந்தனன். அப்பொழுது, பொன்னியாற்றின்

வடகரையிலுள்ள திருநாரையூரில் ஆதிசைவ மரபில் நம்பியாண்டார் நம்பி என்பவர் பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் பெற்றுச் சிறந்து விளங்குவதைக் கேட்டுணர்ந்து, அவர்பாற் சென்று, பிள்ளையார்க்குத் திருவமுது படைத்தற்கும் திருமஞ்சனத்திற்கும் வேண்டுவனவற்றை நிரம்பக் கொடுத்துத் தன் கருத்தினை உணர்த்தினன். அவரும் பிள்ளையாரை வழிபட்டு, அரசன் எண்ணத்தை விண்ணப்பம் செய்ய, அப்பெருமான் அருளிச்செயலால், பொன்னம்பலத்தின் மேற்றிசையில் மூவர் கையிலச்சினை பெற்ற காப்பினையுடைய அறையின்கண் தேவாரத்திருமுறைகள் இருத்தலை அறிந்து, இவற் குணர்த்தினர். கேட்ட இராசராசன் பெரிதும் மகிழ்வுற்று நம்பியோடு தில்லைநகரை அடைந்து தில்லைவாழந்தணரை எதிர்ப்பட்டுத் 'திருமுறைகளை எடுக்க இசைந்திடவேண்டும்' என்றுரைப்ப, அவரும், 'அவற்றினை வைத்த மூவரும் எழுந்தருளின், அறை திறக்கும்' என்றனர். இவன் நுண்ணறிவிற் சிறந்தோனாதலின், அம்மூவர் திருமேனிகளையும் வீதியில் திருவுலாப்போதரச்செய்து, முறைகளை அடக்கஞ் செய்துள்ள அறைக்கெதிரில் கொணர்ந்து நிறுத்திக்கொண்டு, 'மூவரும் வந்தனர்; இனி அறைதிறக்கலாமே' எனக்கூறிட, அந்தணர்கள் இன்னவனது அறிவின் திறத்தினை வியந்து, திறப்பதற்கு உடன்பட்டனர்.

அறை திறக்கப்பட்டது; முறைகளெல்லாம் புற்றினுல் மூடுண்டிருந்தன. கண்டான், என் செய்குவான்! கலக்கமெய்தினன். அப்பொழுது 'அரச! கவலற்க; இக்காலத்திற்கு வேண்டியவை போக எஞ்சியவற்றைச் செல்லரித்திடச் செய்தேம்' என விண்ணிடை நின்றும் ஒரு நன்மொழி எழுந்தது. அதைக் கேட்டவுடனே திருவருளைவியந்து, நம்பியை வணங்கி, 'ஐயனே! இவற்றைத் தொகுத்தருள வேண்டும்' என்றிரந்தனன்.

இராசராசனது வேண்டுகோட் கிணங்கிய நம்பியாண்டார் நம்பியும் திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தனர். அதனை அடியிற்கண்ட செய்யுட்களால் அறிக. அவை:—

"பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந் நூற்
றெண்பத்தி னன்கின லிலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினல்
வண்பெற்ற முறையொன்று நூற்றினல் வன்றெண்டர்"

"ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
டாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்"

"வைத்ததற்பின் நம்பிகழன் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரு மிறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
வுய்த்தபதி கங்களையு மொருமுறையாச் செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினென்றாப் பண்ணினர்."

என்பனவாம்.

இவ்வரலாற்றினைத் திருமுறைகண்ட புராணத்துப் பரக்கக்காண்க.

இனி,

"கருமுறை விண்டடி யவருய்ய மாறருள் கவுணியர் குலதீபந்
தருமிறை நாவுக் கரசா ரூரர் தாஞ்சே மித்திடுமத்
திருமுறை கண்ட புராணம்" எனவும்,

"கண்டதொரு மந்திரமே மூவர் பாடல்" எனவும், "தமிழ் வைத்த மூவர்வந்தா லறைதிறக்கும்" எனவும், "அருள்பெற்ற மூவர்தம தருள்சேர் செய்ய-கையதுவே யிலச்சினையா யிருந்த காப்பு" எனவும், திருமுறைகண்ட புராணம் கூறுமாற்றால், இராசராசன் அரிதில் முயன்று அம்பலத்தே பெற்றுத் திருமுறையாக முன்னர்த் தொகுப்பித்தது மூவர் பாடல்களைமட்டும் என்றும், அக்காலத்து வழங்கிய அத்தகைய பிறவும், மீளவும் இவன் வேண்டப் பின்னர்த் தொகுக்கப் பெற்றன் போலும் என்றும் உய்த்துணரற்பாற்று.

[துணர் 3 பக்கம் 129 இல், 'இவர் இராசராசேச்சர முடையார்க்கு மருந்து சாத்தி வழிபட்டபோது இசைப்பாப் பாடிலர்;

என்னை ? கங்கைகொண்ட சோளேச்சரம் பாடி இதனைப்பாடு தலின். ஆகவே, தலங்கள் பலவும் சென்று வணங்கி மீண்ட பின்னர் இராசராசேச்சரம் பாடினர் போலும் என்பதே அமை வுடைத்தாகும்' என்பதை, திருவிசைப்பாமாலையில் அமைந்து கிடக்கும் தலமுறை வைப்பிற்கு இயைபு புலப்படவில்லை, அது புலப்படாதபோது, முற்பாடினவும் பிற்பாடியவையும் இன்ன இன்னவென எவரால் உரைத்தற் கியலும் ? சோளேச்சரப்பதிகம் இராசராசேச்சரப் பதிகத்திற்கு முன் அமைந்திருப்பது கொண்டு கங்கைகொண்ட சோளேச்சரத்தைப் பாடிய பின்னர் இராச ராசேச்சரத்தைப் பாடினர் என்றல் பொருந்தாது. கருவூர்த் தேவர் இராசராசன் காலத்தில் தஞ்சைக்கு எழுந்தருளி மருந்து சாத்தியமை அறியக்கிடத்தலின், இசைப்பாவையும் அப்பொழுதே பாடினராதல் வேண்டும் எனக்கோடலே பொருத்தமுடைத்து ; என்னை ? இராசராசனுக்குப் பின்னர் அவன் மகன் இராசேந்திரன் தன் தலை நகர்க்கண் கங்கைகொண்ட சோளேச்சரம் எடுப்பித் தனனாகலின். என்று திருத்தஞ்செய்து கொள்க.]

## இராசராசன் அரசியன்முறை.

இனி, இராசராசன், மதுராந்தகன் உத்தமசோழன் ஆட்சி புரிகையில், அவன்கீழ் இளவரசாக இருந்தமை அறியப்படுதலின், ஆட்சிசெய்யும் அரசன்கீழ்ப் பின்னர்ப்பட்டம் பெறுதற்கு உரி யாரை இளவரசாக ஏற்படுத்தும் வழக்குண்மை அறியலாம். அரசனே தான் வேண்டியவாறு எதனையும் நடத்தற்குரிமை பூண்டவனெனினும், "உடன்கூட்டத் ததிகாரிகள்" என்றும், "அதிகாரிகள் ராஜேந்திரசிங்க மூவேந்த வேளார்" என்றும், அதிகாரிகள் காஞ்சிவாயிலுடையார், உதய திவாகரன் தில்லையாளி யரான் இராசராச மூவேந்த வேளார், என்றும் வருதலால், பலருடனிருந்து ஆராய்ந்து காரியம் நடத்தினமை புலனாகின்றது. "நம் கருமமாராயம் ஆரூரன் அரவணையனான பராக்கிரமசோழ மூவேந்தவேளானும், தர்தன் சேந்தனான செம்பியன் மூவேந்த வேளானும், அருங்குன்றமுடையான் மாப்பேரன் பொற்காரியும், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநாரையூர் நாட்டுக் கர்க்குடை

யான் பிசங்கன் பாலூரான மீனவன் மூவேந்தவேளான்" என்றற் றொடக்கத்துப் பெயர்கள் ஆனைமங்கலத்துச் செப்பேட்டிற் காணப் படுதலின், அரச காரியத்தை முட்டின்றி நடத்தும் கருமமாராயம் பலர் இருந்தமை வெளிப்படை. "நடுவிருக்கும் புள்ளமங்கலத்து பரமேச்வரபட்ட சர்வக்ரதுயாஜியும், நடுவிருக்கும் வெண்ணை நல்லூர் தம்மடிபட்டனும்" என்பாரை உள்ளிட்டு நால்வர் பெயர் மேற்கண்ட செப்பேட்டில் வருதலின் மன்றத்திருந்து வழக்காராய்வோரும் பலர் இருந்தனரென்று ஊகிக்கலாம். "ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தைஞ்சாவது ஆமூர்க் கோட்டம் வகை செய்கின்ற புதுக்குடையான் எகதீரன் ஐம்ப தின்மன்" எனவும், திருவடந்தை வராகப்பெருமாள் ஆலயத்தின் மேலைச்சுவரில் வெட்டப்பட்டுள்ள இராசராசன் பதினேழாம் ஆண்டுச் சாசனத்தில் "நாடுவகை கற்றன் ஆதித்தனான தான மூவேந்த வேளான் மாராயன்" எனவும் வந்திருத்தலின், ஒவ்வொரு நாட்டையும் கூறுபட அளவிடுவோரும் (Surveyor), "நாடு கண்காட்சி இராமன் குமரனான சோழ மூவேந்தவேள மாராயன்" எனக் காணப்படுதலின் நாட்டைக் கண்காணிப்பாரும் இருந்தனராதல் அறியலாம்.

இனி, "கோராஜராஜகேசரிவர்ம்மற்கு யாண்டு எ-வது படுவூர் கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலிவல்லத்துத் திருத்தீக்காலி ஆழ்வாரை இவ்வாட்டை அய்ப்பசித்திங்கள் பௌர்ணமாஸியும் இரேவதியும் பெற்ற விஷுவில் சோம கிரகணத்தி னன்று மது ராந்தகன் கண்டராதித்தனார் ஆழ்வாரை சகச்ர கலச மாட்டுவிக்க வந்து திருவடி தொழுது நிற்க, ஆழ்வார்க்குக் காட்டுகின்ற திரு வமுதும் இருநாழியரிசித் திருவமுதாய் கறியமுதும் நெய்யமுதும் தயிரமுதும் இன்றியே நொந்தாவிளக்கும் ஆலசியமாயிருக்கக் கண்டு, திருக்கோயில் சிவபிராமணரையும் தீக்காலி வல்லத்துச் சபையாரையும் அழைத்து, இத்தேவருடைய ஆயமும் வியயமும் திருவாணைக்கும் திருவோலைக்கும் உரியவண்ணஞ் சொல்லுக வென்று வினவ, சிவபிராமணரும் தீக்காலி வல்லத்துச் சபை யாரும் சொல்ல (S. I. I. Vol. III p. 102), எனவும் இராச ராசனது நான்காம் யாண்டில் மதுராந்தகன் கண்டராதித்தனார்

ஐவரடங்கிய கூட்டத்துடன் போந்து திருமாற்பேறு அக்னீச்வரர் கோயில் அதிகாரிகளை ஆராய்ந்து தண்டம் இறுத்தனர் (Ep An. Rep. for 1911 p. 69) எனவும் அறியக்கிடத்தலின், அதிகாரிகள் அடிக்கடி நாட்டைச் சுற்றிப்பார்த்து நன்றும் தீதும் ஆராய்ந்து தக்க தண்டஞ்செய்தற்கு உரிமை பூண்டிருந்தமை விளங்கும்.

இனி, "உடையார் ஸ்ரீராஜராஜதேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடி சோழனின் கீழைத் திருமஞ்சன சாலை தானஞ் செய்தருளாவிருந்து......... ஸ்ரீ விமானத்துக் கல்லில் வெட்டுகவென்று திருவாய் மொழிஞ்சருள வெட்டின" "உடையார் ஸ்ரீராஜராஜதேவர் தஞ்சாவூர்ப் பெரியசெண்டு வாயில் சித்திரக் கூடத்து தெற்கில் கல்லூரியில் எழுந்தருளியிருந்து திருவாய் மொழிந்தருளினபடி வெட்டின" ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்றுவது நாள் முந்நூற்று நாற்பதினால் சீக்காலி வல்லத்து தென்பக்கத்துக் கோயிலின் உள்ளால் மாளிகை மேலைக் கல்லூரியில் எழுந்தருளிப் பரிசட்டஞ் சாத்தியருளாநின்று" என்பவற்றால் அரசன் இன்ன இடத்தில் இன்னகாரியம் செய்யும் போது இவ்வாணை பிறந்தது என்று குறிக்கும் வழக்கிருந்தமை காண்க.

இனி, இராசராசன் காலத்துச் சாசனங்களில், அருண்மொழி தேவ வளநாட்டு இங்கணாட்டுப் பாலையூர், சத்திரியசிகாமணி வளநாட்டுத் திருநாறையூர் நாட்டு அரக்கன்குடி, உய்யக்கொண்டான் வளநாட்டுத் திறைமூர் நாட்டு நெற்குப்பை, இராசேந்திரசிங்க வளநாட்டு இன்னம்பர் நாட்டு மருத்துவக்குடி இராசாச்ரய வளநாட்டுப் பாச்சிற் கூற்றத்து ஆன்பனூர், நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நகரம், பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர், கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கருப்பூர், இராசராச வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருநெய்த்தானம் எனவும், தொண்டை மண்டலமான சயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க்கோட்டத்து ஆமூர் நாடு எனவும், பாண்டி நாடான இராசராசமண்டலத்துப் பெரும்பூர் நாட்டு ஆண்டக்குடி எனவும்,

ஈழமான மும்மடிசோழ மண்டலத்து மாப்பிசும்பு கொட்டியாரமான இராசராசவளநாடு எனவும், மலைநாட்டு வெள்ளப்ப நாட்டுப் புதுக்கோடு எனவும், கங்கபாடிப்பதி நாட்டு ஆலூர் எனவும், நுளம்பப்பாடியான நிகரிலி சோழப்பாடிப் பறிவைநாடு எனவும், வந்துள்ள இவைகளைக் கொண்டு ஆராயுமிடத்து, சோழராச்சியம், சோழமண்டலம், இராசராசமண்டலம், சயங்கொண்ட சோழமண்டலம், மும்முடி சோழமண்டலம், மலைநாடு, கங்கபாடி, நுளம்பாடி, தடிகைபாடி, குடமலை நாடுகளையும் தன்பாற்கொண்டு பரந்துகிடந்த நிலப்பரப்பாகும் என்பதூஉம், இராச்சியம், பல மண்டலங்களாகவும், மண்டலங்கள், வளநாடு, கோட்டம், கூற்றங்களாகவும் வளநாடுகள் நாடுகளாகவும், நாடுகள் ஊர்களாகவும் பகுக்கப்பட்டன என்பதூஉம், சோழமண்டலம், அருண்மொழி தேவ வளநாடு, சத்திரிய சிகாமணி வளநாடு, கேரளாந்தக வளநாடு இராசேந்திரசிங்க வளநாடு, இராசாச்ரய வளநாடு, நித்தவிநோத வளநாடு உய்யக்கொண்டான் வளநாடு, இராசராச வளநாடு என்னும் ஒன்பது பிரிவுகளைத் தன்பாற் கொண்டிருந்த தென்பதூஉம் அறியலாம்.

இனி, அருண்மொழிதேவ வளநாட்டினை உள்ளிட்ட ஒன்பது வளநாட்டினும் காணப்படும் ஊர்கள், தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், நாகபட்டினம், நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருசிராப்பள்ளி, பிரம்பூர், முசிரி, குளித்தலை, உடையார் பாளையம் தாலூக்காக்களில் உள்ளனவாக இருத்தலின், சோழமண்டலம் என்றது தஞ்சாவூர், திருசிராப்பள்ளி சில்லாக்களைத் தன்பாற் கொண்டது என்பதூஉம், இராசராச மண்டலமாகிய பாண்டிய மண்டலம், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி சில்லாக்களைத் தன்பாற் கொண்டது என்பதூஉம், தொண்டை நாடான சயங்கொண்ட மண்டலம், வடவாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, சித்தூர் சில்லாக்களைத் தன்பாற் கொண்டது என்பதூஉம், ஈழமான மும்மடி சோழமண்டலம் இலங்கை என்பதூஉம், கங்கபாடி, நுளம்பாடி, தடிகை பாடி, குடமலை நாடுகள் என்பன, மைசூரின் முழுப்பகுதியும், குடகும், அனந்தப்பூர் சில்லாவின் ஒரு பகுதியும் அடங்கிய இடப்பரப் பென்பதூஉம்;

மலைநாடு என்றது சேரநாடாகலின், மலையாளமும் திருவாங்கூரும் தன்கண் அடங்கப்பெற்றது என்பதூஉம் அறிந்துகொள்க.

இனி, தன் இராச்சியத் தடங்கிய நிலப்பரப்பினை அளந்து இறைகட்டிஞலன்றி, விளைநிலங்கள் இத்துணை என்பதும், அவற்றால் வருதற்குரிய காணிக்கடன் இவ்வளவு என்பதும் அரிதற்கருமை நோக்கி, இராசராசன் தன் பதினேழாம் யாண்டில் நில முழுமையும் அளப்பதற்கு ஏற்பாடு செய்தான் (Ep. An. Rep for 1913 p. 96). இராசராசேச்சரத்து வெட்டப்பட்டுள்ள சாசனங்களில் 'அளந்தபடி நிலம்' எனப் பலவிடத்தும் காணப்படுவதும் இதற்குச் சான்ருகும். இவ் வேலையை மேற்கொண்டவர் சேனபதி குரவன் உலகளந்தான் ராசராச மாராயன் என்பவர். படைத்தலைவராகிய இவர்க்கு நில முழுவதும் அளவிட்டமைபற்றி 'உலகளந்தான்' என்னும் பெயர் அளிக்கப்பட்டது போலும்.

(தொடரும்).

---

உ

# குமரகுருபரவடிகளும்,
## அவர் நூல்களும்.

திருவாளர், இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள், வடமொழிக் கல்லூரித் தமிழாசிரியர்; திருவையாறு.

(முற்றொடர்ச்சி.)

அறிவு நூலடங்கலும் ஆய்ந்த அருந்திறல் மிக்க ஐயன்மீர்!

சிலதிங்கட்கு முன்னர், 'குமாகுருபாவடிகளும் அவர் நூல்களும்' எனுந்தலைப் பெயரிட்டு வரைந்த கட்டுரை யொன்று நமது தமிழ்ப்பொழிலின்கண் மிளிர்வுற்றது. அங்ஙனமிளிர்ந்த கட்டுரைக்கண் இதுகாறும் அவ்வடிகள் வரலாறுமட்டுங் குறிக்கப்பட்ட

தன்றி, அவர் தந்நூலின்க ணுழைந்தாயப் புகாமை அச்சைவப் பெரியார் பற்றிய வரலாற்றை யொருவா ருயப் புகுந்தது முற்றுப் பெருமையினும்.

ஈண்டுக்குறிக்கப் பெறுவதும் அவ்வாய்வே. ஒரு பெரியார் செய்தி முற்றத் தெரிந்து கோடல் வேண்டுமாயின், அன்னவ ரீட்டிய நூல் கொடும், நூலிற்குறித்த சிறப்புப் பாயிரங்கொடும், அவர்மீ தியற்றப்பட்டனவாயுள பாக்களிருப்பின் அப்பாக்கள் கொடும் அன்றிப் பிறவாற்றானறிதல் சிறிதுஞ் சாலாது. கேள்வி வாயிலா னறிதலாமோ வெனின், முற்றும் மாறுபட முடியும். அன்னதாயின், நூலும், நூலிற்கிட்ட பாயிரமும், பிறவும் அன்றிப் பிறநெறியான் பெரியார் வரலாற்றை யொருவர், நூலாக நூற்ப ராயின், அந்நெறி செந்நெறி பிறழ்ந்த புன்னெறியாகவே கொள் ளப்படும். என்னையெனின், முன்னொடு பின் மலைவும் நூலுக்கும் நூலாசிரியனுக்குமுள்ள தொடர்பின்மையும் புலப்படுதலினென்க.

அற்றேல், ஒரு பெரியார் வரலாற்றை முறையின்றி நூலி யாத்து முடிப்பதியாதுகருதியோ வெனின், வடமொழியாளர்தங் கொள்கையைப் பின்பற்றிய மடமை வழியே போலும். அம் மொழியின் கண்ணேயே புதுவது புனைந்த பொய்க்கதைகளும். உள்ளதை யில்லாதாகவும் இல்லதை யுள்ளதாகவுங் கூறும் புரா ணக் கதைகளும் மலிந்திருத்தலின், அன்னவை கேட்டுப் பயின் றுறைத்தவுறைப்பே தமிழ்மக்களிடையும் தமிழ் மொழியிடத்தும் தாவிப்படர்ந்து தன்னகப்படுத்தியது. இங்ஙன மம்மொழிக்குக் கொழுகொம்பாயின கொடுமையானன்றோ வழுவுடை மொழி களும் வழுவில் மொழிகளாகக் கொள்ளக்கிடக்கின்றன.

முதன் முதலில், 'ஒரு பெரியார் வரலாற்றை யொருவர் தெரிக்கப் புகுவான் றொடங்கின், வடநூலார் புனைந்துரை வகை யான் பல்வகையணிகள் கொடு நூல்களியாத் துலகினை மருட்டு மரபினை மேற்கொண்டோ, அன்றிப் பிறநெறி மேற்கொண்டோ தனித்தமிழ் மொழியின்கண் நூல்களைக்கட்டி வாய்க்கு வந்தவா பறை யறைவாராயினர். இத்தகையாளர்தங் கோளை மெய்த்தகை யெனக் கருதித் திரிபுணர்ச்சி யெய்துவர் சில்லோர். வடநூலில்,

அணிகளும், அளவைகளும், சுவைகளும், பிறவும் கடல்போற் கிடக்கின்றன; தமிழ்மொழியின்கணியாவையுள? வென மொழியின் பெற்றியைப் பற்றிச் சிறிதுமாராயதுளறுபடை செய்வர் சில்லோர். அன்னவர் கோளு மின்னுஞ் சின்னுளி லிருந்த விடந் தெரியாது கரந்துறைந்து மடிதலு மொருதலையே.

அவையெலா மொருபுறங் கிடக்க, இவ்வடிகள் வரலாறுய்வதற்காக வெடுத்துக்கொள்ளப்பட்டன—முருகதாசர் பாடிய குமாரகுருபாசாமி புராணமும், மீனுட்சிசுந்தரம் பிள்ளை பாடிய குமரகுருபர சுவாமிகள் சரித்திரமும், சரித்திரசார பஞ்சகமும் ஆகிய மூன்றுமேயாம். இம்மூன்றற்குமே விதுகாறு முறை நடை கண்டு தெரித்தாம்.

அவற்றுள், அடிகள் வரலாற்றொடு முரணுறுவனவு முரணுறுதன்வும் யாவை யென்பதும், அக்கொள்கைகடாமும், எக்கொள்கையைப் பின்பற்றி யெழுந்தெழுதப்பட்டன வென்பதும், அப்பெரியார் யார் காலத்தவரென்பதும், அவர் கண்டனவாக விண்டனவனைத்தும் உண்மையோ வன்றே வென்பதும் பிறவுமே ஈண்டுக் குறிக்கத் தக்கன.

மேல் சிறப்புப்பாயிர முதலாய கொடு, ஆராய்வு முற்றும் என்றும். அதுகருதி யிவ்வடிகள் காலத்தியற்றப்பட்டதாயுள்ள சிறப்புப் பாயிரத்தை யொருவாறுய்வாம்.

"திருமக ளகலாப் பரமவை குந்த
நன்னக ருதித்த செந்நெறிக் குரிசில்
ஐந்தெனும் பருவம் வந்துறு மளவும்
மழக்குண மொருவி மிழற்றிடாச் செம்மல்
செந்திலம் பதிவாழ் கந்தன தருளால்
ஓதாதுணர்ந்த போதனுய் முன்னர்க்
கலிவெண் பாவெனு மொலிபெறு மலங்கல்
குகன்றிரு முடிதனக் குகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி
மாலையீ ருகச் சால்பமை பிரபந்தம்

முந்நான் கியற்றித் தன்னுஞ் சமய
நிலையையுங் காட்டி யுலைவிலா தியாரும்
திதெலா மொருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலும்
இயற்றினன் இல்லறந் தியக்குறு நிலையென
இளமையிற் றுறந்து வளமைசேர் தருமை
மாசிலா மணியெனுந் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற் புதகுண குமர
குருபர னெனும்பெயர் மருவிய முனியே''

என்பது பாயிரம்.

இப்பாயிரத்தான், ஆக்கியோன் பெயர் முதலியன வெளிப்படையாயுங் குறிப்பாயும் பெறப்படுகின்றன. இந்நூலாசிரியர், இயற்றியதாயுள்ள மீனுட்சியம்மை குறத்தின்கண்,

"நீர்வாழி தென்மதுரை நின்மலனு ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே''

என்று கூறியிருப்பதனல் திருமலைநாயகர் என்னும் அரயன் காலத்திலிருந்த புலவர் எனற் கியாதொரு தட்டுமின்றும். அன்னவரை யீண்டுச் சிறப்பித்துரைத்தற் கியைபு, நூலாராய்ச்சிக்கணெடுத்துரைக்குதும். நீதிநெறிவிளக்கமெனுஞ் சீரிய நூலினையம்மன்னவர் பொருட்டாலாக்கினர் என்றனர், சரித்திரசாரபஞ்சகஞ்செய்தார். ஈண்டொரு வினு நிகழ்தற்கிடனுண்டு. என்னை? சிலரீட்டிய வரலாற்றின் சுருக்கமன்றே சாரமென்பது. அதனையொரு நூலாக்கொண்டாய்த லொண்ணுமோ வெனின், மாறுபாடு காணப்படுமாயின் கொள்ளற்கியாதொரு தடையு மின்றும் என்க. பாயிரம் பகர்ந்தார், 'உலைவிலாதியாரும் தீதெலாமொருவி நீதியே புரிய' நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவல் இயற்றியனர் என்கின்றனர்.

திருவள்ளுவர் பொருட்பாலில் அரசியலில் கல்விப்பொருளைத் தெரித்தோதியதுபோல் இவ்வாசிரியரும் அரயன் நீதிநெறியி னிற்பின் அரய னனைவர்க்குந் தெய்வமாகலின், அரயன் வழி நிற்பார் அச்செந்நெறிபற்றி நன்மை நாடுவரெனக் கருதியே மன்னன்பொருட்டு இந்நூல் கண்டனர் எனக் கருதினர் போலும், சரித்திரசாரபஞ்சககாரர்.

பாயிரத்தின்கண், வைகுந்தமெனு நகர்தனில் தோன்றின வர் எனக் குறிக்கப்பட்டுளது. ஏனைய நூல்களில் கைலாய புரத்திற்றோன்றினவர் எனக் குறிக்கப்பட்டுளது. பாயிரஞ் சொற்றது அவர் காலத்ததாகவே கொள்ளப்படுமாயின், ஏனைய வாசியர் கூற்று, வாரம்பற்றிய துணிவில் கூற்றேயாமென்க.

'செந்நெறிக் குரிசில், ஐந்தெனும் பருவம் வந்துறுமளவும், மழக்கண்மொருவி மிழற்றிடாச் செம்மல், செந்திலம்பதிவாழ் கந்தனதருளால்' ஓதா துணர்ந்த போதன்' என்ற வடிகளான் புலப்படுவதியாதோவெனின், இருமுது குரவரும் முருகனதடிகளை முன்னிய பெரியா ரென்றும், அம்முருகனருளாலேயே கிடைக்கப் பெற்றவரிப் பெருமானுரென்பதும், அவனருளாலெய்தப்பெற்றவர் பேசப்பெறாமையான், தாய் தந்தையர் மனமறுகினராய் வைகுந்த நகர் விட்டகன்று, செந்திலம்பதி போந்து கந்தனடிகளை வணங்கி வழிபட, அவனருளாலே யவன்றுள் வணங்கும் பேறு கிட்டி, யோதாதுணர்ந்த அறிஞராயினர் என்பதும் ஆகிய என்றித் தொடக்கத்தனவாம்.

தாய் தந்தையர் பெயர், சிவகாமி யம்மையார், சண்முகாசிகா மணிக் கவியரசினர் என்பது புலப்பட்டிலது. ஆனுல், அறுமுகவன் நறும்மலரடிகளை வழிபாடாற்றிவரும் மரபினரென்பதும், தந்தை யறிவு மகனறிவு, குலவிச்சை கல்லாமற் பாகம் படும் எனும் பெருமொழிக்கிலக்கான விப்பெரியாரை யீன்ற தந்தையார் பாவல ராய் இருக்கலாம் என்பதும் குறிப்பிற்போதரும் என்க.

தொடரும்.

உ

# துயரம்.

நமது சங்கத்தின் அன்பருள் ஒருவரும், தமிழ்ப் பண்டிதரும் நிலக்கிழவரும் ஆகிய விண்ணமங்கலம் தண்டாயுத பாணிக் காடவராயரவர்கள் மண்ணக நீத்து விண்ணக மெய்திய செய்தி, அவர்தம் அன்பரும் சுற்றத்தாருமாகிய எண்ணிறந்தோரைத் திடுக்குறச்செய்து துயர்க்கடலில் ஆழ்த்தியது. இவர், உறுதியான தமிழ்க் கல்வியும், உரைக்குந்தொறும் எழுதுந்தொறும் மிளிரும் இருபொருட் சொல் நயத்திறனும், மாணவர்க்கு இலக்கண இலக்கியங்களை இனிது எடுத்துரைக்கும் ஆற்றலும், அவையஞ்சாது அரிய விரிவுரைகளெடுத்துரைக்கும் திண்மையும், இனிய பொருளமைதி கனிய விரைந்து செய்யுளியற்றும் பாவன்மையும் உடையவர். நட்பிற் குறுதுணையாயவர். நமது சங்கத்தின் திருவிழா முதலாய சிறப்புக்கட்கு வேண்டுங்காலமெலாம் வந்து விரிவுரையியற்றல் முதலாய தமிழ்த்தொண்டுகள் செய்து வந்தவர். அந்தோ!. இவர் தம் மகனார் திரு. இராமையாக் காடவராயர்க்கும் சுற்றத்தார்க்கும் நமது சங்கத்தின் துயரினைத் தெரிவிக்கின்றோம்.

மண்ண மங்கலம் மன்னவும் மாசுடை
விண்ண மங்கலம் மேவவும் ஏகினை.
விண்ண மங்கலம் மேவிய நாவலோய்!
எண்ண மங்கலம் எய்தினம் யாமரோ.

R. வேங்கடாசலம்,
சங்க அமைச்சர்.

உ

தமிழ்த்தாய் வாழ்க.

# வரனென்னும் வைப்பு.

(ஓர் ஆங்கில நூலிற்கண்டபடி.)

திருவாளர், ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், காரை.

உடம்பொடு கலந்து தோன்றும் உயிர்த்தொகையுட் சிறப்புடையவென உயர்ந்தோரான் உணர்த்தப்பெறும் மக்களுயிர்க்கு உறுதிப்பொருளெனப் பெரியோர் வகுத்துக் கூறும் நால்வகைப் பொருள்களுள் வீடென்பதும் ஒன்று. அது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து எனப் பெரியோர் கூறுவர். கூறினும், அது இவ்வுலகம் போல் அழிதன்மாலைத்தாய இன்பத்தினைத் தராது, எஞ்ஞான்றும் குன்றா வின்பம் தரும் பேருலகமெனவும், அதனை நாடியே உயிர்கள் நிற்றல் வேண்டுமெனவும் நம் ஆன்றோர் கூறுவதனோடு அமையாது, அவ்வுலகநாட்டம் உயிர்கட்கு இயற்கையிலே அமைந்துள தென்றும், அது, ஆயும் உணர்வுடையார்க்கே புலனாமென்றும் கூறினர்; கூறுகின்றனர். அக்கூற்றினை ஒருவாறு ஆராய்ந்து கண்ட வழியே, ஈண்டுக் கூறப்பெறுகின்றது.

புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து, சவியுறத் தெளிந்து, தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச் சான்றோர் கவியெனக் கிடந்த கான்யாறொன்றின் அடைகரையின்கண், வெயினுழைபறியாக் குயினுழை பொதும்பரொன்றிருந்தது. அதன்கண் எண்ணிறந்த புள்ளினம், மண்ணுறு வாழ்க்கைக்கு மாண்புறுத்தும் செவிச்சுவையமுதம் கேட்போர் செவிப்புலம் வளம்பெற ஆளித்து வாழ்தர, அவ்வினத்துளொன்றுய இன்னிசைச்

*செம்புளொன்று பெடையுடன் கிளைமல்க அவ் வடைசினைப் பொதும்பருள், பெற்றதுகொண்டு, பொறம் நேர்ந்து, பெறலரும் இன்பமே துய்த்து வந்தது. அதனால், அது, எங்கெழிலென் ஞாயிறு என்னும்- இறைவனருளா லெய்தும்- நெஞ்சிறுமாப்பும், பழியஞ்சி யீட்டும் பொருளின்பமுடைமையின், வழியெஞ்சா வான்பொருளும் உடையதாயிற்று. ஆகவே, அதற்கு இனி வேண்டற்பால தென்னாம்? ஒன்றுமில்லை யன்றோ!

நிற்க, ஒருநாள், இச் செம்புள்ளின் வாழ்க்கைத்துணையாய், ஒத்தவுணர்வும் பான்மையு முடையதாய் துணைச்சேவற்கு ஒரு வாற்றானு முயர்வுதாழ்வில்லாக் கவினுங் காட்சியு முடையதாய் விளங்கிய பெடைப்புள், தன் கூட்டகத் தமர்ந்து, பார்ப்புக்கட்கு உணவாவனவற்றை யளித்து உவந்திருக்கையில், பகல்செய்யும் செஞ்ஞாயிறு பாவைபிற் படிய, பைய இருள் வந்து பாவ, இன் பத்தென்கால் இடைவந்துலவ, அருகோடிய அருவிக்கணெழுந்த சிறுதிரை பொருதுவீழ்தலின் எழுந்த விழுமிய வோசை யாங் கணும் பாவ, விரிகதிர்மதியம் விண்ணகத் தெழுந்து, மண்ணக மடந்தையின் மயக்கொழிப்பதுபோலத் தன் ஒண்கதிர் பரப்பிற்று. அது காலை, அப் பார்ப்புக்களு ளொன்று, தன் சிறுதலையை நீட்டி, அன்புகனியும் ஆய்முக நோக்கி, "அன்னாய்! வாழி! நம் படப்பைத் தேன்மயங்கு பாலினும் இனிய இத் தெண்ணீர் யாறு செல்லிடம் யாதுகொல்" என வினவ; கேட்ட தாய்ப்புள், விடையறியாமையின், விளம்பல் கூடாது, குறுநகை காட்டி, "மக்காள்! யான் அறியேன்; 'கலின்' எனக் கலிக்கும் தூக்கணங் குருவியையாதல், கட்புலங்கதுவா விட்புலம் படரும் வானம்பாடியை யாதல் கேட்டல் வேண்டும். ஆண்டுத் தோன்றும் கோட்டெங்கின் குலைமீது அவை ஒருகால் வந்தமரினும் அமரும். அதுபோழ்து நீவிர் மறவற்க. நீவிர் கேட்டதும், அதனோரன்ன பிறவும் அறிதலாம்" என்று கூறி, வானம்பாடியின் வள்ளிசையைத் தன் மென்குரலால், வடித்தும் உந்தியும் உறழ்ந்தும் இசைப்ப, குரீஇக்குஞ்சுகள் குளிர்ப்பெய்தி, "வானம்பாடிகொல் இக் கானம் பாடியது" என்றெண்ணலாயின.

* இதனைச் செம்பகம் என்றும் வழங்குப.

மற்று, அவ் வானம்பாடும் வண்குருகு, தன் மெல்லிசை கொண்டு, காடும், காவும், கவின்பெறு திருத்தியும், யாறும் குளனும், வேறுபல் வைப்பும், ஊரும் நகரமும் உறைதரும் இல்லமும், ஊறுசெய் விலங்கும், ஊனூண் வேட்டுவர் விரிக்கும் கண்ணியும், பிறவும் மெய்பெற விசைத்தல் மரபு. அதனை யொரு காலேனும் அருகமர்ந்து நன்கு கேட்டறியா இச் செம்புள், பாடுங்கால், அவ் விசைப்பொருள் முறையிற் சிறிது பிறழ்தலும் குறைதலுமாயின. இழுக்குடைய பாட்டாயினும், இசை நன்றாயினமை கொண்டு பேருவகை மீதூரத் தாமும், தம் அன்னை யொப்ப, மெல்லிசை மிழற்றல் தொடங்கின. இங்ஙனம் குரவராயினர் செய்யும் செய்வினையை மக்களாயினர், நுணுகி நோக்கி, அம்முறையே செய்தல் உயிர்த்தொகையுட் சிறந்து விளங்கும் இயல்புகள் பலவினுளொன்று. இதுவே, ஏனை யறிவுவளர்ச்சிக்கும் பிறவற்றிற்கும் ஒருதலையாக வமைந்த அடிப்படை யென்பது கல்வியாளர் கோள். இதனை யீண்டுரைப்பிற் பெருகும்.

வெள்ளி முளைத்தது; விடியல் வந்தது; பறவை பாடின; பல்லுயிரும் பரவுக்கடன் செய்தன; விழுந்த ஞாயிறும் எழுந்தது; மென்காற்று வீசலுற்றது; பூநான்கும் பொதுளி வெறி திசைநான்கும் போய்உலவ, சுரும்பு தேனுூர்ந்தன. சேக்கையுளுறங்கிக்கிடந்த செம்புட்குஞ்சுகள், உறக்க நீங்கி, ஒருபுடை வந்து, உவகை கூர்ந்தன. அதுபோது, தாய்ப்புள், தன் செல்வச் சிறு குஞ்சுகளின் மருங்கமர்ந்து, தன் மெல்லிசையைத் தொடுத்து, யாற்றுநீர்ச்செலவின்மேற் பாடிற்று. அக்காலை கரையாக் கல்லும் புல்லும் கனிந்துருகின. சுருங்கக்கூறின், அவ் விசை யின்பத்தால்,

> "மருவியகால் விசைத்தசையா; மரங்கள்மலர்ச் சினைசலியா;
> கருவரைவீழ் அருவிகளும் கான்யாறும் கலித்தோடா;
> பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்ந்தொழியப் புனல்சோரா;
> இருவிசும்பின் இடைமுழங்கா; எழுகடலும் இடைதுளும்பா"

எனுந் தீங்கவியே அமையும்.

இங்ஙனம் சிறந்தோங்கிய இசையொன்றில், அப் புள் வீறுற்றதே யொழிய, அதனுளத்தில், சிறுகுஞ்சு வினவிய பொருள்மாத்திரம் புலனாயிற்றன்று. ஆயினும் தானும் தன்பார்ப்புக்களும் ஒருபகல் அவ்யாறு செல்லிடம் சேறல்வேண்டு மென்னும் திப்பிய வுணர்வொன்று அதன் நெஞ்சத் தகலாது நிலவுவதாயிற்று. இவ்வாறு நாட்கள் பல சென்றன. அப் புள்ளும் யாற்றுநீர்ச்செலவு பொருளாகப் பாடி வந்தமையை நீக்கிப் பிறிதோர் இடமொன்றனை நாடிப் பாடுதல் தொடங்கிற்று. அக்காலை அவ்விடமே, இவ்யாறு செல்லிடமாம் என்பது அதற்குத் துணிபாயிற்று. இவ்விடத்தைக் கேட்குந்தொறும் அப் பார்ப்புக்களும் தம் தாய்ப்பறவையை, அதனைக் குறித்த வினாக்கள் பல நிகழ்த்தாது ஒழிவதின்று.

நிற்க, இவ்விடம் யாதாக விருக்கலாம்? சிலர் இதனை நாம் யாண்டிருந்து போந்தோமோ ஆண்டையது என்பர். வேறு சிலர் நாம் இனிச் செல்லுமிடம் யாது அது வென்பர். சிலர், இத்தகைய இடமே இல்லை யென்பர். வேறுபலர் நாமும் பிறவும் நீங்கியதும், நீக்கமற இனிச் சேருவது மாய இடம் என்பர். இதுபற்றிக் கூறற்பாலன ஒருவாறு கோடற்பால வல்ல வென்பது காட்சி யொன்றையே அளவையாக் கொள்வார் துணிபு. மற்று, நாம் காண்டல், கருதல், உரை யென்னு மூன்றையும் அளவையாக் கொள்ளும் பான்மையே மாகலானும், அவற்றா ராயுங் காலத்து, உளத்திற் றோன்றும் சில வுணர்வுகளும், உணர்ந்தோர் பலர் கூறிய உரைகளும் அப்பெற்றித்தாய இடமொன் றுண்டென்பதனை வலியுறுத்துகின்றன. ஆயினும், அதனை ஒருவாறு நாம் காண்டற்குமுன் அறியாவுலகம் என வழங்குவோம். * முதனூலாரும் இவ்வாறே வழங்குகின்றார். அன்றியும், இவ்வுலகைப் பற்றி, இருண்ட வுணர்வுகளே அப் பறவையின் உணர்வுட் கலந்து கிடந்தன.

இனி, அத் தாய்ப்புள், தானே தனித்தமர்ந்து, அவ்வுலகு பற்றிய வுணர்வுகள் தன் மனத்தெழுந்தோறும், இசைத்துக் குளிர்ந்து நாவில் ஊறுத அமிழ்தூற, உடல் புளகித்து உள்ள

* "I may call it the Unknown Land."

மெல்லாம் உருகிக் களிக்கும். இக் களியாட்டினைப் பின்னர் அது, தன் பார்ப்புக்கள் காணவும் கேட்கவும் செய்தயர்தல் தொடங்கிற்று. இங்ஙனம் செய்தற்குக் காரணம் யாதாகும்? அப் பார்ப்புக்களும் இதனைத் தொடர்வனவல்லவோ? அவற்றிற்கும் அவ்வுலக வுணர்வினை யுணர்த்தல் வேண்டுமன்றோ? அது போலும் காரணம்!

இவ் வண்ணம் நாட்கள் சில சென்றன. ஒருநாள் அக் குஞ்சுகளு ளொன்று, ஆய்முகநோக்கி, அவ் வுலகு யாண்டுள தென்று கேட்ப, அது, "அவ்வுலகம் உண்டென்பது உண்மை; மற்று, யான் அஃது உறுமிடம் அறியேன். ஆகலின், அவ் விடத்தை யான் கூறுதல் கூடாது" என்றது. என்றலும், அவற்றுட் டலைக் குஞ்சு முன்னின்று, "இவ் யாறு செல்லுமிடம் யாது, அது அவ் அறியாவுலகம்!" என்றது.—இது உண்மை கொல்? அன்று. அவ் யாறு, மறுவில்மானவர் மலிந்த மூதூர் வெறிது சேறல் விழுப்பமதன்றென மலைபடுபொருளும் கான்படு செல்வமும் தலைமணந்துகொண்டு, பெருநக ரடைந்து, கால்வழிச் சென்று, வயலிடைப் படர்ந்து, அதன்கண் விளையும் பைங்கூழ் வளர்த்து, வணிகர் மாக்கலம் அணிபெற மிதப்ப, மங்கையர் குடைந்து மாணலம் புனைய, புரிநூல்மார்பர் அருங்கடனாற்ற, மீனுண்குருகும், தூண்டில்வேட்டுவரும், திண்டிமில்வாழ்நரும் செல்வம் மீக்கொளப் பரந்து சென்று, கோனோக்கி வாழுங் குடி யனைத்தும் வானோக்கலின், அதற் கின்றியமையாப் பெருமழை பிறக்கும் பெருந்திரைப் புணரியைப் புணரும்! இப்புணரியோ அறியா உலகெனப்படுவது! பகலின் பான்மையும் இரவின் எழிலும் புள்ளினத்துக் கொருபொலிவும் மாவினத்துக்கொருமாண்பும் வயங்கத் தருவனவாக, இவையனைத்தும் தந்த வொருவன், இவை செல்லிடமொன்றைச் செய்யாது விடுவனோ?

இதுநிற்க, "அன்னாய்! அறியாவுலகின் அழகினைக் கூறுவதால் ஆகும்பயன் யாதுகொல்! அதனைப் பலகாலும் பாடிப் புகழ்தல் எற்றுக்கு?" என்று தொடங்கிய ஒரு குறும்புள், "தேனூற்றெடுப்ப மணநாறும் பூம்பொழிலகத்தைவிட்டு நாம்

வேறிடம் சேறல் என்னே? மென்றளிரும் நறுமலரும் மிகைபடச் செறிந்த கூடொன்ருக்கி, நாம் என் என்றும் ஈண்டே வாழ்தல் கூடாது? வான்குயில்க ளிசைபாட வரிவண்டு பாண்மிழற்ற, மான்கன்று வயின்றுள்ள, பல்லுயிரும் பொலிவெய்த விளங்கும் இவ்விளமரக்காவினும் இனிதுகொல் அவ் அறியாவுலகம்? ஆருயி ரன்னுய்! நாம் வேறிடஞ்சேறல் வேண்டா. இதுபோது, சிந்தாமணி தெண்கடலமிர்தம் தில்லையானருளால் வந்தா லிகழப் படுமே! முயற்சியின்றியே பெரும் பயன் எய்துதற்குரிய இடம் அதுவாயினும், யான் இவ்விடம் விட்டுப் பெயரேன். ஒழிக இனி வேறுபுலஞ் சேறல். பைந்தாட் கோரையும், பசிய தளிர்நிறைந்த புதலும் மிக்க இவ் வடைகரையினும் இனிதுகொல் அவ் அறியா வுலகம்! ஆகலின், அன்னுய்! இனிப் பாடுதலொழிக! பாடுதற்கு உளம் ஒருப்படுதலும் ஒழிக !!" என்றது.

பின்னர் அத்தாய்ப்புள், தன்மனத்துப் பலவேறுவகைப்பட்ட எண்ணங்கள் படர்ந்தெழுந் தடங்க, வெய்துயிர்த்து, வேறுகூறு தொழிய, மற்றொரு சிறுகுருகு கூறும். அது, "இறுத்த இருள் கெட, யாண்டும் இளங்காலும், இன்னொலியும் எழ, பொன் னுருக்கென்ன இளவெயில் பரப்பி, விடியலிற் கீழ்கடலின் முகட்டெழும் இளஞாயிற்றினைக் காணுய்! தெண்ணீரின் திரை யிடை, அச்செஞ்ஞாயிற்றின் செங்கதிர்கள் தவழ்தலும், ஆண்டுப் பல் வண்ணங்கள் தோன்றி மிளிர்தல் காணுய்! வரிக்கண்டையும் பருவராலும் நண்பகலொளியில் மின்செய்து மறைதலும், இளந் தளிர்கள் ஒளிதெறித்தலும் பிறவும் காணுய்! தண்டென்றல் தளிரசைப்ப, பார்ப்புக்கள் கிளைபடர்ந்து இசைபாட, புதுமலரின் மணம் பாவ, காலையணிந்து பகலெல்லாம் ஒளியின்றிருந்த கவின னைத்தும், மாலையிற் றுவா முடித்துத் தோன்றும் இயலணங்கின் எழிற் செவ்வியை மறத்தலும் கூடுமா? ஈண்டாயினும், ஆண்டா யினும், யாண்டாயினும் அமர்க. வெண்மதியின் தண்கதிர்கள் பைந்தழைகளின்மீது பாவி, கலித்தோடும் அருவிநீரில் ஆடல் பயின்று, பூங்காவை வானமாக்கி, கான்யாற்றை, அத்திங்கட் புத்தே ளூர்ந்து செல்லுந் தேர்வழியாக்க, விளங்கும் இரவுப் பொலிவை நினைத்தொறும் நெஞ்சம் வேருேரிடத்தையும் நினைக்குங்

கொல்! திண்கலமும் சிறுநாவாயும் செல்வுழிச்செல்வுழி யெழும் ஓய்யெனும்ஓசை நம் உறக்கம் கெடுப்ப, நெடுந்தருவின் பைங்கிளை படர்ந்து பாடலை நம் இனம் பயில, இன்பக்காட்சியே யாண்டும் இலங்கும் இந் நிலத்தினும் அவ் அறியாநிலம் அழகுடைத்தோ?

" துஞ்சுவது போல இருளி, விண்பக
இமைப்பது போல மின்னி, உறைக்கொண்(டு)
ஏறுவது போலப் பாடுசிறந்(து) உரைஇ
நிலநெஞ்(சு) உட்க ஓவாது சிலைத்தாங்(கு)
ஆர்தளி பொழிந்த வார்பெயற் கடைநாள் "

நாம் நம் படையமை சேக்கையைப் படர்ந்து, ஒன்றோடொன்று புல்லி இருக்கின் கார்செய்பனிப்பும் கலங்குதுயர் செய்யாதாக, எழுந்த வெம்மையால் இன்பம் மிகும் இவ் விரும் பொழிலினும், நீ கூறும் அப்பூம் பொழில் ஏற்றமுடைத்தாமோ? ஆதலின், அன்னாய்! வேறுபுலம் முன்னுதலை விட்டொழித்து, இப்புலம் பற்றிய இன்னிசையே மிழற்றுதி!" என்பது.

பின்னர், அத்தாயாய செம்புள், இங்ஙனங்கூறிய தன் செல்வக்குஞ்சின் பெருஞ்சொற்களைக் கேட்டு, ஒருவாறு, உளத்தைத் திருத்தி, "செல்வங்காள்! இனி நீவிர் விரும்பிய வண்ணமே வேறொரு பாட்டே பாடுவல். போற்றிக் கேண்மின் என்று ஒரு மெல்லிசை, பொருள் செறியப் பாடுதல் தொடங்கிற்று. அப் பொருள்:

"பரந்த உலகிடைத் தோன்றிய யாவும் தன் பொறிபுலன்களின்வழியே மனத்திற்குக் குன்றாவின்பமும், அச்சமறியாவியல்பும் நல்கத் தான் பெற்றுவாழ்ந்தமையும், அவ் வாழ்க்கையில் நாட்பல செல்ல, தனக்கு உள்ளிருந்தே, 'இஃது நின்னிடமன்று' என வோர்பொருண்மொழி யெழுந்தினசத்தமையும்; அம்மொழி, பின் பலமுறையும் இசைப்பக் கேட்ட தான், ஒருகால் உவகையும், ஒருகால் வெறுப்பும், பல்காலும் கேட்டற்கொருப்படாது சேறலும் கொண்டிருந்தமையும்; இருக்கையில், தான் வாழுமிடமே மேதக்க இடமாவது, அதனை நீங்குதல் அறவே கூடாது என்னும்

உவகையுணர்வு தோன்றி னமையும்; பின்னர்த் தன் மனக்கினிய துணைப்பறவை போதந்து, காதல் செய்து களித்துக் கலந்தமை யும்; அதுகாலை, அம்மொழிப் பொருள் பன்முறையும் எழுந்து, ஊன்கலந்து, உடல்கலந்து, உயிர்கலந்து, பின்னர் உணர்வுங் கலந்து ஒரோவோசையாய் உருவெங்குங் கலந்துநின்றமையும்; அக்கலப்பே, தன் துணைப்புள்ளிற்கும் நிகழ, இரண்டும் உளங் கலந்து இக்கான்யாற் றடைகரை யடைந்து, சிற்றிற் சமைத்துச் செவ்விய வாழ்க்கை நடாத்தி வந்தமையும் பிறவுமாம்.

இதனைக்கேட்ட பார்ப்பினுள் ஒன்று, "அற்றேல், அன்னாய்! நீ பண்டே யிருந்த இடம் யாண்டையது? அருகுளதாயின், யாம் அனைவரும் ஆண்டே படர்ந்து, இன்பந்துய்த்து இனிது வாழலாமே!" என்றது. எனவும், தாய்ப்புள் உளங்கலங்கி, ஆருயிர்ச் செல்வமே! அதனை யெங்குளதென்பேன்! அறியா வுலக மென்பேனோ! அன்றி மிகமிகச் சேய்மையிலுள்ளதோர் விண்ணிடம் என்பேனோ யாது கூறுவேன்! யான் அறியேன். ஆயினும், அன்றெழுந் திசைத்த பொருண்மொழி இன்று மெழுந்து ஈர்கின்றது. அது அன்றிட்ட ஆணையை மேற்கொண் டடங்கிய யான் இன்று விடுத்தல் கூடுமோ? அயராவின்பத்திற் றிளைத்திருந்த அன்றே அவ்வாணையை யேற்றயான், இளமையும், அதனானும் இன்பமும் இழந்த இந்நிலையிற் கொள்ளாதொழிதல் முறையோ? ஆகவே, என் அருமைச் செல்வங்களே! அவ் அறியாவுலகம் யாண்டமைந்திருப்பினும் இருக்க. நாம் அனை வரும் அதனைநோக்கிச் செல்வம். வம்மின்!! யான் கூறுவது உண்மையே என்னும் உறுதிநோக்கங் (Faith) கொண்டு ஒருப்படு மின்" என்றது.

என்றலும், "நீயும் எம்மொடு வருதியன்றே. ஆயின், யான் இன்னே வருவல்" என்று மிகச்சிறியதோர் பார்ப்பு விளம்பித் தன் தாயிசைத்த தனியிசையிற் றானுங் கலந்து பாடல் தொடங் கிற்று.

இன்னணம், சொல்லாடலாலும் இசையாலும் பொழுது கழிய, 'வெஞ்சுடர் வெப்பந் தீரத் தண்ணறுஞ்சோலை தாழ்ந்து

நிழற்செய்யவும், தண்புதம்பட்ட தெண்கழி மேய்ந்து பல்வேறு வகைப்பட்ட புள்ளெல்லாம் குடம்பை நோக்கி உடங்குபெயரவும், புன்னைமுதலிய பூவினாற்றம் முன்னின்று கஞற்றவும், நெடுந்திரை யுழுவத்து நிலாக்கதிர் பரப்பவும்' மாலை வந்தது. வரக்கண்ட தாய்ப்புள், தன் பார்ப்புக்களைத் தமித்துவிட்டு இரைதேடுவான் சென்றிருப்ப, அவற்றுளொன்று அண்மையிலோடிய அருவியின் மருங்குநின்ற புதற்கணமர்ந்து, அருவியின் கலிப்பும், அடைசினை யசைதலி னெழு மார்ப்பும் கேட்டலும் களிமீக்கூர்ந்து, அங்கு மிங்கு மோடியோடித் தன் னல்லிசை கொண்டு இன்னிசை மிழற்றத் தொடங்கிற்று. அக்காலை அது இசைக்க முயன்ற இசைகள் பலவும் இயைபுபடாதொழிய, இறுதியிற் றன் றாய் பாடிய அறியாவுலகவிசையை இயக்கிப்பார்க்க, அது நன்கனம் கைவரவுவந்து அதனையே எடுத்தும் படுத்தும் இனிது பாடிக் கொண்டிருந்தது.

"ஆ! யாழோ! குழலோ!! இன்றேன் பெருக்கோ!!! என்பெலாம் உருக்கும் இன்னிசை மிழற்றவல்லது யாதுகொல்! ஆ! தருக்களும் சலியா; முந்நீர்ச் சலதியும் கலியா; நீண்ட பொருப்பினின்றும் இழியும் அருவிக்காலும் நதிகளும் புரண்டு துள்ளா; எப்பொருளையும் தன்வயமாக்கி, உள்நிறை யுயிரும் மெய்யும் உருக்குகின்றதே!" எனப் புகழ்வது போலும் இழித் தக்க கூறிக்கொண்டே புறவமொன்று ஆண்டு அதனருகே வந்தது. இது புறங்குன்றி கண்டனையதேனும் மூக்கிற் கருமையு முடைத்து; அன்றியும் ஒண்மை யுடையம் யாம் என்னும் வெண்மை தலை சிறந்தது. எக்குடிகெடுக்கவோ, எதனலம் தூற்றவோ ஈண்டு இஃது வந்துளது. இதனியல்பறியாச் சிறுசெம்புள், தான் கேட்ட இதன் பொய்யுறு புகழ்ச்சியை மெய்யுறு புகழ்ச்சியென் றெண்ணி, பெரிதும் முயன்றுபாடலும், இம்மடப்புறவம், தன் சிறுதலையைப் பையத்துளக்கி, "நன்று, நன்று, யானும் பல விடங்கட்குச் சென்றுளேன். பல இன்னிசைகளாற் றேட்கப் பெற்றுமுளேன். ஒருகால், மக்களகத்துப் போற்றி வளர்க்கப் பெறும் பேறும் பெற்றுளேன். எனவே, இசைநலங் காண்டலிற்

சிறந்த வன்மை பெற்றுளேன் என்பது நன்கு தோன்றும். யானறிந்தவளவில், ஆணையிட்டுக் கூறுவேன், நின்னொப்பார் நல்லிசைவல்லார் மக்களினும் இலர். ஆயினும் ஒன்று, நின்னாற் பாடப்பெறும் பொருள்கள் யாவை? அவை யான் இது காறுங் கேட்டனவல்லவே !!" எனச் சிறிது சுளித்து வினவிற்று.

குறும்புள் :—ஆ! அவை யாவும் அறியாவுலகு பற்றியன.

புறவம் :—எவை? அறியா...

குறும்புள் :—அவை அறியா வுலகின் அழகு, இன்பம், வாழ்க்கையியல்பு, அதனையடையுமாறு முதலியவற்றைக் கூறுவன?

புறவம் :—(நகைத்து) அது அறியாவுலகாயிற்றே! அதனைப்பற்றி நீ அறிந்ததியாங்ஙனம்? அம்மம்ம! முற்றுக்காயெல்லாம் முழுத்த கேள்வி வல்லவாயிருக்கின்றன. காடும் செடியும் அவாவறுத்தல் மெய்யுணர்தல் முதலியன செய்கின்றனவே! மெய்யாக, யான் இவற்றை யறிதல் வேண்டும். மூத்து முதிர்ந்த முதுமை மிக்க யான், அவ்வுலகினை யறிந்து ஆவன செய்துகோடல் வேண்டுமே! நன்று! அறியாவுலகமென்று நீ கூறுவது யாது? யாண்டுளது? அருள்செய்து கூறுக.

குறும்புள் :—யான் அறியேன். (உணர்வுகலங்கி) ஒருநாள் நாங்கள் அவ்வுலகினுக்குச் சேறல்கூடும் என்பதை யன்றி வேறு ஒன்றும் யான் அறியேன்.

புறவம் :—நன்று. அறிந்தேன். பேதையோர் பேதையோர் என நூல்கள் கூறுகின்றன. அவர் யாவர், யாண்டுளர் என ஆய்ந்துகொண்டே வருதல் என் இயற்கை. அன்பே! இன்று கண்டேன். நின்மாட்டே அந்நூல்களின் கூற்று வாய்மையாதல் கண்டேன். நீயே அதற்குத் தக்க சான்று. ஆகவே, நீவிர் அறியாவுலகிற்குச் செல்லும் செலவு மேற்கொண் டுள்ளீர். ஆற்றுப்படை யின்றியே போலும்! அப்பெற்றித்தாய

செலவு நீர் நயந்தனி ராயின், நம் நன்னர் செஞ்சத்து இன்னசை வாய்ப்ப, முன்னிய யாவையும் இன்னே பெறுக !! யான் வருவல் என்று கூறிக் கொண்டே பறந்து சிறிது செல்ல, அக் குறும்புள், விருதுப்பட்டிக்கு விரைந்து போங் கலியைக் குறுக்கிட்டு உறுவிலை கொடுத்து வாங்கியாங்கு, "நிற்க! சிறிது தாழ்த்தல் வேண்டும். நன்று, தாங்கள் கூறியது யாது? என் அறிவு மயங்குகின்றது" என்றது.

புறவம் :—அறியாவுலகத்திற்கு அமைந்துள்ள நுந்தம் செலவு மேதக்கதே. ஆயினும், இடைப்பட்ட எனக்கும் உனக்குமே அச் செலவு செய்தற்கேற்ற நெறி தோன்றுது போலும்.

குறும்புள் :—ஓ, அதனை விடுக. அவ்வுலகுபற்றிய உம்முடைய கோள் யாது? அதனை யேனும் கூறுக.

புறவம் :—என்னை? எ தரும்பே! என்னையோ இகழ்கின்றனை. நன்று! உன்னொத்த சீரிய இசைப்புலமையும், நுட்பமும் திட்பமுமமைந்து அறிவுமுடைய எவ்வுயிரேனும் அறியாத ஒன்றின்மாட்டு வெறிதே நினைந்து சாம்புங்கொல்! வேண்டின், நீ நின்னையே கொள்ளலாம். உன்னைப்போல், வாளாது பொழுது கழிப்பதாயின் என்னையும் கொள்ளலாம். ஒன்று கூறுவேன்; யாவருக்கும் ஒல்லுவ தொல்லும் என்பதே சிறந்தது. மிகுத்துக் கூறல் மிக்க ஏதமே தரும்.

குறும்புள் :—அற்றேல், நீர் அவ் வறியாவுலகிற்குப் போகீர் போலும்!

புறவம் :—ஒருகாலும் இல்லை. முதற்கண், யானுறையு மிடம், முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும், வழங்கத் தவா வளப்பமும், விழைவு விடுத்த விழுமியோர்க்கும்

விழைவு தோற்றுவிக்கும் விழுப்பமும் வாய்ந்தது. ஆகலின் யான் வேறிடம் விரும்பேன். மேலும், பெற்றது கொண்டு பெறும் பேறே பேறெனப் படுவது. இரண்டாவதாக, கேட்கப்படுவன யாவும் வாய்மைய என எளிது ஆராயாது கொள்ளும் நம்மோரன்னோர் போலும் சிற்றறிவுடையேன் யானலன். அன்றியும், நீர் கூறும் உலகமொன்று உண்டென்பதையேனும் யான் எங்ஙனம் அறிவது?

குறும்புள்:—என்னை ஈன்றோர் எனக்கு அருளினர்.

புறவம்:—ஈன்றோர்களோ கூறினர்? அங்ஙனமா! அற்றேல், நீ மிகமிகச் சீரியதோர் பறவையே! நின் ஈன்றோர் கூறுவனவற்றைக் கூறியவாறே உளங்கொளும் நீர்மை வேண்டற்பாலதே! அவர்கள் ஒருபகல், நீ செஞ்ஞாயிற்றைச் சென்று சேர்ந்து வாழ்தலுங் கூடும் என்பராயின், நீ ஆமென்றே கொள்ளுவாய் போலும்!!

குறும்புள்:—(சீறியது போல்) ஈன்று புறந்தந்த என் குரவர் ஒருபொழுதேனும் என்னை வஞ்சித்ததின்றே!

புறவம்:—என்னே, யென்னே? வெகுளுவதென்னை? என்னை செய்தி? நின்பெற்றோர் நின்னை வஞ்சித்தனர்; வஞ்சர் என்று ஒருவரும் கூறிற்றிலரே! அவர், நின்னை வஞ்சித்திலராயின், ஒன்று கூறுவேன், அவர் பேதையரே. அன்றேல், பொருளறியாதாரே. நம்மோரன்னோர் மாட்டு ஒன்றுகூறல் விழைவோர், உண்மையில், உளநோய் கோடல் உலகியல். 'ஏவவும் செய்கலான், தான்தேறான், அவ்வுயிர் போஒமளவும் ஓர் நோய்.' நிற்க, அவர் கூற்று வஞ்சனையின்பாற் படுவதோ, பொருளறியாமையின்பாற் படுவதோ, நீயே ஆராய்க. உலகியலும் உண்மையறிவு மிலரோடு உள்ளோர் உரையாடல் ஒருவாற்றானும் ஒல்லாதாகலின், யான் சென்று வருவல். வாழ்க! வாழ்க!! (மறைகின்றது.)

இங்ஙனம் அம் மடப்புறவங் கூறிய சொற்களாற் றன் உண்மையறிவு கலக்கங் கொண்ட குறும்புள் ஒருவாறு தெளி தற்குள், அது கட்புலங் கடந்தது.

மறுபகல், வேனில் வெப்பமும், வெவ்விய காற்றும், இல வாக, தன் தன்மையிலோர் திரிபுண்மையைக் காட்டிற்று. நீனிற வானம் மானிறங் கொள்ளக் கொண்மூவினம் விண் மூடின. கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை வள்ளுறை சிதறித் தலைப் பெயல் பெய்ததாக, கரைபொரு திரங்கும் கான்யாறு வான் யாறொப்பப் பெருக்கிட்டோடி, குளிர்ப்பு மிகுதலும், உறைந்து பட, மாமேயல் மறந்தன ; மந்தி கூர்ந்தன ; பறவை படிவன வீழ்ந்தன ; கறவை கன்றுகோ ளொழிந்தன ; குடாவடி, உளியம் முதலியன பெருங்கல் விடரளையிற் செறிந்தன ; ஆமா நல்லேறு சிலைத்தன ; காற்றுற் றெறிதலால் மயிலினம் வீற்றுவீற் றோடின. இடம்பெற வமைந்த குடம்பைகள், பறவையும் பார்ப்பும் உறையு ளின்றொழிய, நிலம்பட வீழ்ந்தன. வரனெனும் வைப்பில் உரங் கொண்ட அன்பு பூண்ட செம்புள்ளின் சேக்கைமட்டில் ஊறொன் றின்றி இனிதிருந்தது. அதனுழை யிருந்த குஞ்சுகள் இவ் வினைத் துங் காண்டலும், பெருவியப்புற்று, பகலோன் கரந்தனன் ; பனி மிகுந்துளது என்கொல்! எனும் எண்ணந் தலைக்கொண் டிருப்ப, ஒன்று, "பெருவானம் விரிகதி ரின்றியும், முகிற்குலம் பரவப்பெற்றும் உளது! தெண்ணீர்யாறு மண்ணீர்மையுற்று அசைவின்றி யுளது! பகலவன் ஒளியே யின்றிப், பார்முற்றும் பசிய இருள் செறியப்பெற்றுளது! என்னோ!" என்றது.

மற்றும் ஒன்று :—நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை இவ்வுலகு உடைத்தன்றோ!

தாய்ப்புள் :—(நகைத்து) ஆம்! ஆயினும், விரிகதிர்ச்செல்வனை
நாம் நாளை காண்டல் கூடும். இஃ துண்மை! நிற்க,
இக்காலத்துப் பகற்பொழுது குன்றிவருதலை நீவிர்
அறிந்திலீர் போலும்! இன்றெழுந்த புயலே இப்பகற்

பொழுதினைக் குறைத்தது; ஆதலாற்றான், செஞ் ஞாயிற்றின் வெங்கதிரும், இம் முகில்வழி நுழைந்து வெயிலெறித்தல் கூடாது போயிற்று. இதுகிடக்க. இத் தலைப்பெயல் நம் குடம்பை முற்றும் ஈரஞ்செய்திற் றின்றாகலின், உள்ளே வம்மின் குளிர்ப்பு நீங்க; யான் அப் பெரும்பெயர்ச் செலவின்மேற் பாட் டொன்று பாடுகின்றேன். பேதையீர், நீவிர் இப் பகற் பொழுதே என்றும் காண்டல் கூடு மென நினைக் கின்றீர்கொல்லோ?

இந் நிலவுலகின் காட்சிநலனைத் தூக்கி யுரைத்த சிறுபுள் முன்போந்து, "அன்னாய்! யான், பண்டு, என்றும் காண்டல் கூடு மென்றே எண்ணினேன், நினைத்தேன்; மற்று, இன்றே யான் அதன்கண்ணும் திரிபுண்மை கண்டேன். ஆயினும் யான் அதற்கு இனி அஞ்சேன்! பருதி பரவை படிய, கருமுகில் பெரு மழை பொழிய, வானங் கருக, கான்யாறு பெருகின், வரும் நோய்தீர் மருந்தும் அறிந்துளேன். அது, நாம் அடைய விரும் பும் அறியாவுலகின் ஆய்ந்த நல்லிசை.

கேட்ட தாய், உவகை கிளர்ந்தெழ, நுனிக்கொம்ப ரேறி, கேட்கும் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் உள்ளிட்ட யாவும் மெய் பனிக்கும்வண்ணம், தேம்பிழிபோலும் இன்னிசை மிழற்றிற்று. அதுகாலை, அதனோடு சேவற்புள்ளும், சிறுபுள்ளும் ஒத்திசைத்து உவகைத்தேன் சுவைத்தன. யாவும் ஒத்திசைத்தன வெனினும் ஒன்றுமட்டில் அந்தோ! உளம் ஒருப்படாது, உவகையுங் கூராது வெறுத்த நோக்கொடுநிற்ப, இசைப்பெருக்கு நின்றது. நிற்றலும் அது, ஏனைச் சிறுபுட்களை விளித்து, "இவ்விசை, இதனினும் பத்தடுத்ததாம், அதனுட் கூறப்பெறும் உலகுபற்றிய யாவும் உள்ளவாறு உணரப்பெறின்" என்றது. இவ்வாறே, பிரிவு காரணமாகத் துயருற் றிருந்த பெடைச்சிறுபுள்ளொன்று, நகைத்து, "அதனைப் பற்றி நாம் மிகைபட வுணர்வேமாயின், ஈண்டை நலத்தான் நமக்கு மனவமைதி யுண்டாகா தன்றோ!" என்றது. இவற்றைக் கேட்ட மற்றொன்று, "ஆம், நாம் அவ்

வுலகுசார்பாக ஒன்றும் அறிந்திலே மன்றோ! உண்மையில், அங்ஙனமோர் உலகு உண்டென்பதையேனும் எங்ஙனம் அறிதலாம்?" என்றலும், மற்றொரு பெடைப்புள், "அன்று, அங்ஙனமொன்று உண்டென்பதை நாம் நன்கு உணர்கின்றோம். யாதோ? நம் அன்னை கூறிய உள்ளொலி என்னுள் எழுந்திசைத்தது! யான் உணர்ந்தேன்" என்று கூறிற்று.

இக் கூற்றினைக் கேட்ட தலைக்குஞ்சு, "உன்னுள் எழுந்திசைத்ததாக நீ நினைத்தனைகொல்லோ! அது தானே! ஆ! இவையாவும் வெற்றுரைகளே. இங்ஙனம் நின்னைக் கூறுமாறு நம் அன்னை கூறினள்போலும்! அம்மம்ம! நீ கூறுவனவும், அன்னை கூறுவனவும் பிறவும் வீண் பொருளில் யாப்புக்களேயன்றிப் பிறிதில்லை. நுண்ணிய கேள்வியறிவு மிகினும் இயற்கையறிவு கூடினன்றோ அது மாட்சி பெறும்! யானும் அப்புல்லறிவே மேற்கொண் டிருப்பின், அவ் வுள்ளொலி என்னுள்ளுமெழுந்திசைத்த தென்பேன். இனி யான் அவ் வுலகு சேறும் செலவையும் நினையேன். சேறற்கு உடன்படலும் படேன். செல்க" எனச் சிறிது வெகுண் டுரைத்தது.

"இஃதன்று நீ நிற்குமிடம்" என்பது பொருளாக வமைந்த நல்லிசை யொன்றை எடுத்திசைத்தவண்ணம், குடம்பையின் புறத்தே தாய் வர, அகத்திருந்த பார்ப்புக்களுட் சில, தாய் பாடியதையே தாமும் பாடத்தொடங்கின. அந்நிலையில், அத் தாய்ப் புள்ளின் உள்ளும் அவ் வொலி யெழுந்தது. எழவே, மறுமுறையும், அது அந் நல்லிசையையே தொடங்கி, "இழுமெனோதையின் அருவி யிரங்கலும், மருங்கு கரை கொன்று கான்யாறு சேறலும், விண்ணகங் கடந்து கொண்மூ வேகலும், மால்வரை துளங்கக் கால்பொரு தோடலும், விரிகதிர்ப்பருதி பரவையின் மறைதலும் எப்பொருள் நாடிச் செய்கின்றன. இதற்குக் காரணமாவது, அவற்றி னகத்தெழுந்து, "இஃது அன்று நீ நிற்குமிடம்" என் றொலிக்கும் அருளொலி யன்றோ! யாற்றொடு கூடுக! முகிலொடு மொழிக! காலினை வினவுக! நீவிர் செல்லிடம் யாதென்று! அறியாவுலகமே! வரனெனும் வைப்பேயன்றோ!

'நீ செல்லிடம் யா' தென வெயிலவனை விளித்துக் கேண்மின். அவன் சேறுமிடனும் அப் பெறலரும் உலகே! குறித்த நாள் வருங்கால் நாம் அனைவரும் ஆண்டுப் படர்குவம்" என முடித்தது.

இவ் விசைவயப்பட்டு மனந்திருந்திய அத்தலைக்குஞ்சு, "அன்னாய்! அன்னாய்! நீ கூறுவது வாய்மைகொல்லோ! யான் கொள்ளுமாறு யாது? அவ் வுலகம் உறுமிடம் யாண்டையது? அருள் செய்க," எனக் கசிந்தழுது, தன் தாய்முக நோக்கி, தனக்கு அம் மடப்புறவங் கூறிய அனைத்தும் முறையும் பொருளும் வழாது விளம்பிற்று. விளம்புங்காறும் அமைதிகொண்டேற்ற அச் செம்புள், "அருமந்த செல்வமே! அலமரல் வேண்டா; யான் வேறோர் நல்லிசை யிசைப்பல் கேட்டி" என்று தொடங்கித் தான் பண்டே யகன்ற உலகியலைப்பற்றிக் கூறல் தொடங்கிற்று.

அங்ஙனம், அவ்விடத்தினின்றும் அது அகன்றஞான்று, தான் ஏன் அகறல் வேண்டுமென்று நினைத்ததுண்டோ எனின் இன்று; செல்லுமிடம் இற்றென அறியாமே, பணிவும், உறுதிநோக்கும், நீங்குத னலத்திற்கெனும் திண்ணிய வெண்ணமும் ஆய இவையே அதன் உளப்பொருளா யமைந்திருந்தன! பெருங்கடலுலகிற் பிரிந்து வருநாள், அச் செலவுக்குரிய காரணப் பொருளை யுணர்த்துவாரேனும், "இஃதன்று, அது நின் நெறி" எனக் கூறுவாரேனும், அது கண்டதுண்டோவெனின், அன்று. அஞ்ஞான்று, அம் மடப்புறவம் கண்டிருத்தல் கூடுமாயின், அது தானும் இவ்வாறு கூறற்பாலதாமோ? இவை யனைத்தும் ஆராயாது போந்த அச் செம்புள் தானும் பின்னர் உரிய நலத்தைத் துய்க்கா தொழிந்ததோ? அதனை யங்ஙனம் சேறல் செய்யுமாறு ஊக்கிய பொருளாய உள்ளொளி யாதாம்? அதுவே திருவருள் என்பது. அப்பறவை, அக் கான்யாற் றடைகரை யடைந்த நாளே உண்மையை ஒருவா றுணர்ந்தது. எனெனின், ஆண்டுத் தான் அது சின்னாள்வரைத் தங்குதல் விழைந்தது. பின்னரே,

அதன் காதற் றுணைப்புறவை போதந்ததும், வாழ்க்கையின்பம் நுகர்ந்ததும் பிறவும் நிகழ்ந்தன. அன்பர்களே! அது போது, காதற் சேவலொடு கலந்து அது குடம்பை யமைக்கும்போது, தன்வயிற் பின்னர்த் தோன்றுவனவாய பார்ப்புக்கட்கென அக் குடம்பையைச் சமைக்கும் போது, அம் மடப்புறவங் கண்டிருக்குமேல், எத்துணை இகழ்ச்சி செய்திருக்குங்கொல்லோ! பிறவாப் பார்ப்புக்கட்குங் கூடமைத்தல் பேதைமை என் றெள்ளியிருக்குங் கொல்லோ! அன்றி, "எதிர்வினை யறிதல் யாங்ஙனம்? நீ இங்ஙன் செய்தல் வீண் பொருளில்யாப்பே, இஃது அறிவுடையார் தொழிலன்று" என்றெல்லாம் விரித்துரைத்திருக்குமோ! யாதோ? நிற்க, இச் செய்கைக்கெல்லா மாவதோர் காரணத்தையேனும் ஆராயாது அது செய்தது வஞ்சனையோ? அன்று. இவையனைத்தும் அத் திருவருளின் செயலே யாம்-கூட்மைத்துச் சேவலோடு கூடி வாழ்க்கைச் சாகா டுகைத்தற்கு, இதற்குப் பாங்கா யமைந்தது அவ்வுள்ளொளி யாய திருவருளன்றே! அதன்வழி நின்றதனு லன்றே, அருமந்த பார்ப்புக்கள் பெற்று, அயராவின்பத்தில் அது திளைத்திருந்தது! இது-காலை அது, தன் செல்வங்கட்குச் செல்வக்காலத்தும் அல்லற் காலத்தும் கோடற்பாலனவாய உறுதிப்பொருள்களை யுணர்த்தற் கேற்ற அறிவமைதி பெற்றதோ? இன்றே? "இவை யனைத்தும் பொருளில் புணர்ச்சி, கட்டுக்கதை, புலவர் புரட்சி." என்றெல்லாம் பிதற்றிய அம் மடப்புறவையே வினவுமின், அவ் வுள்ளொளி யதனை வஞ்சித்ததோ வென்று. அன்றியும், அச் செம்புள், "செல்வங்காள்! எங்கு, என், சேறல் வேண்டுமென்னும் ஆராய்ச்சியின்றி, இன்னே ஒருப்படுமின். இக்காலை யாம் அறிந்திலோமாயினும், மற்றொருகாலை யறிதல் கூடும்" என்றும், *"பணிவும் (Obedience) † அறிவும் (Faith) பண்பட்டகாலத் தன்றே, மெய்புணர்வும் பொருணலமும், விளங்கத் தோன்றலும் காட்டப்பெறுதலும் உளவாம்," என்றும் கூறியதனை அப்புறவம் உணரல் முடியாது போலும்!

---

* பணிவு-வாவென வருதலும் போவெனப் போதலும் என்னும் கேள்விப்பயன். † அறிவு-நல்லதன்கண் நலனும், தீயதன்கண் தீமையும் காண்டல் கூடும் என்னும் உறுதிநோக்கினைப் பயப்பது.

பின்னர் நாட்கள் சில சென்றன. காரும் கூதிரும் நீங்கின. மழையும் பனிப்பும் மிகுந்தமையின், வரனேன்னும் வைப்புப் பற்றிய நல்லிசை, அவற்றிடை, எந்திசையும் தூங்கிசையுமாகிப் பின்னர்ச் செப்பலோசையாய், இசைக்குந்தொறும் கேட்டவை மெய்சிலிர்ப்பவும், கண்ணீர் வாரவும், ஊன்கலந்த உயிர்கலந்து, உளங்கலந்து உடலமெல்லாம் உவட்டாநிற்கும் தேன்கலந்து, தித்திக்கும் தன்மையிற் சிறந்தது. இஃதுண்டாதற்குக் காரணம், என்னையெனின், அவை உண்மை யுறிந்தன; அவ்வுண்மையை யுணர்ந்தன; அவ்வுண்மையை உறுதி யெனவும் கொண்டன. ஆகலாற்றான், அவை ஆண்டை யின்பத்தையும் ஈண்டே யுணரலாயின.

நிற்க, ஒருநாள், சிறுகுஞ்சுகள் குடம்பையினின்றும் வெளிச் சென்றிருப்ப, அவற்றின் உளங் கலங்குதற் கேதுவாய பேரொலி யொன்று அருகே யெழுந்தது. எழ, பேரச்சங்கொண்டு, அவை தம் கூடடைந்தன. கூடு அக்காலே, நிலைகுலைந்து, தளர்ந்து, நீரால் நனைப்புண் டிருந்தது. இருப்பினும், அவை, ஒன்றையொன் றுகப்புல்லிச் சிறிதுபோது கிடப்ப, ஆய்ப்புள் இல்லாமை தெரிந்தது. எதிர் நோக்கிய கண்கள் பூத்துப்போயின; மனம் பெருந்துயர் பூண்டது. என் செய்யும்!

பின்னர் அவை, கூட்டினின்றும் வெளிபோந்து, நோக்கு மிடந்தொறும் தம் தாய்ப்பறவையைத் தேடிச்சென்று, தளர்வும், களைப்பும் மீதூர, ஈன்றாளைக் காணாது ஏக்குற்ற நெஞ்சம் துயர்ந்து சாம்ப, காண்டல் கூடுமோ கூடாதோ என்னும் எண் ணம் ஒருபுடை யலைப்ப, பெரும்பேதுற்றகாலை சேறும் நீரும் கலந்த சிறிய நீர்நிலையும், சுற்று மோங்குத லில்லாப் புதலும் உள்ளதோர் துன்பநிலையம் அவற்றின் முன்னர்த் தோன்றிற்று. கூர்ந்து நோக்கியகாலத்து, பறவைச் சிறகும் சிறுமயிரும் சாம் பிய வோசையும் ஆண்டுத் தோன்றின. கண்ட குஞ்சுகள், வேணவா மீக்கொள, அங்குச் சென்று, இறந்த தொன்றும், இறக்கப் போவதொன்றுமாய இரண்டு புட்களைக் கண்டு, இறக் கப்போவது தம் யாயாதல் உணர்ந்து, பட்டதை என் கூறுவது!

படுவதைக் கண்ட தாய்ப்பறவை, செல்வங்காள்! "எழுமின்! சென்மின்! திருவருளின் காரியமாய உள்ளொலி உந்தம் உளத்தும் இன்னே எழுந்திசைக்கின்றது! சென்மின்! சென்மின்! பணிமின்! படருமின்! தாழ்த்தற்குச் சிறிது போதும் இன்று! இன்பநாட்டமே கொண்மின்!!" என்றது. எனக்கேட்ட குறும் புட்குழாம், "என்னே? எந்தை யாண்டுளார்! ஐயகோ! அன்னாய்! அன்னாய்!!" என்று அலறிக் கூயின. "அமைமின்! அமைமின்! யாங்கள் ஆண்டு உம்மோடு சூழ விருத்தல் முடியாது; கூடாது. இனி ........" என்று கூறிக்கொண்டே தன் தலையைக் கீழே சாய்த்து, வரனென்னும் வைப்பில் மூளைத்தது.

நிற்க, இதனை யீண்டு உரைத்துக்கொண்டே செல்லின் பெருகும்.

திருவருள் கைகூட்டுமாற்றினை வாழ்க்கைமுகத்தான் உணர்த்த வுணர்ந்த பறவைக்குஞ்சுகள், இன்பவுலகை யெண்ணித் தாமும் பேரறம் நேர்ந்து, அப் பேருலகினை யடைதல் வேண்டி முடித்தன வாக பலவும் பலவேறு நெறியிற் படர்ந்து சென்றன. அவை யாண்டுச் செல்கின்றன வென்றேனும், என் செல்லுகின்றன வென்றேனும் ஒருவரேனும் கட்டுரைத்தல் கூடாது. கனவிற் கண்டன வொப்ப, தம் தாய்நினைவும், தம் பண்டைக் கூட்டி னுறைவும் பின்னர் அவற்றின் புலத்துத் தோன்றலும் மறைதலு மாயின. பெற்றதுகொண்டு பேரின்பந் துய்க்குங் காலத்துத் தம் தாய்நினைவு தோன்றிச் சிறிது மயக்கலும், அவை பின்னர்த் தெளிதலும் ஆய இன்னோரன்ன பல நிகழுங்காலத்து, ஒன்று கூறியது. "இதனினும் சிறந்ததோர் இன்பவுலகாதல் வேண்டும் நம் தாய் படர்ந்த வுலகம். அன்னதேயாக, அங்ஙனம் நம் தாய் கூறியதும் உண்மையே போலும்" என்பது.

# நட்பு.

திரு. R. நரசிம்மலு நாயுடவர்கள், மாணவர், வடமொழிக் கல்லூரி, திருவையாறு.

## I. நட்பின் தோற்றம் :—

இருவர் மனம் ஒன்றுபட்டுக்கலந்து நடப்பதே நட்பெனப் படும். அது புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என மூவகைப்படும். இவற்றுள், முன்னையவிரண்டும் இயற்கை நட்பெனவும், இறுதியது செயற்கை நட்பெனவும் கூறுவர் பெரியோர். இயற்கை நட்பாவது தாம் வேண்டுமென ஆராய்ந்து தேடிக் கொள்ளாமல் இயல்பாகவே நிகழ்வது. செயற்கை நட்பாவது, இன்னவருடன் நட்புக்கோடல் வேண்டுமெனக்கருதிப் பல்லாற்றானும் ஆராய்ந்து தெளிந்த பின்னர் நிகழ்வது. இவற்றுள் :—

புணர்ச்சியாவது—பிறப்பின் முறைமையாற் சுற்றத்தாராயினார்மாட்டு இயல்பாகவே நிகழ்வதோர் மனப்பற்று. இவ்வகை நட்பு, அறிவுடையார் அறிவிலார் என்னும் தகுதிப்பாடு வேண்டாது மக்கள் யாவரிடத்திலும், விலங்கு பறவை முதலிய அஃறிணையுயிர்களிடத்திலும் பொதுவாக நிகழும் இயல்புடையது.

பழகுதலாவது—ஒரு தேயத்தினராயிருத்தல் ஓர் ஊரினராயிருத்தல் என்னும் இவை காரணமாக, தாம் அடுத்தடுத்துப் பல்காற் பழகுவதால் ஒருவர்மீதொருவர்க்குளதாகும் மனப்பற்று. இது, வேற்றுச்சாதியாரிடத்தும் வேற்றுநாட்டவரிடத்தும் இயல்பாக நிகழும் பழக்க மிகுதியால் வருவதொன்றாதலின், முற்கூறிய புணர்ச்சியின் வேறாக வைத்தெண்ணப்படும். புணர்ச்சி, பழகுதல் ஆகிய இவ்விருவகை நட்பும் நுணுகிய அறிவுடையாரிடத்தேயன்றி, ஏனையவரிடத்தும் பொதுவாக நிகழக் காண்டலின் இவை இயற்கை நட்பெனப்படும்.

உணர்ச்சியொத்தலாவது—தாம் அவர் என்னும் வேற்றுமை யுணர்ச்சியின்றி, இருவர்மனமும் ஒன்றுபட்டுக் கலப்பெய்துவ தால் நிகழ்வது. இஃது ஒருவன் தனது அறிவின் துணைகொண்டு பல்வகை யுபாயங்களானும் நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்னர், இருவரும் உள்ளும் புறமும் ஒத்த இயல்பினராய் நிலைபெற்று விளங்கச்செய்யும் பேராற்றலுடையது. ஒருவன், தானே ஆராய்ந்து தேடிக்கொள்வதால், இது செயற்கை நட்பெனப்படும். இங்ஙனம் மூவகைப்பட்ட நட்பினுள்ளும், ஒருவர்க்கொருவர் உணர்ச்சியொத்து நிகழும் நட்பே சிறப்புடையது.

II. நட்பின் இன்றியமையாமை :—

உலகில் ஒருவரோடொருவர் நட்புக்கொள்ள நாடுவது மனித இயற்கை. சிங்கம் புலி முதலிய ஒருசார் வனவிலங்கு களே தனித்துறைதலை விரும்பும். ஏனைய விலங்கினம் பலவும் தம்முட் கலந்துறைவதிலேயே நாட்டங்கொண்டு நிற்கின்றன. தவத்தின் முயல்பவரே தனித்துறைவர். ஏனைமக்கள் பலரும், தம்மிடைப் பலகாற்கண்டும் சொல்லாடியும் மருவியும் கூட்டுற வுடன் வாழ்வதிலேயே பெரிதும் விருப்புடையாராயிருக்கக் காண் கின்றோம். உலகில் இன்பமுந் துன்பமுங் கலந்தே நிகழ்கின்றன. இவ்வின்ப துன்ப நுகர்விற்கு உட்பட்ட மனிதன், அதனால் நிகழும் விருப்பு வெறுப்புக்களைப் பிறரிடம் கூறிக்கொள்வதற்கு முற்படல் இயல்பு. கல்லடைப்பு நீரடைப்பு முதலியனபோலவே, ஒருவற்குளதாகும் துன்பமானது மனத்தில் நெடுநாள் அடை பட்டுக்கிடப்பதும் ஒரு பிணியாம். 'மனக்கவலை பலக்குறைவு' என்பது முதுமொழி. உலகத்துநோய்கள் பலவற்றிற்கும் மருந் துண்டு; மனநோய்க்கு மருந்தில்லை. மூடியிட்டு வேவாநின்ற- தோர் மட்கலத்தின் மூடியைத் திறந்தவுடன், அதனுள் அடர்ந்து செறிந்து நின்ற வெப்பம் நீங்குவதையொப்ப, ஒருவன் மனத் தகத்து அடைபட்டுக்கிடக்கும் துன்பத்தை வெளிப்படுப்பதே மனநோய்க்கு மருந்தாகும். ஆயினும், அதனை வெளியிடுதற்கு ஒருபோக்கு வீடு வேண்டும்.

இங்ஙனம் போக்குவீடாதற்குரியவன், நண்பனது இன்ப துன்பங்களைத் தனதாகக்கொள்ளும் உணர்ச்சியொத்த நண்பனே

யாவன். உள்ளத்தி லுள்ளதை உண்மை நண்பனிடம் உரைத்துக் கொள்வதால், தனது துன்பத்தின் சுமை சற்றுக் குறையும். அன்றியும், நண்பனானவன் இனிய மொழிகள் பலவுங்கூறி ஆற்றுவித்தலாலும், அத்துன்பம் வந்தவாற்றையுணர்ந்து அதனை நீக்கச் செய்யும் உபாயங்களானும், அஃது அறவே யொழிதலுங்கூடும். இங்ஙனம் துன்பத்தைக் கூறிக்கொள்ளுமிடத்து, அது ப்பாதியாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. இன்பம் வந்தகாலத்தும் அதனைக் கூறுங்கால், அவ்வின்பம் ஒன்றே இருமடங்காகிப் பெருவகை பயந்து நிற்கின்றது. இன்னும் இதனைச் சுருக்கி யுரைக்குமிடத்து, உண்மை நண்பனே தாயப்பொருட்கு வழக்கிடாமல், இன்பம் உளதாகவும் அதனைவிடுத்துத் தானாகவே துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்ளும் பங்காளி; உள்ளக் கவலையை எற்றுக் கொள்ளும் சுமைதாங்கி; உண்மை நண்பனே உயிர்க்கமிழ்தம். இங்ஙனம் ஒருவரோடொருவர் நட்புக்கொள்வதால் விளையும் நன்மைகள் பலவாயிருத்தலின், இந்நட்பு இன்றியமையாத தொன்றும்.

### III. நட்பாராய்தல் :—

நம்முடன் அடுத்துப் பழகுவார் அனைவருமே நண்பாகிவிடார். பற்பலபேர்களுடன் பழகி ஆராயப் புகுவோமாயினும் உண்மை நண்பர் ஒருவர் கிடைப்பதும் அரிதாகிவிடும். 'ஊரிலொருவனே தோழன்' என்பது நம்நாட்டு முதுமொழி. 'நாடாது நட்டலிற் கேடில்லை' யாதலின், ஒருவரை நண்பாராகக் கொள்ளுமுன், அவரது குடிப்பிறப்பு, குணம், கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றைச் செவ்விதின் ஆராய்ந்து தெளிந்த பின்னரே நட்புக்கொள்ள வேண்டும். அன்றியும், அவருக்கு நட்பினராகவுள்ளவர்களையும் யாவரெனத் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாத தொன்றும்.

'நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு' என்பவாகலின், ஒருவனிடத்துள்ள நன்மை தீமைகளையறிதற்கு அவன் நண்பனே உரையாணி யாவன். அவரவர் தேடிக்கொள்ளும் நட்பு, அவரவர் இயற்கைக் கேற்றதாகவே இருக்கும். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்;

மூர்க்கரை மூர்க்கரே மூசப்பர். 'நீ உனது நண்பனைத் தெரிவித்தால் நின்னை இத்தகையனெனக் கூறுவேன்' என்பது ஆங்கிலத்தில் ஒரு பழமொழி. எனவே, இத்தகைய ஆராய்ச்சிகளில் நன்மை காணப்பட்டால் மட்டும், ஒருவர் நட்புக்கோடற்குரியர் என்பது தெளியப்படும்.

இனி இவ்வாறு நட்புக்கொள்ளத் தொடங்கிய பின்னரும், இவர் நம்மிடம் பழக முற்படுதற்கு ஏதுக்களாக நிற்பனயாவை? தன்னலமே கருதி நட்புக்கொள்ள வருகின்றாரா? அல்லது நமது மறைகளையறிய அவாவுகின்றாரா? அல்லது உண்மையான நட்புரிமை யொன்றனையே கருதி அன்புடன் வருகின்றாரா? என்பன நன்கு சிந்தித்து ஆராய்தற்குரியவையாகும்.

இங்ஙனம் ஆராயுங்கால், தன்னலம் ஒன்றுமே கருதியவராகத் தெரியவரின், அன்றே: என்—அக்கணமே விட்டொழிக்கற்பாலர். அல்லது நம்முடன் ஒற்றித்து நின்று சில அறிதற்பொருட்டு வந்தவராகக் காணப்படின், பிறகு வெளியிட்ட விடத்தும் தீங்கு விளைதலில்லாத சில மறைவான நிகழ்ச்சிகளை அவரிடம் உணர்த்தி, அவற்றை வெளியிடுவதையும் இடாமையையும் அயலவரால் அறிந்து, வெளியாயின் அந்நட்பும் உடனே நீக்கற்பாலது. அன்றியும் நாம் யாதானுமோர் தீச்செயலில் அடியிடுவதாய்ப் போக்குக்காட்டி, அங்ஙனஞ் செய்ய முயலுங்கால் அதினின்றும் நம்மை விலக்க முயல்கின்றனரா இலரா என்பதை ஆராய்ந்து அவர்தம் நட்பின் திறத்தை அளந்தறியலாம். நமக்குப் பெருந்துன்பம் வந்து பொருந்தியதாகக் காட்டி, அக்காலத்து நம்மை விட்டு விலகுகின்றாரா? அல்லது உடனிருந்து நமது துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்கின்றாரா? என்பதை ஆராய்வதுடன், அவருக்குச் சில நன்மைகள் செய்து வருங்கால் ஒரு சிறு கேடும் செய்து, அதனால் வெறுப்புக்கொண்டு விலகுகின்றாரா? அல்லது முன்செய்த நன்மைகளையே பெரிதாக மதித்துப் பழைய நிலையினின்றும் மாறுபடாது நிற்கின்றாரா? என்பவற்றையும் ஆராய்ந்தறியவேண்டும். இன்னோரன்ன ஆராய்ச்சிகளே நட்பியல்புடையாரை அளந்தறிதற்கேற்ற வழிகளாம்.

‘குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு.’

‘ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.’

‘கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.’ என்னும் தெய்வப்புலவர்

திருமொழிகள் ஈண்டு அறிதற்பாலன.

IV. நட்டற்குரியார் :—

கல்வியறிவு, இன்சொல், வாய்மை, உற்றுழியுதவல், ஒழுக்கம், பெருந்தகைமை, நல்லோரிணக்கம் முதலியன வாய்க்கப்பெற்றவர்களே நட்டற்குரியார். நட்பினர், தத்தம் இயல்புவகையால் தலை இடை கடை என முத்திறப்படுவர். தனக்கென ஒன்றைத் யாதொரு பயனையும் விரும்பாமல் நட்புக் கொள்பவனே தலையாய நண்பன். முதலிற் சில நன்மைகளைப் பெற்றுக்கொண்டமை கருதிப் பின்னர்ப் பலநாள்காறும் அன்பு மாறாதவன் இடையாய நண்பன். வேண்டும்போதெல்லாம் உதவி செய்துவரும்வரை அன்பு பாராட்டி, பின் உதவிசெய்ய இயலாத காலத்து முன் செய்த உதவிகளையெல்லாம் மறந்து, அன்பிற் பிறழ்ந்து நெகிழ்ந்து போமவன் கடையாய நண்பன்.

‘கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கி னனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு’ என்னும் பாட்டால்

இம் மூவகைப்பட்ட நட்பின் திறங்களையும் இனிதுணரலாம்.

‘நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு’ என்பவாகலின், ஒருவருடன் நட்புக்கொள்ளுமுன், ஆராய்ந்து கொள்ளவேண்டுமே யன்றிப் ‘பின்னர் ஆராய்ந்து கொள்வேம்’ என்பது இழுக்குக்கு இடந் தந்து நிற்பதொன்றும். நன்னட்பால் உளதாகும் இன்பத்தையும்

தீ நட்பால் உளதாகுந் துன்பத்தையும்

'நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்—நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று' என்ற பாட்டால் அறிந்து கொள்ளலாகும்.

'நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு' என்றவாறு இந்நட்பும் பண்புடையாரிடம் வாய்த்துக் கொள்ளுமேல், 'இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்றேமென்றும், யாண்டுபல வாக நரையில மாயினேமென்றும்' ஒருகாலைக்கொரு கால் இன்பம் மிகுந்து, பேருவகை பயக்கும் சிறப்புடையதாம்.

அன்றியும், 'நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு' என்னும் அருமைத் திருக்குறளும், 'அறிவுடையார் கேண்மை முன்கொண்ட அளவிலே நில்லாது, பிறைநாள்தோறும் கலைவளர்தல்போல வளரும் இயற்கைத்து; அறிவிலார் கேண்மை அவர் அதனைக் கொள்ளுங் காலத்துப் பெரிதாய்ப் பின்னாட்களில் கலைமுற்றிய மதியம் தேய்ந்து அறுதல் போலத் தேய்ந்தொழியும் தன்மைத் தாம்' என்ற அதன் உரையும் இங்கு நோக்கத்தக்கன.

ஆயினும், நட்புக்குரியாரைத் தேர்ந்து கொள்வது, சிறிது அருமைப்பாடும் வருத்தமும் பொருந்தியதொன்றாம். 'இவர் நட்டற்குரியர்' எனக்கொள்ளப்படுவாரது உள்ளக் கிடக்கையை அறிதல் எளிதன்று. ஒரோ விடத்துத் திரிபும் நிகழ்வதுண்டு.

'இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடைக் கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று' என்றார் ஆன்றோரும்.

எனவே, 'குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா இனனு மறிந்து' நட்டல் வேண்டும். இதில் இத்துணை ஆராய்ச்சியும் வேண்டுமோ? எனின்,

'நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு' என்பவாகலின், ஒருதலை யாக வேண்டுமென்பது. இங்ஙனஞ் செய்வதிலும்—

'குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு' என்றபடி, குடிப்பிறந்தானுடைய நட்பை விலைகொடுத்தாயினும் பெறல் வேண்டும்.

## V. நட்பினர் கடமை:—

ஒருவன் தன் தவறுகளைத் தானே குறித்தறிந்து, அவற்றைத் திருத்திக் கொள்வதென்பது, பலர்க்கும் இயல்வதில்லை. கணக்கன் கணக்கறிவான்: தன்கணக்கைத் தானறியான். உலகத்துப் பொருள்கள் அனைத்தையுங் கண்டறிகின்ற கண், தன்னைத் தான் காண்பதில்லை. கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா? தன்செய்கையின் குற்றநற்றங்கள் தனக்குத்தோன்ரு. ஏனையோரிடம் கண்ட தவறுகளின் உதவியால் ஒருவன் தனது தவறுகளைத் திருத்திக்கொள்வதும், தனது சுற்றுச்சார்புகளோடு பொருந்துவதில்லை. கழறியுரைக்கும் நண்பன் இன்மையால், இறப்ப உயர் நிலையிலுள்ளார் சிலர் பெருந்தவறுகளிழைத்துத் தமது பெருமையையும் நன்மதிப்பினையும் இழந்து இடர்ப்படுதல் கண்கூடு. இங்ஙனந்தவறுகள் நேருந்தொறும், நண்பனே எற்றபெற்றி சூழ்ச்சி சொல்லுதற்குரியன்.

'நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு' என்றவாறு, ஒருவன் தனது ஒழுக்கந் தவறியவிடத்து, இடித்துக்கூறி அத்தவற்றினை நீக்கி, அவனை மீட்டும் நன்னெறியில் உய்த்தல், உண்மை நண்பன் கடமையாம்.

அன்றியும் மக்களது இன்பதுன்பங்கள், என்றும் ஒரு படித்தாக இருப்பதில்லை. மாறிமாறிவரும் இயல்புடையன. நேற்றுச் செல்வாராய்த் திகழ்ந்தவர், இன்று வறுமையால் துன்பமடையக் காண்கின்ரும். இங்ஙனம் ஊழ்வலியானும் அறிவின்திறத்தானும்

ஒருவற்கு இடுக்கண் நேர்ந்தவிடத்து, தானாகவே விரைந்து அதனைக்களைவதும் உண்மை நண்பனது முதன்மையான கடமையாம்.

'உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு'
'நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை'
'அல்ல லொருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைக ளெனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்க வதுவே
மனைமா மாய மருந்து' என்னும் ஆன்றோர் கூற்றுக்கள் ஆராய்தற்குரியன.

எனவே, ஊழ்வகையால் ஒருவற்குத் துன்பமெய்தின், அதனை அருமருந்தேபோல் நீக்க முயல்வதும், உடலால் இருவரேயாயினும் உயிரால் ஒருவரேபோல் உணர்ச்சியொத்து நடத்தலும், கரும்பினை நுனியிலிருந்து தின்றார்போன்று நாட்குநாள் இன்பமும் நட்பும் மிகுதியாமாறு நடந்துகொள்ளலும், இவைபோல்வன பிறவும் நட்பினர் கடமைகளாம்.

VI. நட்பின் பெருமை :—

'இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு' என்றவாறு, 'இவர் எமக்கு இவ்வளவு அன்பினர், யாம் இவர்க்கு இவ்வளவு அன்பினேம்' எனச் சிறப்பித்துச் சொல்லினும், நட்புச் சிறிதாகத் தோன்றுமாதலால், யாம் அவர் என்னும் வேற்றுமையுணர்ச்சியின்றி நட்டலே சால்புடைத்து.

இங்ஙனம் உணர்ச்சியொத்த சீரிய நட்பினையுடையராய் முற்காலத்தில் நந்தமிழகத்தில் வாழ்ந்து, புகழும் பெருமையும் அடைந்து சிறந்த சிலர் செய்திகளை, இதற்கு எடுத்துக் காட்டாக அடியிற் குறிப்பது, பெரிதும் பொருந்துமென்று கருதுகின்றேன்.

துரியோதனன், கன்னன் தேர்ப்பாகன் மகன் என்பதை அறிந்தும், அவன் தனக்கு ஒப்பற்ற துணைவனுவான் எனக்கருதி, அவனுடன் நட்புக்கொண்டு அங்க நாட்டுக்கு அரசனுக்கிச் சிறப்பித்தான். பிறகு ஒரு காலத்தில், குந்திதேவியானவள் அக்கன்னனிடம் அணுகி அவனது பிறப்பின் உண்மையையும், பாண்டவர் பக்கல் வந்தால் உளதாகும் பெரும்பேற்றையும் உணர்த்திப் பாண்டவர்க்குத் துணையாமாறு வேண்டினள். இவ்வாறு தன்தாயால் வேண்டப்பட்டும், தனக்கு நேர்வதாகிய பெரும்பேற்றை ஒரு சிறிதும் மதியானுய், துரியோதனன் செய்த பேருதவிகளையும், தண்ணளியையும், தான் அவனுக்குச் செய்ய வேண்டிய கடமையையும் நினைந்து,

'இன்னு னெனவறியா வென்னை முடிகவித்து
மன்னர் வணங்க வரசியற்றிப்—பின்னையும்
தன்னெச்சி லுண்ணுந் தகைமையான் தானுண்டான்
என்னெச்சி லென்னோ டினிது.'
மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிக்க
அற்று விழுந்த வருமணிகண்—மற்றவற்றைக்
கோக்கேனே வென்றுரைத்த கொற்றவற்கெ னுருயிரைப்
போக்கேனே வெஞ்சமத்துப் புக்கு

எனக்கூறி மறுத்துத் தனது நட்பின் திட்பத்தை நன்கு வெளியிடுவதானுன். இத்தகைய இவனது அருமை பெருமைகளையெல்லாம் அறிந்த துரியோதனனும், இவனைப் பாரதயுத்தத்தில் இழக்க நேர்ந்த விடத்து,

'அணையார்தம் படைக்கடலின் அருநிலைக்குக் கரையேற லான கோலப்
புணையாய்எத் திறங்களினும் பகிராம லுற்றதெலாம் புகலத் தக்க
துணையாய்என் னுயிர்க்குயிராந் தோழனுமாகியவுன்னைத் தோற்றேனுகில்
இணையாரு மிலாவரசே! யாரைக்கொண் டரசாள விருக்கின்றேனே!'

எனத் தன் வாழ்க்கையில் வெறுப்புற்று, மிகுதியும் வருந்துவானுயினன்.

இனி, ஆசிரியர் நச்சினுர்க்கினியர், பரிமேலழகர் முதலியோராலும் பாராட்டப்பட்டு, நட்பிற்கே ஓர் அணிகலனுய்த் திகழ்ந்த

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் ஆகிய இவ்விருவரது நட்பின் திறமும் இங்கு ஆராய்தற்குரியது.

பிசிராந்தையார் என்பவர், பாண்டியநாட்டிலுள்ள 'பிசிர்' என்னும் ஊரிற் பிறந்து சிறந்த ஒரு நல்லிசைப்புலவர். கோப்பெருஞ்சோழன் என்பவன் உறையூரிலிருந்து ஆட்சி நடத்திய ஒரு சோழமன்னன். தமிழ்ப்புலமையிலும் சிறந்தவன். இங்ஙனம் பிசிராந்தையார் வேற்று வேந்தனது நாட்டிலும், கோப்பெருஞ் சோழன் உறையூரிலுமாக ஒருவர்க்கொருவர் சேய்மைப்பட வாழ்ந்து வந்தாராயினும்,

'பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப' என்றவாறு ஒருயிரும் ஈருடலுமாக உணர்ச்சியொத்து நட்புக்கொள்ளலாயினர். இந்நட்பும், பிறைநாள்தோறும் கலைவளர்தல்போல வளர்ந்து திகழுங்காலத்தில், கோப்பெருஞ் சோழன் தனக்கும் தன்புதல்வர்க்கும் நேர்ந்த மாறுபாடு காரணமாகத் தன் செல்வங்கள் எல்லாவற்றையுந் துறந்து, உயிர் நீத்தற்கு ஒருப்பட்டு வடக்கிருந்தான். இங்ஙனம் வடக்கிருந்த சோழன், அங்குக் குழுமியிருந்த சான்றோர்களை நோக்கி, 'யான் உயிர் நீப்பேனாயின், என்னுடன் பிணித்த நட்பினையுடைய ஆந்தையாரும் உயிர் நீங்காதிரார்; ஆதலால் அவர்க்கும் இடனொழித்துவைக்க' என்றான். அதைக்கேட்ட சான்றோர்கள், 'நட்புரிமையின்பொருட்டு உயிர் நீங்கினார் யாரே!' என ஆந்தையார் திறத்து ஐயப்பாடு கொண்டனர். அதனையுணர்ந்த சோழன்,

'பிசிரோ னென்பவென் உயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன்' ஆதலின்,

'ஐயங் கொள்ளன்மின் ஆரறி வாளிர் !
இகழ்விலன் இனிய னியாதத நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்கவவற் கிடமே' என

அவர்கள் ஐயம் நீங்குவதற்கான ஏதுக்கள் பலவுடன், ஆந்தை யாரது இனிய நீர்மைகளை நன்கு புலப்படுத்தித் தானும் உயிர் நீத்தான்.

இவ்வாறு சோழன் உயிர் நீத்ததைக் கேட்ட பிசிராந்தை யாரும், 'தமது நண்பன் துணிந்து சொல்லியசொல் பழுதுறு வண்ணம், உடனே தாமும் அவ்விடமடைந்து, யாவரும் வியக் கும்படி வடக்கிருந்து உயிர்நீத்தார்.

இவ்விருவர்களது நட்பின் அருமை பெருமைகளை யெல்லாம், உடனிருந்தறிந்தவரான, பொத்தியார் என்னும் நல்லிசைப்புலவர்,

'நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
யெனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல் ;
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
யிசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல் ;
வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே!
அதனால்,
தன்கோ லியங்காத் தேயத் துறையுஞ்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
யன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொல் அளியது தானே.'? என்னும்

கல்லுங் கரையத்தக்க கையறுநிலைச் செய்யுளால் வியந்து பாராட்டுவாராயினர்.

'பேயோடு பழகுறினும் பிரிவதரி தரிதென்று
தூயோர்கள் மொழிவரால் தூயோரும் புகழ்தூயோய்
ஆயோர்கள் பெருநட்பை யருந்தவத்தாற் பெறலன்றி
யேயோவெண் மையிற்கிடைப்பி னிகழ்வரோ இகழ்வில்லார்;
சமயம்வரின் இடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வார்
இமையவர்தம் உலகுறவும் இருளுலகம் பகையுமாய்
அமையவறி வுறுத்துவா ரந்தோநூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கு மரிதரிது'

என்னும் பாடல்களும் இந்நட்பின் பெருமையை இனிது விளக்குவனவாம்.

## VII. கூடா நட்பு :—

நட்பின் பயனைக் கருதாது, தாம் அடையும் பயன் ஒன்றனையே கருதுவார் நட்பானது, இன்பங்கருதி முயங்காமல் பொருளையே குறிக்கொண்டு முயங்கும் விலைமகளிரை ஒப்பதாம். முகத்தெதிரே இனிமை பொருந்தப்பேசிப் புறத்தே இழித்துரைப்பாரது நட்பினும், பகைமை நல்லது. நல்லொழுக்கம் இல்லாதவரிடம் தீவினை குடிகொள்ளும். 'நிலத்தியல்பால் நீர்திரி'தல் போல, நல்லியல் பில்லாரோடு நட்டவர் அதன் பயனைப் பெறுதொழியார். தொத்துநோய்க்கும் உய்ந்து போகலாம்; தீ நட்பிற்கு உய்தலருமை. தீயவர் கேண்மை கொள்ளாதிருத்தலே பெரியதோர் ஊதியமாகும்.

'மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பில்லார் நட்பு'
'ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்'
'செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று' என்னும் குறட்பாக்கள்

தீநட்பின் பயனை நன்கு வலியுறுத்திக் கூறுவனவாம்.

## VIII. நட்பிற்பிழைபொறுத்தல் :—

உலகில், குற்றமற்றவர்கள் யாருமில்லை. கல்விகேள்விகளால் அறிவு விளக்கம் பெற்றவரிடத்தும், அவரறியாமலே யாதானு மோர் குறையிருக்கக் காண்கின்றோம். மனிதனுடைய இஃது இயல்பேயாம். 'யானைக்கும் அடிசறுக்கும்' என்பது பழமொழி: முற்றுணர்வுடைய இறைவன் ஒருவனே பிழையற்றவனன்றிப் பிறரெல்லாம் ஒருவாறு பிழையுடையவர்களேயாவர். ஆதலால், ஒருவனோடு நட்புக்கொண்டபின் அவனிடம் பிழைபாடு காணப் படினும், அதனையே குறிக்கொண்டு நீக்கமுயலாமல்

'நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு' என்பது கருதி, அப்பிழையைப் பொறுத்தலே சால்புடையது.

அன்றியும், நண்பனிடம் குறைகண்டபோது கழறுரை கூறிப் பலகாலும் அவனைத்திருத்த முயல்வதும் முதன்மையான கடமையாம். இங்ஙனம் பலகால் இடித்துரைத்தும் திருந்தாமல் மேலும் குற்றமே புரிவானாயின், அவன் திருந்தி வருந்துணையும் விலகி இருத்தலே நலம். தம்முள் மனமொத்துக் கலந்தபின், நண்பனிடம் காணும் குறைகளைப் பிறரிடம் கூறுதல் பழியாகு மாதலால், 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்றவாறு, அதனைப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும். கண்ணைக் குத்திற் றென்று தமது கையைக் களைவாரில்லை.

'இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்னா செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்
தீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை.

'செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.' என்னும் அரிய பாட்டுக்களும் இதனை நன்கு வலியுறுத்திக் கூறுவனவாம்.

ஆகவே, இதுகாறுங் கூறியவற்றால் புணர்ச்சி பழகுதல் உணர்ச்சியொத்தல் என நட்பு மூவகைப்படுமென்பதும், நட்பினால் விளையும் நன்மைகள் பலவாயிருத்தலின் இஃது இன்றியமையாத தொன்றென்பதும், ஒருவரோடு நட்புக்கொள்ளுமுன் அவர் இயல்பினைப் பல்லாற்றானும் ஆராய்தல் ஒருதலையாக வேண்டுமென்பதும், அங்ஙனம் ஆராய்ந்து பார்க்குங்கால் நல்லியல்புடையராகக் காணப்படின் அவரே நட்டற்குரியாரென்பதும், இங்ஙனம் பிணித்த நட்பினையுடைய ஒருவற்கு இடுக்கண் நேர்ந்ததாயின் அதனை விரைந்துகளைய வேண்டுவது நட்பினர் கடமையாமென்பதும், ஒருவரோடொருவர் உணர்வில் கேண்மை தீங்குக்கிடமாதலின் அதனைக் கடிந்தொதுக்க வேண்டுமென்பதும், தம்மால் ஆராய்ந்து நட்கப்பட்டாரிடம் பிழை காணப்படினும் நட்புத் தன்மையிற் பிறழாது அப்பிழையைப் பொறுத்தல் வேண்டுமென்பதும், பிறவும் ஒரு சிறிது விளங்கக்காணலாம்.

உ

# அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திருவாளர் சி. வேதாசலம் பிள்ளையவர்கள், B.A., B.L., கரந்தை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கெனக் கல்வியமைச்சர் சென்னைச் சட்டசபை முன் கொண்டுவந்த மசோதா சிற்சில மாறுதல்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாட்சிமிக்க சென்னை மாகாணத் தலைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி தமிழ்ப் பொதுமக்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இனி மாட்சிமிக்க அரசப்பிரதிநிதியவர்களால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுவதே எஞ்சி நிற்கின்றது. அவர் அதை ஒப்புக்கொள்வதில் யாதொரு தடையுமிராது. எனவே, வருகின்ற ஆறுதிங்கள்

களில் முன்னேற்பாடுகள் யாவையும் செய்து முடித்து, வருமாண்டின் தொடக்கத்திலிருந்து பல்கலைக்கழகம் தன் பணியை மேற்கொண்டு நடத்தும்படி உயர்திரு சர். அண்ணுமலைச் செட்டியாரவர்களும் அவர்களின் பணியாளர்களும் பெருமுயற்சி யெடுத்துக் கொள்வார்களென்று தமிழுலகம் எதிர்பார்க்கின்றது.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தியதற்கு மட்டுமல்லாமல் மற்றொரு உதவிக்காகவும், நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் உயர்திரு. சர். செட்டியாரவர்களுக்கும் சென்னைச் சட்ட சபையார்க்கும் கல்வியமைச்சருக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்தின் வினைக்குழுவுக்கு உறுப்பினர்களாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் தம்மில் ஒருவரையும் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரும், சிதம்பரம் திரு: மீனுட்சி தமிழ்க்கல்லூரி ஆசிரியர்களும் சேர்ந்து தம்மில் ஒருவரையும் தேர்ந்து அனுப்ப இப்பல்கலைக் கழகச் சட்டம் உரிமை கொடுத்துளது. தமிழ்ச் சங்கங்களை உள்ளவாறுணர்ந்து அவைகளின் உழைப்பை மெச்சி அவைகளுக்குப் பல்கலைக் கழக வினைக்குழுவில் இடங்கள் உதவிய பெருந்தகைமை தமிழ் மக்கள் பாாாட்டற்பாலது.

திரு. S. சத்தியமூர்த்தி அவர்கள் கூறியபடி தென்னிந்தியாவில் இப்பல்கலைக் கழகந்தான் இவ்வகைப் பல்கலைக் கழகங்களில் முதற்கழகமாகும். மாணவரும் ஆசிரியரும் உடனுறைந்து, கல்வி, கேள்வி ஆராய்ச்சிகளில் ஒத்துழைத்து மேம்பாடடையும் ஏற்பாடுள்ள பல்கலைக் கழகங்கள் வடஇந்தியாவில் காசி, அலிகார், டாக்கா முதலிய பல இடங்களிலிருப்பினும், தென்னிந்தியாவில் அத்தகைய பல்கலைக்கழகம் இதுவரை எவராலும் ஏற்படுத்தப்படவில்லை. உயர்திரு. சர். அண்ணுமலைச் செட்டியாரவர்களின் பேருதவி யில்லையேல் நம் மாணவர்கள் பொருளுணராது கற்கும் வெற்றேட்டுச் சுரக்காய்களாகவும், தேர்ச்சி விடையெழுதும் பொறிகளாகவும், உயர்தரக் கல்வியினல் முழுப்பயனையும் அடைய முடியா வீணர்களாகவும் எக்காலமும் தங்கள் வாழ்வைப் பாழ்ப்படுத்தி வரநேர்ந்திருக்கும். ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்சு முதலிய

ஆங்கில நகரங்களிலுள்ள புகழ்வாய்ந்த பல்கலைக் கழகங்கள்போல் அண்ணுமலைப் பல்கலைக் கழகமும் சிறந்த ஆசிரியர்களை உயர்ந்த ஊதியங்கொடுத்து அமர்த்தி, மாணவர்கள் கட்டாயத்துக்கன்றி விருப்பத்தின்பேரிற் கல்விபயிலும்படி செய்வது இன்றியமையாததாகும். இப்பல்கலைக் கழகம் சிறப்பாக வட, தென் மொழிகளின் வளர்ச்சிக்காகவும் பொதுவாகக் கீழ்த்திசைக் கலைகளின் உயர்ச்சிக்காகவும் உழைத்தற்கே ஏற்பட்டிருப்பதால் பல்கலைக் கழகத்தை நடாத்தும் பொறுப்பை ஏற்கும் பெரியார்கள் மற்றைப் பல்கலைக் கழகங்களிற் போல இம் மொழிகளைக் கடைவாயிலில் நிறுத்தி வைத்துவிடாது, முதன்மையான இடங்கொடுத்து மற்றைபயிற்சிகளை இவற்றிற்கு அடுத்தபடியாகவும் உதவியாகவுமே வைத்துத், தென்னிந்திய சரிதமும் தென்னிந்திய அறிவுநூன் முறைகளும் இப்பல்கலைக்கழகத்தின் முயற்சியால் சிறிதளவேனும் பயன் பெற்று வளர்ச்சியுற்று அவற்றின் சீர்கள் உலகுக்கு விளக்கமாகும்படி உண்மையான பற்றுடன் உழைத்துவரக் கடமைப்பட்டவராவார்கள். இப்பல்கலைக் கழகத்தின் பயனுகத் தென்கலை மலிந்து தென்னுடாகிய நம் தொன்னுடு தன் பழம்பெருமைகளைத் திரும்பவும் பெற்று உயர்வுற்றுப் பேரும் புகழும் விரைவில் எய்தினலன்றி இப்பல்கலைக் கழகத்துக்காக உயர்திரு. செட்டியாரவர்கள் உதவிய செல்வமும் எடுத்துக்கொண்ட முயற்சியும், நன் முறையிற் செலுத்தப்பட்டனவென்று ஒப்புக்கொள்ளவியலாது போகும்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் முதலிடை கடைத் தமிழ்ச் சங்கங்கள் போன்று நடைபெறுதல் வேண்டும். ஆங்குத் தமிழாசிரியர்களும் மாணவர்களு மல்லாமல் தென்னுட்டுக் கலைவல்லார் யாவருமே ஆதரவுபெற வேண்டும்; தென் கலைத்தொடர்புள்ள நூல்கள் அரங்கேற்றப்படல் வேண்டும்; அவைகள் அச்சிடப் பட்டு உலகுக்கு வழங்கப்படல் வேண்டும்; அந்நூல்களை இயற்றிய அறிஞர்களின் உலகவாழ்வு இடையூறின்றி நடைபெறற்குப் பொருளுதவி புரியப்படல் வேண்டும்.

பனகால் அரசர் கூறியபடி உயர்திரு அண்ணுமலைச் செட்டியாரவர்கள் செட்டி நாட்டு வணிகரின் வழக்கப்படி பழைய

கோவில்களையும் புதுக்குவதிற் பொருளைச் செலவிடாது கல்வியைப் போற்றித் தொழற்குச் சிதம்பரத்தில் ஓர் புதுவகையான கோவிலை எடுப்பித்ததற்குத் தமிழர் தலைமுறை தலைமுறையாக அப்பெரியாரை வாழ்த்தி வணங்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் விரைவில் நிறுவப்படவிருப்பதால் சிலவாண்டுகளாகத் தமிழகம் வேண்டி வந்த தமிழ்ப் பல்கலைக் கழகம் விரைவில் உயிர்பெற்று வருவது இயலாது போகுமோவென்ற ஐயம் தமிழ் மக்களைத் துன்புறுத்தத்தொடங்கி விட்டது. சென்ற சென்னைப் பல்கலைக் கழக வினைக்குழுவின் கூட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப்பற்றிய ஆராய்ச்சி அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட செய்தி இவ்வையப் பாட்டைச் சற்று உறுதிப்படுத்துகின்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவவேண்டி அரசியலார் இது வரை எடுத்துக்கொண்ட முயற்சி வீண்போகாதபடிக்கும் தமிழ் மக்கள் ஏமாறாதபடிக்கும் வருகிற ஆண்டிலில்லாவிட்டாலும் அதற்கடுத்த ஆண்டிலாவது தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவ ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்பது தமிழ் மக்களின் விருப்பமும் வேண்டுகோளுமாகும். இதற்கான முழுச் செலவையும் பொறுப்பையும் அரசியலாரின் பேரிலே சுமத்தி, அவர்களது அச்சத்தை யதிகப்படுத்தாது தமிழகத்துப் பெருநிலக்கிழவர்களும் வணிக மன்னரும் செல்வம் படைத்த வழக்கறிஞர்களும் பொருளுதவி செய்ய முன்வந்து அரசியலாரை நெருக்குவார்களானால் தமிழ்ப் பல்கலைக் கழகம் விரைவில் தோன்றித் திகழுமென்பதில் ஐயமின்று. தமிழ்ப் பெருமக்கள் இத்துறையிற் பெருமுயற்சி எடுத்துக் கொள்வார்களாக.

உ

# ஓர் ஆராய்ச்சி.

## திருவிசையமங்கையும் கோவந்தபுத்தூரும்.*

திருவாளர். வை. சுந்தரேச வாண்டையாரவர்கள்.

சோழநாட்டுத் தேவாரம்பெற்ற தலங்களில் திருவிசையமங்கையும் ஒன்றாகும். இத்தலம் திருப்புறம்பயத்திற்கு மேற்கிலும், திருவைகாவூருக்குக் கிழக்கிலும், மண்ணியாற்றின் வடகரையிலுமுள்ள விசையமங்கை என்னும் ஊரிலுள்ள சிவாலயமா? அல்லது கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள கோவந்தபுத்தூரிலுள்ள சிவாலயமா? என்பது பலரின் ஐயப்பாடாக உள்ளது. இதனைத் தெளிவுபெற விளக்குவாம்.

கோவந்தபுத்தூர் என்பது, புத்தூர் என்னும் ஒரு பெயர் காரணம்பற்றிய திருவரிசிற்கரைப்புத்தூர், திருக்கோளிலி புத்தூர் என்பனபோன்று, காரணப்பெயராக வழங்குவதாயிற்று. சிவபெருமானை இலிங்கவடிவத்தில் அன்புபூண்டு ஓர் பசு நாள்தோறும் தனது மடியிலுள்ள பாலைச்சொரிந்து பேறெய்தியதால் அச்சிறப்புத்தோன்ற இத்திருப்பதிக்குக் கோவந்தபுத்தூர் என்னும் பெயர்வந்தது. இஃது இன்றும் அவ்வாலயத்தில் உருவக் காட்சியில் வைத்துப் போற்றப் படுகின்றது. இதனை

* விபவ ஆண்டு ஆனித் திங்கள் 9-ம் நாள் இறைவன் திருவடிநீழல் எய்திய என் அருமை மனைவி சாவித்திரி எனப் புனைபெயர்பெற்ற, புனிதவதி சாரதாம்பாள் ஆயாளை நினைவுகூர்தற்கு இக்கட்டுரை வகுக்கப் பட்டுள்ளது. வை. சு.

'கீதமு னிசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் னியல்புடைப் புனிதர் பொன்னகர்,
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசைய மங்கையே.' என்னும்

திருஞான சம்பந்த சுவாமிகள் திருப்பாடலால் அறியத்தக்கது. மற்றும் விசையமங்கை என்பது மேலே கூறியவாறு, மண்ணியாற்றின் கரையிலுள்ள விசையமங்கை என்னும் ஊரில் உள்ளதா? அல்லது கோவந்தபுத்தூரிலுள்ளதா ? என்னும் ஐயப்பாட்டினை

"கொள்ளி டக்கரை கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விசை யமங்கை
யுள்ளி டத்துறை கின்றவு ருத்திரன்,
கிள்ளி டத்தலை யற்றத யனுக்கே" என்னும்

திருநாவுக்கரசரது திருப்பாடலால் கொள்ளிடக் கரையிலுள்ள கோவந்தபுத்தூரில் திருவிசையமங்கை உள்ளது என்பதும், அங்கே சிவபெருமான் கோவினுக்கு அருள்சுரந்ததும் தெற்றென விளங்கி, ஐயப்பாட்டினை நீக்குகின்றது.

சைவசமய குரவர்கள் ஓதிய திருமுறைகளில் சிற்சில பதிகங்களில், திருப்பதியின் பெயர் ஒன்றாகவும், திருக்கோயிலின் பெயர் மற்றொன்றாகவும் உள்ளன. இஃது திருகுடந்தையுள் தூங்கானைமாடக் கோயிலும், திருச்செங்காட்டாங்குடியில் கணபதீச்சரமும், மருவூரில் திருஆனிலையும் உள்ளன என்பவற்றால் அறியக்கிடக்கின்றது. இம்முறையின்படியே, கோவந்தபுத்தூரில் திருவிசையமங்கை உள்ளது என்பதையும் உய்த்துணர்க.

சேக்கிழார் அருளிச்செய்த திருஞானசம்பந்தசுவாமிகள் புராணத்தில் சுவாமிகள் யாத்திரையாக வந்தவாலாறு கூறுமிடத்து கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருப்பழுவூரிலிந்து, திருவிசையமங்கை வந்து கோதனம் வழிபட்ட குறிப்புள்ள திருப்பதிகம் ஓதி, பின்னர் திருவைகாவையும், திருப்புறம்பயத்தையும் அடைந்ததாக 238 முதல் 241 வரையுள்ள பாட்டுக்களில் விளங்குகிறது. இதுதான் நேரான வழியாக உள்ளது. மண்ணியாற்றங்

கரைக் கோயிலாயின் மேற்கிலுள்ள, திருவைகாவுக்கு முதலில் வந்துதான் விசையமங்கைக்கு வரநேரும். இதனால் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ளதே, விசையமங்கை என்பது விளங்குகிறது.

முற்காலத்து, நம்பிரானுக்கு, இஞ்ஞான்று ஊர்தோறும் வடமொழிப் பெயர்களைப் புனைந்து வழங்குவதுபோலன்றி, நம் சமயாச்சாரியர்கள் எந்த ஊரில் வழிபாடாற்றுகின்றார்களோ, அவ்வூரைச்சுட்டி நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள்ளார்கள். மழபாடியுளண்ணலே! புறம்பயம் அமர்ந்தோய்! ஒற்றியூருடைய கோவே,! என்பனவாக வழங்கினான்றி, ஓரிடத்தும், அச்சிட்ட தேவாரப்பதிகங்களின் ஈற்றில் வரையப்பட்டுள்ள பெயர்கள் அப்பதிகங்களில் காணப்படவே இல்லை என்பது திருமுறைபயிலுவார்க்கு நன்கு விளங்குவதாகும். இந்த முறையைப் பின்பற்றியே, நம்பரமாச்சாரியர் காலத்திற்கு பிற்பட்டு, அரசர்களால் ஒவ்வொர் ஆலயங்களிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் நம்பிரானது பெயரைக் குறிக்குமிடத்து 'திருவலஞ்சுழியுடைய மகாதேவர்க்கு,' 'பட்டீச்சுரமுடைய மகாதேவர்க்கு' என்று அவ்வவ் வூரினைக்குறித்து நம்பிரானை மகாதேவரென்ற திருப்பெயரானே குறித்துள்ளார்கள். இம்முறையே திருவிசையமங்கை என்னும் கோயிற்பெயரால் நம்பிரானது திருப்பெயர் குறிக்கப்பட்டிருத்தலைக் கோவந்தபுத்தூர்க் கல்வெட்டுக்களில் இன்றும் யாவரும் காணலாம். கோவந்தபுத்தூர் ஆலயக் கல்வெட்டுக்களில் 'விசையமங்கையுடைய மகாதேவ' ரென்றே குறிக்கப்பட்டிருக்கின்றது. இதனையாரும் மறுப்பதற்கில்லை.

தேவாரங்களாலும், திருத்தொண்டர் புராணத்தாலும், கல்வெட்டுக்களாலும் ஆராயுமிடத்துத் திருவிசையமங்கை என்னும் பதிகம் பெற்றது, கோவந்தபுத்தூரிலுள்ள சிவாலயமே என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குவதாகும். மண்ணியாற்றங்கரையிலுள்ள சிவாலயத்தில் யாதொரு கல்வெட்டுக்களு மில்லை.

உ

கடவுள் துணை.

# ஐயவினுத்தொடர்.

திரு. ஊ. சா. வேங்கடராம ஐயரவர்கள், தமிழ்ப் பண்டிதர்,
கும்பகோணம்.

தமிழ் நாட்டு வரலாற்று நூல்களுள் ஒன்ருகிய பெரிய புரா ணத்திலே அப்பூதி அடிகளார் சரிதையிலே மூத்த திருநாவுக்கரசை அரவந் தீண்டியதாகக்கூறும் இடத்திலே "எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்" என்ற அடிபயின்று வரு கின்றது. அதனுள் 'ஏழாம் வேகம்' என்பதற்கு இனிது பொருள் படுத்திக்கொள்ளத் தடையிருந்ததுண்டு. சிலர் அதற்கு உடல்நூற் புலவர் கூறுவனவற்றை மேற்கோள் காட்டுவர். சிலர் விஷக்கடி மருத்துவர்கள் மருந்து கொடுக்கும் முறையே —'ஒரு கடிமருந்து முதல் எழு கடி மருந்து வரையில் கொடுக்கும் முறையே'—மேற்கோள் காட்டுவர். என்ருலும், இனிது பொருள்படுத்திக்கொள்ள இயலவில்லை. இங்கே இதற்குப் பொ ருள் செய்துகொள்ளத் துணையாக ஆயுள்வேத நூலார் வாக்காக அறியப்படும்,

"வேரா நிற்குமுதல் வேகம் வேர்த்து வெதும்பு மிருவேகம்
சோரா நிற்கு மூவேகஞ் சோற்றைக் கக்கு நால்வேகம்
ஆரா வஞ்சி லறிவழிக்கு மாறும் வேக மடங்கிவிடும்
காரேழ் வேகங் கொட்டாவி யெட்டாம் வேகம் பட்டாரே"

என்ற பாடல் அமையுமோ என்பது அடியேனது ஐயம். அமை யுமாயின் எங்ஙனம் அதனைப் பொருத்திக்கொள்ளலாகும்?

தொடரும்.

உ

# பச்சையப்ப முதலியார்.

## 1754--1794.

(S. S. L. C. மாணவர்கள் பாடங்களிலொன்றாம் இது, அம்மாணவர் எளிதில் உணருமாறு சுருக்கி எழுதப்பட்டது.)

உலகெலாம் மெச்சுபுகழ் படைத்த பச்சையப்ப முதலியார், காஞ்சிபுரத்திலிருந்த அகம்படியர் வகுப்பினராய விசுவநாத முதலியாரும் பூச்சியம்மாளும் புரிந்த தவத்திற் றோன்றியவர். இவர் தம் தமக்கையர் சுப்பம்மாள், அச்சம்மாள் என இருவர். சுப்பம்மாள் கணவர் புங்கத்தூர்த் தெய்வநாயக முதலியார்; மகள் அய்யாளம்மாள். அச்சம்மாள் கணவர் கூடலூர்த் தெய்வநாயக முதலியார்; மகன் முத்தையா முதலி. பச்சையப்ப முதலியார் முதல் மனைவி மேற்கூறிய அய்யாளம்மாள்; மகப்பேறின்மையாற் புரிந்துகொண்ட இரண்டாம் மனைவி வேதாரண்யத்திலிருந்த ஒரு வேளாளர் மகள் பழனியாயி. (பழனியாயிக்கு ஒரு பெண் பிறந்திருந்தது, இளமையிலே இறந்துவிட்டது.)

குடும்பம்.

நமது முதலியார் தாய்வயிற்றிருக்கும்போதே தந்தையார் காலஞ்சென்றனர். கணவரையிழந்த பூச்சியம்மாள், காஞ்சியில் காலங்கழிப்பது அரிதாக, பெண்மக்களிருவருடன் புறப்பட்டுப் பெரியபாளையம் என்னும் ஊரைச் சார்ந்து, அங்குப் பிறர்க்குதவி செய்யும் பெருந்தகையாகிய 'ரெட்டிராயர்' என்பார் ஆதரவிலிருந்து வருகையில், 1754இல், நமது முதலியார் பிறந்தார். ஐந்தாம் வயதில் ரெட்டிராயரையும் இழந்தார். தாயரும் மக்கள்மூவரும் அங்கிருந்தும் காலந்தள்ளுவது இயலாமல், வெங்கட்டம்மாள் முதலியோர்

இளமையும் எளிமையும்.

உதவியால், சென்னை எய்தினர். அங்கே, 'சென்ற் ஜியார்ஜ்' கோட்டையை யடுத்த 'சாமி மேஸ்திரி' தெருவில் தங்கியிருக்கையில், போனி நாராயண பிள்ளை என்னும் அறப் பெருஞ் செல்வர் ஆதரவை அடைந்தனர்.

போனி, நாராயண பிள்ளை.

'போனி' எனும் துரைக்குத் துபாஷி*யாக இருந்தமையால் போனி நாராயண பிள்ளை என்னும் பெயருற்ற இவர், நெய்தவாயல் எனும் ஊரினர்; யாதவர்; பெருஞ்செல்வர்; பிறர்க்குதவி செய்யும் பெருந்தகை; ஆங்கில அரசினருக்கு நண்பர்; அவர்கள் உத்தியோகங்களை இந்தியர் பலர் அடையச் செய்தவர்; நவாபினிடம் நெதவாயல் எனும் ஊரை வரியில்லாததாகப் †பெற்று, அதைத் தரும சத்திரத்திற்கு விட்டவர். இவர், பூச்சியம்மாளின் உடன் பிறப்பினர் போல் நின்று, அவர்க்கும் அவர் மக்கட்கும் வேண்டுவன வெல்லாம் புரிந்து காப்பாற்றியவர். (இவருக்குப்பின் இவர் மகனர் அய்யாப்பிள்ளையும், பெயரர் அண்ணுச்சாமி பிள்ளையும் முதலியார் குடும்பத்தில் உறவினரினும் மிக்க அன்புரிமையுடையாராய், முதலியார் ஈட்டிய பெரும் பொருளைப் பாது காத்தனர்.) இங்ஙனம் இளமை முதல் பேருதவியாளராய நாராயணபிள்ளையை நமது முதலியார், தந்தையும் தாயும் குருவுமாக எண்ணி, மிக்க பணிவுடன் நடந்துகொண்டார்.

பொருள் ஈட்டப்புக்கது.

இங்ஙனம் போனி நாராயண பிள்ளையின் உதவியைப்பெற்று வந்த நம் முதலியார், இளமையிலேயே பொருள் ஈட்டும் முயற்சியிற் புகுந்தார். இவருக்குத் தெலுங்கு மொழியிற் சிறிது பயிற்சி யுண்டு; ஆங்கிலம் பேசமாத்திரம் கற்றுக்கொண்டவர். எனவே, துபாஷித்தொழிலே இவர்க்கு ஏற்றதொன்றாயிற்று. இவர் முதலிற் பீங்கான் கடை

---

* துபாஷி—(து-பாஷி) ஒருவர் மொழியை ஒருவர் அறியாத இரு வேறு சாதியார்க்கு இடைநிற்கும் தரகர். ஆங்கிலேயர் இங்கு வந்த தொடக்கத்தில் இத்தகையோர் பலர் இன்றியமையாதவராயினர்.

† சுரோத்திரியம்.

யில் துபாஷியாக விருந்தார். பின்னர் 'நிக்கலசன் துரை' எனும் இராணுவ அதிகாரியிடம் சிலகாலம் வேலைபார்த்தார். இவ்விரு தொழில்களிலும் பெரும் ஊதியம் எய்தவில்லை.

பெரும் பொருள் ஈட்டும் வழி யறிந்தது.

என்றாலும், பேரூக்கம் உடைய நம் முதலியார் அக்காலத்தே மிக்க பொருள் வருவாயுடைய தொழில்கள் யாவையென நாடி யறிந்துகொண்டனர். அக்காலம், அரசியற் குழப்பம் மிக்கிருந்ததோர் காலம். ஆற்காடு நவாபுடன் கூடிய ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், ஐதர், நிஜாம் எனும் நான்கு துரைத்தனத்தாரும் இராணுவபலம் உடையராய், இந்தியாவில் தங்கள் தங்கள் ஆட்சியையும் பொருள் ஈட்டலையும் மிகுத்துக்கொள்ள இடைவிடாது முயன்ற காலம். இத்தேயத்து மன்னர்களும் சிற்றரசர்களும், தம் பண்டைப் பெருமையை இழந்து, தமக்குள்ளிருந்த ஒற்றுமையைக் குலைத்துக் கலகம் விளைவித்துக் கொண்டிருந்த காலம். எனவே மேற்கூறிய இராணுவபலம் உடையோர், இவர்களுட் புகுந்து பலவகையான குழப்பங்களை விளைவித்துநின்றனர். இக்காலத்தே, இத்துரைத்தனத்தார் உத்தியோகங்களிலிருப்பவருக்கும், அவர்கட்கு உதவிசெய்யும் துபாஷிபோன்றவர்கட்கும் பொருள் வருவாய்க்கு ஒரு முறையுமின்று; ஒரு எல்லையுமின்று. இதனை யுணர்ந்த நம் முதலியார், ஆங்கிலேய துரைத்தனத்தாருக்கும் சுதேச மன்னர்கட்கும் இடைநிற்கும் குத்தகைத்தொழில், துபாஷித்தொழில், இடையறாப் பணமுடையுடைய சுதேச மன்னர்களிடம் கொடுக்கல் வாங்கல் செய்தல் முதலிய தொழில்களை மேற்கொண்டனர்.

பெரும் பொருள் ஈட்டிய தொழில்கள்.

இங்ஙனம் இவர் பொருள் ஈட்டிய வழிகளுள் முதன்மையானவை சில. செங்கற்பட்டு ஜில்லாவில், பூந்தமல்லி முதலிய இடங்களில் ஆங்கிலேய துரைத்தனத்தாருக்கு வரவேண்டிய மேல்வாரங்கள் எனும் தானிய வரியைப் பணமாக்கித்தரும் குத்தகைத் தொழிலை, தர்மாய முதலியார் செங்கல்வராய முதலியார் எனும் இருவரையுங் கூட்டாகக்கொண்டு, நடத்திப் பேரூதியம்

அடைந்ததொன்று. தஞ்சாவூர் மன்னர் ஆங்கிலேயருக்குத் தரவேண்டிய கப்பங்களைத் தாம் மேற்கொண்டு கட்டியும், அம் மன்னருக்கு வேண்டிய மற்றைச் செலவுகட்குக் கடன் தந்தும் அவருடன் பலவகையில் கொடுக்கல் வாங்கல் செய்து வந்த வழியில் பெரும் பொருள் ஈட்டியது மற்றொன்று. பின்னே காணப் பெறும் சிறப்பினையுடைய 'சலிவன் துரை' என்பாருக்குத் துபாஷியாக விருந்து அவருக்கு வேண்டும் உதவிகள் யாவும் செய்து பெரும் பேரும் பெருஞ் செல்வமும் எய்தியது வேறொன்று.

சலிவன் துரை.

இங்கே கூறிய சலிவன் துரையின் திறமையினையும் பெருமையினையும் அறியுமிடத்தே அவர்க்குத் துபாஷியாக விருந்த முதலியாரின் பெருஞ் சிறப்புப் புலனாகும். சலிவன் துரை என்பார் அக்காலத்துச் சென்னைத் தலைவராயிருந்த 'லார்டு மகார்டினி' யின் கீழ், 'சிவில்' உத்தியோகம் பெற்றிருந்த ஒருவர். 'நவாப் வாலாஜா' இச் சென்னைத் தலைவருடன் சில காரியங்களில் மாறுபட்டு, அதனை, மேல் அதிகாரியாகிய வங்காளம் 'கவர்னர் ஜனர' லிடம் எடுத்துரைத்து முடித்துக்கொள்ள நினைத்தவர், மேற்கூறிய சலிவன் துரையையே தமது பிரதிநிதியாகத் தேர்ந்து அனுப்பினர். வங்காளம் கவர்னர் ஜனரலிடம், இச்சலிவன் துரை மூலம், நவாப் கேட்டுக் கொண்டவை :—கருநாடகத்தில் நவாப் ஆட்சியில் ஆங்கிலேயர் புகுதல் கூடாது; தஞ்சாவூரைத் தமது வசமாகச் செய்துவிடல் வேண்டும்; தமக்குப் பிறகு தமது இளைய குமாரருக்குப் பட்டம் கட்டுவதில் ஆங்கிலேயர் உதவி வேண்டும்; தம்முடைய கூட்டுறவில், ஐதர்மீது நடைபெறவிருக்கும் போரில் வெற்றியடையின், அந்த ஐதர் நாட்டில், தமக்கு ஒரு பங்கு வேண்டும். பத்துப் பட்டாளங்களின் செலவே தம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும். தமக்குள்ள கடன்களைத் தீர்த்துவிட்டு, அவற்றை நாளடைவில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பன போன்றனவாம். சலிவன் துரை எடுத்துரைத்ததைக் கேட்ட 'கவர்னர் ஜனரல்' தஞ்சாவூரை விட்டுவிடத் தமக்கு அதிகாரமில்லை யென்றுகூறி, ஏனையவற்றை யெல்லாம் ஒப்புக் கொண்டனர். அதனொடு இச்சலிவன் துரையினையே நவாபின்

நாட்டிற்குத் தமது பிரதிநிதியாக அமைத்து அனுப்பினர். இனி, இச்சலிவன் துரை, திருச்சிராப்பள்ளி முதலிய தென் தேயங்களின் தலைமை அதிகாரியாகி, கோயம்புத்தூரைப் பிடித்துக் கொள்ளவும், திப்புவை யடக்கவும் வேண்டிய முயற்சிகள் செய்தவர். 'கர்னல் புல்டன்', எனும் இராணுவ அதிகாரிக்குத் தஞ்சாவூர் முதலாய இடங்களில் மிக்க படைசேர்த்து உதவியவர். இவ்வளவு முதன்மையுற்ற இவருக்கு நமது முதலியார் துபாஷியாக இருந்ததே மேற்கூறியவாறு பெரும் பொருளும் பெருஞ் சிறப்பும் எய்த ஏதுவாயிற்று.

ஈட்டிய பொருள்.

முதலியார் ஈட்டிய பொருள் எத்தனை இலட்சம் என வரையறுத்தறியப்படவில்லை. முதலியார் பொருள் ஈட்டுங்கால், ஒரு முறை ஆங்கிலேய துரைத்தனத்தார் தாமே இவரைத் தஞ்சைக்கு அனுப்பி, மீண்டும் சென்னைக்கு வந்துவிடக் கட்டாயப் படுத்தியதால், இவருக்கு மிக்க நட்டம் எய்தியதுண்டு. இவர் காலஞ் சென்றபின், சுற்றத்தாரும், இவர் பொருளைப் பறித்துக்கொள்ள எண்ணிய பேராசைக்காரர் சிலரும் செய்த திருட்டுக்கள், வழக்குக்கள் முதலாயவற்றால் அழிந்தன அளவிடற் பாலனவல்ல. [இப்பொருளெல்லாம், நன்னெறியிலேயே ஈட்டப்பெற்ற முதலியார் அறப்பொருள்களோடும் அவரறியாது தாமே வந்து புகுந்த வேறு பொருள்கள் போலும்! திருவருளே இவற்றை அவ்வறப் பொருள்களினின்று பிரித்துவிட்டது போலும்!] சிறு வருவாயிலிருக்கும் போதே பல்வகையான அறங்கள் செய்யப் புகுந்த முதலியார், கோயிற்றிருப்பணி, அக்கிரகாரம், சத்திரம் முதலிய அறங்கட்குத் தம் காலத்தில் தாமே செலவிட்ட தொகை எத்தனை இலட்சமென யாவர் அறிவர்? மேற்கூறியாங்கு, அழிந்ததும் அறத்திற்குச் செலவாகி நிலைபெற்றதும் போக, முதலியார் காலத்தின் பின் அவர் பொருளெனக் கண்டறியப்பட்ட தொகை, வட்டி முதலுடன் கூடியது, 7,61,506 என்ப!

முதலியார் அக்காலத்தே சிறந்த அறங்களாகக் கருதப்பெற்ற பலவகை யறங்கட்கும் தம் பொருளையெல்லாம் 'வில்' எழுதி

வைத்தனர். முதலியார் செய்த கோயிற்றிருப்பணி முதலாயின:— காஞ்சிபுரத்தில் ஸ்ரீபலி நாயகர், சிவகாமியம்மை எனும் சுவாமி, அம்மன்கட்கு விக்கிரகங்கள் (திருவுருவங்கள்) சமைப்பித்தனர்; கும்பாபிடேகம் செய்வித்தனர்; பங்குனியுத்தரக் கலியாண மண்டபம் கட்டினர்; சிதம்பரத்தில் இரதம் செய்து, மகோற்சவம் முதலியன நடத்தினர்; காசியிலும், தென்னாட்டில் சென்னை, சீகாழி, திருவிடைமருதூர், திருப்பனந்தாள், கும்பகோணம், திருவையாறு, திருவானைக்கா, திருவரங்கம், தஞ்சாவூர், திருவாரூர், மதுரை, அழகர் கோவில், இராமேசுவரம் முதலாய பலவிடங்களிலும் கோயில்களுக்குப் பலவகையான கட்டளைகள் திட்டஞ்செய்து வைத்தனர். பலவிடங்களில் ஏழைகளுக்கு அன்ன சத்திரங்கள் கட்டினர். சிலவிடங்களில் அக்கிரகாரம் கட்டினர். சிலவிடங்களில் வசிக்கும் பிராமணத் தம்பதிகட்கு ஆண்டுதோறும் செய்துவரும் 'தம்பதி பூஜை' என்பதோர் அறமும் திட்டம் செய்தனர். இங்ஙனமாய அறங்கள் மிகப்பல.

கோயிற்றிருப்பணி முதலாய அறங்கள்.

முதலியார் கற்றறிந்த புலவர்களிடத்து மிக்க விருப்புடையவர். அவர் தம் பிரசங்கங்களையும், பாடல்களையும் கேட்டு மகிழ்பவர். பலபுலவர்கள் முதலியாரின் பெருஞ்சிறப்பினைப் பாராட்டிப் பாடியிருக்கின்றனர். இசைப்பாட்டுக்களில் விருப்பமிக்கவர். இதிகாசம், புராணம், அடியார் வரலாறுகள் முதலியவற்றைக் கேட்டுப் பக்தியால் உருகுபவர். 'தீட்சை' பெற்றுக்கொண்டு முறைப்படி சிவபூசை இயற்றி வருபவர். தமது நித்திய கடமைகளை எக்காரணம் பற்றியும் விடாது செய்து வருபவர். அடியார்கட்குச் சிறந்த உணவு அளித்து, அவர்கள் செய்யும் திருப்பணி முதலியவற்றிற்குப் பேருதவி செய்து வருபவர். நாயன்மார்கள் குருபூசைகளை விடாமற் சிறப்பாக நடத்தி வருபவர். தேவார திருவாசகங்களை உருக்கத்துடன் ஓதிவருபவர்.

சிவபக்தி முதலாயவை.

முதலியார், பொறாமை, வஞ்சம், பிறர் பொருளில் ஆசை முதலாய இழிகுணங்களில் எதுவும் இல்லாதவர். விரிந்த மன

உணர்வும், யாவரிடத்தும் இனிமையாகப் பேசும் அன்பும் உடையவர். பிறர் தம்மை ஏமாற்றி விடுமாறின்றி, உற்றவிடத்து நய பயமாகப் பேசிக்காரியம் முடித்துக்கொள்ளும் திறமையர்.

குணங்கள்.

இளமையில் சென்னையிலிருந்த முதலியார், பிற்காலத்தில் தொழில் காரணமாகத் தஞ்சையிலும், குழந்தை வீரப்பெருமாள் பிள்ளை என்ற தம் நண்பர் வீட்டின் அருகிலிருக்க விரும்பியபடி, சென்னை கோமளேசுவரபுரத்திலும், உடல் நலம் காரணமாகக் கும்பகோணத்திலும், திருப்பணிக்காகச் சிதம்பர முதலிய இடங்களிலும், இறைவனடி எய்துவதற்காகத் திருவையாற்றிலும் தங்கியிருப்பாராயினர். 1794 மார்ச்சு 31இல் திருவையாற்றில் சிவபெருமான் திருவடி நீழலை எய்தியிருப்பாராயினர்.

வாழ்ந்த இடங்களும், இறைவனடி எய்தியதும்.

அக்காலத்தே கோயிற்றிருப்பணி முதலாய அறங்களைப் போலக் கல்வியறமும் மக்கட்கு இன்றியமையாத தென்னும் உணர்ச்சி பரவவில்லையாகலின், முதலியார் தமது பேரறங்களுள் ஒன்றாகக் கல்வியையும் சேர்க்கவில்லை போலும். என்றாலும், மக்களெல்லாரும் துன்பொழிந்து இன்புறவேண்டும் என எண்ணிய அவர் தம் தூய எண்ணம், அவர் தம் பொருளைக் கல்வியறத்திற்குத் தானே பயன்படுவதாக்கிற்று. முதலியார் பொருளைப்பற்றி அவர் குடும்பத்தினர் பலர் 'தாம் தாமே உரியர்' என வழக்கிட்டும், எல்லோரும் தோற்றொழிந்தனர். என்றாலும் பிறர் பொருளைப் பறிக்கும் பேராசைக்காரர் ஒருவர் —ஒரு லாயர் துபாஷி—சிதம்பரம் தீட்சதர்களைக் கொண்டு, பெரும் வழக்குத் தொடுத்து நிற்கையில், முதலியார் பொருள்களெல்லாம் அண்ணாசாமி பிள்ளையால் நீதிமன்றில் கட்டப்பட்டன. நீதிமன்றத்தார், முதலியார் கருத்தின்படியுள்ள தருமங்களை வரையறை செய்து, அப்பொருளைப் பாதுகாத்து அத்தருமங்களை நடத்திவர, ஒன்பதின்மர் அடங்கிய கழகம் ஒன்று அமைத்தனர். அக்கழகத்தினர், பல ஆண்டுகள் அத்தருமங்களை ஒழுங்காக நடாத்திவாராமையால்,

முதலியார் பொருள் கல்விக்கானது.

அத்தொகை எஞ்சிநின்று வட்டியு முதலுமாக ரூ. 7,61,506 ஆயிற்று. அப்போது, 'அட்வோகேட் ஜனரலா' யிருந்த திரு. நார்ட்டன்துரை, இந்தியரது கல்விக்காக உழைத்தும் உதவி புரிந்தும் வரும் பெருந்தகையார். மேலும், அதுபோது சென்னை கவர்னராகிய 'லார்டு எல்பின்ஸ்டன்' என்பாரும் கல்விக்காக உதவிபுரியும் பெருந்தகையாயவர். எனவே, நார்ட்டன் துரையின் வேண்டுகோட்படி 'லார்டு எல்பின்ஸ்டன்' பச்சையப்பமுதலியார் பொருளில், முதலியார் விருப்பின்படி சிவதருமம் முதலாய தருமங் கட்கு 3,71,745 வைத்து விட்டு, எஞ்சிய தொகை, 3,89,761-ஐக் கல்வித் தருமத்திற்கென வைத்தருளினர்.

கல்விச்சாலைகள்.

கல்வி நிதிக்கென ஏற்பட்ட மேற்கூறிய தொகையை மூலப் பொருளாகக் கொண்டு, முதலியார் அறநிலைக் காப்பாளர்கள் (டிரஸ்டிகள்) காஞ்சிபுரம், சிதம்பரம், சென்னை— இம்மூன்றிடங்களில் மூன்று உயர்தரப் பள்ளிகளும், சென்னையில் ஒரு கல்லூரியும் நடாத்தி வருகின்றனர். எண்ணில் சிறுவர்கட்குக் கண்ணருளும் அன்னையர் நம் முதலியாரன்றோ!

பச்சையப்பன் கட்டிடம்.

நம் முதலியாரின் புகழுடம்பென நின்று அவரை நினைவூட்டும் ஒரு அழகிய பெரிய கல்விச்சாலைக் கட்டிடம் சென்னையில் கட்டப் பெற்றுள்ளது. அது கட்டி முடிந்ததொரு சிறப்பு எடுத்துரைத்தற்குரியது. மேற்கூறிய நார்ட்டன் துரை, 'இன்ஜினியர் லீட்டோ துரை' என்பார்; பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் மாணவர், நகரத்துப் பெரியோர்கள் ஆகிய பலரும் கூடி, அடிப்படை (அஸ்திவாரம்) செய்தனர். கட்டிடம் தொடங்கிய காலம், 1845, அக்டோபர், 2. 'மேன்மை தங்கிய மகாராணியார் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில், முதலியார் அறநிலைக் காப்பாளர்கள் முன்னிலையில், நார்ட்டன் துரையவர்களால் அடிப்படை அமைக்கப் பெற்றது' எனும் குறிப்பு விரித்து எழுதப்பெற்ற 'சாசனம்' ஒன்றை, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளில் தோலில் எழுதி, அதனையும், அக்காலத்து வழக்கிலுள்ள எல்லா வகையான நாணய வகைகளையும்,

இரத்தின வகைகளையும்ஒரு சீசாவில் போட்டு அடிப்படையில் காப்பிட்டனர். பின், வாழ்த்தொலிகளினிடையே நார்ட்டன் துரை கல்வியைப்பற்றி ஒரு அரிய விரிவுரை நிகழ்த்தினர். இங்ஙனம் அடிப்படை செய்து கட்டிமுடிந்த இக்கட்டிடம் ஆயிரக் கணக்கினர் ஒருங்கிருந்து கேட்டு மகிழுங் கூடம் ஒன்றினையுடையது (65' × 45'). ஆழமான அடிப்படையுடையது. அகன்ற சுவர்க்கனம் உடையது. அறுநூறு சிறுவர் பயிலத்தக்க பன்னிரு அறைகளுடையது. ஐரோப்பாவிற் செய்த அழகிய 'சிலேட்' பலகையால் உச்சிவேயப்பெற்றது. 1850 மார்ச்சு 20இல், இது முடிவுற்று மனைபுகு விழாக் (கிரகப்பிரவேசம்) கொண்டாடப் பெற்றது.

இவ்விழாவிற்குச் சென்னையிலுள்ள 'கவர்னர்' 'ஸர்ஹென்றி பாட்டிஞ்சர்,' அவர்தம் அதிகாரிகள், சென்னையம்பதிச் செல்வர்கள், கல்வியாளர்கள் ஆய பலரும், ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்களும், அவரவர் மனைவிமார்களும் வந்திருந்தனர். கட்டிடம் முடிந்த வரலாற்றை 'எஞ்சினீர்' 'காப்டன் இச்சின்ஸன்' படித்தார். நார்ட்டன் துரை, முதலியார் கல்வியறத்தின் சிறப்பினைப் பாராட்டி, கல்வியைப்பற்றி ஓர் அரிய விரிவுரையியற்றினர். கவர்னரும் அதனை எற்றுப்பேசினர். இங்ஙனம் மிகுசிறப்புடன் மனைபுகுவிழா நிகழ்ந்தது.

அக்கட்டிடத்தில் முதலியார் உருவப்படம் ஒன்று அமைக்கப் பெற்று மிளிர்கின்றது. தஞ்சாவூர் மன்னராகிய 'தொல்ஜா மகாராஜா,' தத்தாசி அப்பா, முதலியார் இம் மூவரும் கொண்டுள்ளதொரு படம் திருவருட் செயலால் முதலியார் அறக்காப்பாளர்கட்குக் கிடைத்தது. அதனை அவர்கள் சீமைக்கு அனுப்பி முதலியாரைத் தனியே பெரிய உருவில் எழுதச்செய்து வரவழைத்தனர். இப்படம், ஒருமலையடியிலுள்ள ஆலயத்தின் முன், முதலியார் நின்று, ஒரு மாணவனுக்குக் கல்வியின் உயர்வினை எடுத்துரைத்து, ஒரு நூல் பரிசு அளிப்பது போல் எழுதப்பெற்றது. பச்சையப்பன் கட்டிடத்தில், இப்படம், அவர்தம் பெரும்புகழெனை என்றும் ஒளிர்கின்றது.

உருவப்படம்.

**வேறுசில குறிப்புக்கள்.**

முதலியார் வரலாற்றில் இயைபுடைய சிலர் :—'ஆர்ச்சி பால்ட்காமல்'— முதலியாரைச் சென்னையிலிருந்து தஞ்சைக்கு அனுப்பி, தஞ்சை மன்னர் தமக்குத் தரவேண்டும் தொகையை அவருக்குக் கடன் கொடுக்குமாறு வற்புறுத்தி யனுப்பியவர். 'உவில்லியம் பீட்டரி,' 'டிசோசா'— முதலியாருடன் தஞ்சை சென்று பணத்தை வாங்கி வந்தவர்கள். 'மிஸ்டர் ராம்'—தஞ்சையி லிருந்தவர்; அங்குள்ள இராணுவ அதிகாரி 'கர்னல் புல்ட'னுடன் சேர்ந்து, சென்னையரசியலார் ஆணையின்படி, முதலியாரைச் சென்னைக்குப் போய்விட வற்புறுத்தியவர். மணலி சின்னைய முதலியார், சுப்பராயர்— முதலியாரைப்போலவே தஞ்சாவூரில், கொடுக்கல் வாங்கல் செய்தவர்கள். (இவர்கள் கொடுக்கல் வாங்கலில் செய்த கடுமையாலே முதலியார் பெரிதும் குறை கூறப்பட்டது.) இவருள் சின்னைய முதலியார் நமது முதலியார் சிதம்பரத்தில் செய்ய நினைந்த திருப்பணிகட்கு, அங்குள்ள வைணவர்கள் செய்த தடைகளைத் தீர்த்து வைத்தவர். வரதப்பிள்ளை, முதலியாருக்குக் கடன் தந்திருந்த ஒருவர். கோவூர் ஏகாம்பர முதலியார்—இவர் வீட்டிலேயிருந்து தான் பச்சையப்பன் கட்டிடம் அடிப்படைபோடும் சிறப்புவிழாத் தொடங்கப் பெற்றது. 'ஈக்குவிற்றி மாஸ்டர்' (Equity Master) நீதிமன்றத்தாரால் சில வழக்குக்களில் சில காரியங்களை ஆராய்ந்தறிந்துரைக்க ஏற்படுத்தப்பெறும் நடுநிலையாளர். முதலியார் மிக்கநோயுற்றிருந்தகாலை, போனி நாராயண பிள்ளைக்கு எழுதிய இறுதி நிருபத்தின் குறிப்புக்கள் :—இரண்டு நாளாகச் சற்றுக் குணம். இனித் திருவருளால் குணம் எய்தலாம். வரவு செலவின் கணக்கு முடித்து அனுப்புக. வரதப்பிள்ளை என்பாருக்கு, எஞ்சிநிற்கும் கடன் ஆயிரம் பூவிராகனையும் உரிய வட்டியையும் செலுத்தி விடுக. எல்லாக் காரியங்கட்கும் வரையறை (வில்) செய்துளேன்—என்பனவாம்.

மகாவித்துவான்,

## காஞ்சிபுரம் சபாபதி முதலியாரவர்கள்

பாடிய ‘பொன்மாலை’யிலுள்ள சில செய்யுட்கள்.

---

### கல்வியைக் குறித்தது.

நேய மிகுஞ்சிறுவர் நீதியுடன் பல்கலைகள்
ஆய வினிதி னமைந்ததால்—தேயமெங்குந்
தேக்கியசீர்க் காஞ்சிநகர்ச் செல்வனும் பச்சையப்ப
பாக்கியவான் வைத்த பணம். 1

பரியுஞ் சிறுவருளப் பாலிருளை நீக்கும்
இரவி யெனலாகு மென்ப—விரவுமணிச்
சோதிமிகு காஞ்சித் தொன்னகர்வாழ் பச்சையப்ப
நீதிமா னீட்டு நிதி. 2

வடகலையுந் தென்கலையும் வாய்ந்த வடுகும்
இடமுளவிங் லீசுமினிதின்—றிடமுடனே
சொற்சிறுவர் கற்றுணரத் துன்னியதாற் பச்சையப்பச்
சற்குண மேரு தனம். 3

### சிறுவர் சொல்வதைக் குறித்தது.

நல்ல வழியறிந்து நாங்க ணடக்கும்வகை
கல்வி யறிவெமக்குக் காட்டியதாற்—செல்வமொடு
பத்திதரும் காஞ்சிநகர்ப் பச்சையப்பப் பூபனும்
சத்தியவான் வைத்த தனம். 4

எழுபிறப்பு மெங்களுக் கின்பம் பெருக
விழுமிய கல்வி விளைக்கும்—செழுவிய
மைபுலாஞ் சோலை வளர்காஞ்சிப் பச்சையப்பன்
பொய்யறியான் வைத்த பொருள். 5

விலங்குகள் போல விவேக மிழந்து
கலங்கியுழ லாதவண்ணங் கல்வி—யிலங்கவே
நங்கட் களித்ததா னற்காஞ்சிப் பச்சையப்பன்
சங்கநிதி யொப்பான் றனம். 6

கண்ணுடைய ராகியாங் காதலொடு வாழும்வகை
நண்ணும் பொருட்கல்வி நல்கியதால்—பண்ணின்மொழி
விந்தைமகிழ் காஞ்சிநகர் வேள்பச்சை யப்பனும்பர்ப்
பைந்தருவை நேர்வான் பணம். 7

எவ்வூரு மெந்நாடு மெங்களதே யாம்வண்ணம்
அவ்வியமில் கல்வி யளித்ததாற்—செவ்வி
விதுரனைநேர் காஞ்சிநகர் வேள்பச்சை யப்பப்
பதுமநிதி போல்வான் பணம். 8

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க வெந்தாயர்
ஆன்றபொருட் கல்வி யளித்ததால்—தோன்றுபுகழ்
வண்ணமிகு காஞ்சிநகர் வாழ்பச்சை யப்பனெங்கள்
கண்ணனையான் வைத்தகன கம். 9

என்றும்பொய் யாவிளக்க மெங்க ளகந்தனிலே
மன்னுமஞ் ஞானவிருண் மாற்றுமால்—நன்னலஞ்சேர்
தீர்த்தமுதன் மூன்றுந் திகழ்காஞ்சிப் பச்சையப்பப்
பார்த்தன்மூனம் வைத்த பணம். 10

கற்றா ரவையிற் கலந்தியாமி ருக்கும்வகை
வற்றாத கல்வி வழங்கலா—லுற்றாளுந்
தந்தையென லாயதுசிர் சால்காஞ்சிப் பச்சையப்பச்
சுந்தரன்முன் வைத்தசுவ ணம். 11

எங்க ளறியாமை யிருந்த விடத்தறிவு
தங்க வறுமை தரித்திடத்தே—பொங்குசெல்வம்
நண்ணவே செய்யு நகர்க்காஞ்சிப் பச்சையப்பத்
தண்மையுளான் றேடுந் தனம். 12

---

வே.

# மார்க்கண்டேயர்
## அல்லது
# முயற்சியின் வெற்றி.

பண்டிதர். திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஈபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

தேவரும் விழையும் நாவலம் பொழிலின் தெற்கின்கண் கடகம் எனப் பெயரிய சிறந்த பதியொன்றுண்டு. அப்பதியிலே அளப்பருந்தவத்தினையுடைய குச்சகன் என்னும் அந்தண னொருவன் இருந்தனன். அருமறை பயின்ற நாவினனாகிய கவுச்சிகன் என்பான் அவனுக்கு மைந்தனாவன். அம்மைந்தன் பிறவியாகிய பெருங்கடலைக் கடத்தல் கருதி ஓர் வாவியின் மருங்கெய்தி ஆனேறுயர்த்த அண்ணல் திருவுருவையும் திருவைந்தெழுத்தையும் உன்னி அருந்தவம் புரிந்தனன். அவன் உள்ளம் பேரின்ப அளக்கரில் மூழ்கியிருந்தது. உடலம் அசைவு சிறிதுமின்றி ஆதீண்டு குற்றிபோல் நின்றது. இங்ஙனம் உணவும் உறக்கமும் நீத்து, உயிர்ப்பும் இன்றி, ஓவியமேயென மேவி நோற்குங்கால் அவ்வழி வரும் பல்வகை விலங்குகளும் தத்தம் உடம்பின் கண்டூயம் (தினவு) தீர அவன் மீது உரைத்துச் செல்லா நிற்கும். அன்னான் அதனையும் உணராது தவத்தில் உறைத்து நிற்றலை உவணச் சேவல் உயர்த்தோனாகிய திருமால் உணர்ந்து, வானோர் குழுவுடன் போந்து, அவனது தவத்தைப் புகழ்ந்து, தன் மலர்க்கையால் அவன் உடம்பினை நீவி 'மலையையொத்த

மாதவ! இன்று முதல் நின் பெயர் மிருககண்டுயன் என்பதாகும். பிறைமுடியோன் பேருள் நின்பால் முற்றுக' என அருள் புரிந்து மறைந்தனன்.

மாயோன் போயபின்றை அம்மாதவன் அங்கு நின்றும் விரைந்து சென்று, தன் தந்தை முன்பெய்தி அடிபணிந்து நின்றனன். அன்னவன் மகனை மகிழ்வுடன் கண்டு தழுவிக்கொண்டு 'தவத்திடை உற்ற பெற்றியை உரைப்பாய்' என்ன, அவனும் உள்ளவாறுரைத்தனன். அதனைக் கேட்ட தந்தை உவகைமிக்கு 'ஐய, நின் குலத்தவர்க்குள் நின்போலும் நோன்மை எவர்க்குளது? நினக்கும் அரியதொன்றுண்டோ? பாருளார் விசும்பின் பாலார் துறக்கமென்னும் ஊருளார் ஏனை உலகுளார் எல்லாருள்ளும் நின்னையொப்பார் யாருளார்? கறைமிடற்றண்ணலாகிய எந்தையன்றி நீ புரிந்த நோன்மையைக் காணவல்லார் யாவர்? எனப் பலவாறு புகழ்ந்து கூறி, இறைவனருளால் ஓர் நினைவுண்டாக, அதனை மைந்தனுக்குரைப்பானுய் 'ஐய, வேதம் முதலிய கலைகள் யாவும் விளம்பியனவும், எவரானும் தள்ளத்தகாதனவுமாகிய நான்கு கடமைகள் மாந்தர்க்கு உள்ளன. அவை ஆசிரியனிடத்தினின்று ஓதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரியமும், இல்லின்கண் கற்புடைய மனைவியோடிருந்து அறத்தினைப் புரிதலாகிய கிருகத்தமும், இல்லைவிட்டுத் தீயோடு வனத்தின்கட் சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்தலாகிய வானப்பிரத்தமும், முற்றத்துறந்த யோகவொழுக்கமாகிய சன்னியாசமும் ஆம். அவற்றுள் முதல் நிலையாகிய பிரமசரியத்தை நீ இன்று காறும் இயற்றினை; பின்னவை இரண்டும் பின்பு செய்யற்பாலவாகலால் அவற்றை இப்பொழுது பேசுதல் வேண்டா; இடையில் வைத்துச் சொல்லப்பட்டதாகிய இல்வாழ்க்கைநிலை என்னும் கடனை ஆற்றுதற்கு நீ இஞ்ஞான்று தொடங்குதல் வேண்டும்' என்றனன்.

இவ்வுரையினைக் கேட்டலும் கவுச்சிகன் எந்தையார் 'எனக்கு இனியதோர் உறுதி கூறினர்' என அகத்தே நகைத்து, 'மாசற்ற தவத்தினையுடைய நீரும் புதல்வனுகிய ஒருவற்கு இங்ஙனம் விளம்புதல் முறையோ' என மொழிந்து, பின்னரும்

தந்தையை நோக்கிக் கூறுவானாய் 'முன்னரே என்னைப்பற்றி யுள்ள பாசத்தின் கட்டினையறுக்க வேண்டிய யான் அஃதின்றிப் பின்னும் ஒரு பாசத்தாற் பிணிக்கப் படுவேனாயின் இன்னலெனும் ஆழியிடைப்பட்டு இனைதல் அன்றி, தனக்குவமையில்லாதான் தாளினைச்சேர்ந்து மனக்கவலை மாற்றலும் உளதாமோ? தன் கையே பற்றுக்கோடாகத் தவழ்ந்து செல்லும் முடவனொருவன் பின் அதற்கும் பிணியுண்டாக வருந்துதல் போல் யானும் வருந்தக் கடவேனோ? தவத்தினாலன்றிப் பொய்யாய இல்லொழுக்கத்தால் வினையினைப் போக்க முயல்வது உடம்பிலே பொருந்திய அழுக்கை மிக்க தூய நீராலன்றிக் கலங்கற் சின்னீராற் கழுவுதலையொக்கு மன்றோ? ஐம்புலங்களாகின்ற பூதங்களினால் ஈர்க்கப்பட்டு அல்லலுறும் புன்மையேனாகிய யான் மாதரெனும் பேயும் வந்து பற்றியக்கால் யாது செய்வேன்? மின்னற் கொடிபோலும் மகளிரை விரும்பிய வேட்கையானது புவியின்கண் பன்னாளும் துன்பத்தில் மூழ்குவிக்கும்; பின்பு நிரயமாகிய பிலத்தினுள்ளே செலுத்தாநிற்கும்; அஃது எந்நாளில் ஆண்டகையோர்க்கு இன்பம் பயக்குமோதான்? துன்பத்தை நுகரும் வினைத்தொடர்ச்சியுடைய மாந்தர் இன்பம் நுகர்வார்போல் எந்திழையாரிடத்து அகப்பட்டனர்; ஞாளியானது தன்பல் மிக நடுங்குமாறு தசையில்லாத என்பினைக் கறிக்குமாயின் அதனால் அது பெரியதோர் சுவையைப் பெற்றிடுதலுண்டோ? வேல் போலும் கண்களையுடைய மகளிர் வேட்கை ஒருவர் நெஞ்சிற் புகுமாயின் அது பின்பு நீங்கும் பெற்றியதோ? அஃது எஞ்சுதலின்றி எந்நாளும் உயிரை ஈர்தலால் ஓர் நாள் தானும் நலிதலில்லாத நஞ்சம் அதனின் மிக இனியதாகும். உலகிலே சாதல் பிறப்பென்னும் தடஞ்சுழியிற்பட்டுத் தடுமாறுகின்றவர் மாதர் வலைப்பட்டு மயக்குற்றாரே யல்லரோ? வானவர் முனிவருள்ளும் மகளிராசையால் இடும்பையுற்றோர் எத்துணையராவர்? அவையெலாங் கிடக்க, யான் அம்மடந்தையருடன் கூடி வாழும் ஒழுக்கத்தை விரும்பேன்; இந்திரன் முதலிய இமையவர் பதங்களையும் வேண்டேன்; வாழ்வெனும் கொடிய சிறையின் கண்ணும் வீழேன்; புலன்களால் அழியும் மயக்கினை நீக்கித் தவமென்னும் விழுச்செல்வத்தை யடைந்து இன்புற்றிருப்பேன்' என்றனன்.

இம்மொழிகளைக் கேட்டலும் தந்தையாகிய குச்சன் 'ஆ! உலகமெலாம் மீக்கூறும் நல்லறமாகிய இல்லறத்தினை இவன் நவை என இகழுகின்றான்; நான்மறையின் துணிவையும் கொள்ளுகின்றிலன்; தவமென்னும் மயலினைப் பூண்டான்' என்று துயர மெய்தி, மைந்தனை நோக்கிக் கூறுகின்றான்.

'பேரறிவுடையாய்! ஓர் கன்னியை மறைமுறையால் வதுவை பூண்டு குலத்தினை யோம்பக்குமாரரைப் பயந்தபின்னன்றோ தவம் புரிந்து வீடு பெறுதலென்பது வழக்காறாகும்? மகளிர் தம் உள்ளப் பரப்பின் ஒருபுறத்தே சிறிது மயக்கமும் தியக்கமும் உடையராயினும் அதன் ஆழத்தே அன்பும் கடைப்பிடியும் தெளிவுமே உடையராவர்; அவர் தம் உறுதியை நீ உணராய்; உலகிலே உயிர் வாழ்க்கையாகின்ற பெருங்கடலுட் செல்லும் ஆடவர் நெஞ்சமாகிய மரக்கலமானது உறுதியற்ற எண்ணமென்னும் சுழற்காற்றால் உந்தப்பட்டு அங்கு மிங்கும் அலைந்து கெடாமல் அறமாகிய துறையின்கண் நிலைபெற நிறுத்தும் நங்கூரமாவது மங்கையர் நிலை யென்பது கடைப்பிடிப்பாயாக; ஒருவற்கு அன்பும் நற்குணமும் உடைய மகளிர் வாழ்க்கைத் துணைவராயின் அவற்கு இல்லது யாது? இல்லற மென்பது தனக்கெனவாழும் விலங்கின்றன்மையுடைய மனக்கோணை நிமிர்த்து, மற்றையர் இன்பமும் துன்பமும் தன்னுடையவாக அன்புபாராட்டச் செய்து, மெள்ள மெள்ள உள்ளம் விரித்து, பொறுமையையும் அமைதியையும் படிப்படியாகப் புகட்டி, சிந்தையைத் தெளிவித்து, தான் எனும் நினைப்பும் தனக்கெனும் விருப்பும் ஒய்வுறப் புரிந்து, பொங்கித் ததும்பிப் பூரணமாய்க்கிடக்கும் பேரின்ப வெள்ளத்தில் மூங்கி மூழ்கும்படி யாரையும் பக்குவஞ்செய்யும் நல்ல பள்ளிச் சாலையாம் என ஓர்வாயாக. உலகிலுள்ள மன்பதை போன்று நீயும் காமவின்பம் நுகர்தற்கேயோ இது கூறினேன்? தாம் புரியும் நல்வினையாலே இறந்த மேலோரின் துன்பத்தைத் துடைத்தற்குரிய மக்களைப் பெறுதற்பொருட்டு ஓர் மாதினை மணத்தல் வேண்டும்; இந்த நன்மைவாய்ந்த இல்வாழ்க்கை நிலையை நீ இந்நாள் காறும் எண்ணாது முதலிற் செய்யற் பாலதாகிய கடன் ஒன்றையுமே செய்து முடித்தனை; பன்னாளாக எதிர் நோக்கி

யிருக்கும் வானோர்க்கும் அவி முதலிய சிறப்புக்களைச் செய்யாது நீ இன்னே தவம் புரிதல் கருதற்பாலதோ? விருந்தினரையோம்பலும், துறந்தார்ப் பேணலும், வறியார்க்களித்தலும், சுற்றந் தழுவலும், ஒப்புரவாற்றலும் என்னும் அறங்கள் செய்யாவழி மக்கட் பிறப்பால் யாருக்கு என்ன பயனுளது? உமையுடன் கூடி உலகுயிர்களை யெல்லாம் பயந்த சிவபெருமான் யாவரும் மடந்தைமாரோடு இல்லறத்திலொழுகப் பணித்துளானன்றே?

"தேவரும் முனிவர் தாமும் செங்கண்மால் அயனும் மற்றும்
யாவரும் மடந்தை மாரோ டில்லறத் தொழுகுந் தன்மை
மேவரப் பணித்தா னன்றே விமலையோ டணுகி மேனாள்
தாவரும் புவன மாதி சராசரம் பயந்த தாணு"

அவ்விறைவன் செய்த வரம்பினைச் சிதையாதே; உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வழியை இகழாதே; எனது மொழியைத் தள்ளாதே; வசிட்ட முனியானவன் பொன்போலும் வனப்புடைய அருந்ததியோடு என்றும் பிரிவின்றியிருந்தும் உயரிய தவத்தினையுடையனாய் உலகிலே போற்றப்பட்டிலனோ? விருப்பு வெறுப்பற்ற தூயோர் நாடொறும் மடவாரொடு கூடி முயங்கினும் மாதவம் புரியினும் அவரதுணர்வு சலிப்பின்றி ஒருபெற்றித்தேயாகும்; தொல்லை முறையால் வரைந்துகொண்ட மெல்லியலோடு கூடி வாழின், தானம் உளதாகும்; அரிதாய தவமும் உளதாகும்; அவரால் எய்தலாகாத தொன்றில்லை. பத்தினிப்பெண்டிர் இருந்த நாட்டிலே வானம் பொய்யாது; வளம்பிழைப்பறியாது; நீணிலவேந்தன் கொற்றஞ்சிதையாது; தெய்வமும் அவர் ஏவின செய்யுமென்றால் ஆண்டகையாருள் அவரை நிகர்ப்பார் யாவர்?

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்தம் மெய்யுரையில் நிற்கும்
ஈண்டையுள தெய்வதமும் மாமுகிலும் என்றால்
ஆண்டகைமை யோர்களும் அவர்க்கு நிகரன்றே"

ஆயிழையாருடன் கூடியின்புறும் அறத்தை முதற்கண் ஆற்றாது தூய தவநெறியைத் தொடங்குவையேல் வேட்கையென்னும்

கொடிய நஞ்சு தலைப்படின் அதனை நான்முகனாலும் விலக்க வொண்ணாதே; இல்லறத்தில் நிற்போர் ஒழுக்கத்திற் சிறிது இழுக்குவராயின் அதனைத் தீர்க்கும் கழுவாயுமுளது; தவஞ் செய்வோர்க்கு அவ்விழுக்கமுண்டாயின் மலையின் உச்சியினின் றும் தவறுதல் போல உய்தல் அரிதாகும். துன்பமாகிய திரை யால் எற்றுண்டு வருந்தும் பிறவிக்கடலினின்று கரையேற வேண்டுமாயினும் அதற்குரிய நாளிலன்றிக் கதுமெனத் துறக்க லாகுமோ? நீ இப்பொழுதே உயரிய தவத்தின்கண் செல்லக் கருதுதல் நிவப்புமிக்க மலையின் குடுமியை அடையும் விருப்புடை யார் அதன் சாரலையெய்தி நெறியானே ஏறிச் செல்லாது சேணிலே தாவுதலை யொக்கும். ஆதலால், மைந்தனே! நீ நம் முன்னோர் போல நல்லறமாகிய இல்லறத்தினை நடாத்தி, அதன் பின் துறவினை மேற்கொள்க. அங்ஙனம் புரியின் நினக்கு ஏதம் யாதும் உளதாகாது. இதனை மறுத்துரையல் ஆணை நமது' என்றனன்.

---

உ

# பதி பசு பாச வகை.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

---

இது, சைவத்தின் முடிந்த பொருளாகிய பதி, பசு, பாசம் என்ற மூன்றினையும் வகைப்படுத்துரைத்தலின் இப் பெயர்பெற்றது. இதனை இயற்றியவர் இன்னவரெனத் தெரியவில்லை.

பாச சுபாவமாவது:—அறியாமை. (க)

பாச வியாப்தியாவது:—ஆணவம், மாயை, கன்மம், மாமாயை, திரோதாயி. (உ)

பாச வியாபகமாவது :—ஆணவமலம் ஒன்றாயிருக்கச் சர்வான்மாக்களிடத்தும் வியாபித்து நிற்கை. மாயை ஒன்றாயிருக்கத் தனுகரண புவன போகங்களாய் நிற்கை. கன்மம் ஒன்றாயிருக்கச் சஞ்சித புண்ணிய பாவங்களாயும், பிராரத்துவ புண்ணிய பாவங்களாயும், ஆகாமிய புண்ணிய பாவங்களாயும் நிற்கை. மாமாயை ஒன்றாயிருக்கச் சுத்த தத்துவங்க ளைந்தாயும், வாக்கு நாலாயும், சத்தகோடி மகாமந்திரங்களாயும் நிற்கை. திரோதாயி ஒன்றாயிருக்கச் சர்வான்மாக்களையு மறைத்து நிற்கை. (௩)

பாச குணமாவது :—தான் சடமாகை. (௪)

பாச விசேடமாவது :—தான் சடமாயிருக்கச் செயல்படுதல் (௫)

பாச ரூபகமாவது :—இத்தன்மையெல்லா முடையதொரு பாச மூண்டெனநிற்றல். (௬)

பாச ரூபமாவது :—தான் எடுத்தது வடிவாகி நிற்றல். (௭)

பாச சொருபமாவது :—ஆன்மாவுக்குச் செம்பிற் காளிதமென்னவும், உட்கொண்ட விஷமென்னவும், தவிராத தண்டனையெனவும், தேருக்குப் பாகனெனவும், இருளுக்கிருளுமென்னவு மறைத்து மயக்கியும் புசிப்பித்தும் நிற்கிறது. (௮)

பாச தரிசனமாவது :—இந்த முறையைக் காண்டல். (௯)

பாச சுத்தியாவது :—இந்தப்பாசத்துக்குஞ் சிவத்துக்கும் பணியில்லை யென்னு மதுவும், ஆன்மா விதுவல்ல மென்னு மதுவு மறிந்து விடுதல். (௰)

---

ஆன்ம சுபாவமாவது :—அனவரதமுந் தத்துவங்களுடனே கூடுதல். (௧)

ஆன்ம வியாப்தியாவது :—கூடின தத்துவங்க ளுள்ளளவும் வியத்தமாயிருக்கை. (௨)

ஆன்ம வியாபகமாவது:—தத்துவங்களுக் குள்ளளவும் ஒழிய நானென்று மேலிடுதல். (ங)

ஆன்ம குணமாவது:—அறியாமையே யிருக்கை. (ச)

ஆன்ம விசேடமாவது:—அறியாமலே குணமாயிருக்கச் செய்தே பக்குவப்பட்டுக் குருவுணர்த்தின வுணர்ந்தறிவகை. (ரு)

ஆன்ம ரூபகமாவது:—உடம்பொழிய உயிருண்டெனப் பொருந்துதல். (சா)

ஆன்ம ரூபமாவது:—இச்சா ஞானக்கிரியா சுவரூபனு யிருக்கை. ஆன்மாவுக் கிச்சையாவது; பண்டபதார்த்தங்களை யாசைப் படுகை. ஞானமாவது; ஆசைப்பட்ட பதார்த்தங்களைப் பகுத்தறிகை. கிரிகையாவது; அறிந்த பதார்த்தங்களை யபகரிக்கச் செய்தல். (எ)

ஆன்ம சொரூபமாவது:—மெய்போலத் தோன்றின தேகாதிப் பிரபஞ்சங்களைப் பொய்யென்றுணர்ந்தறிவு. (அ)

ஆன்ம தரிசனமாவது:—அந்த அறிவைத் தானெனக் காண்கை. (கூ)

ஆன்ம சுத்தியாவது:—ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியைகளை விடுகிறது முதலாக எல்லாவற்றையும் விட்டு, உணர்வு மசைவுமற நிற்றல். (ய)

ஆன்ம லாபமாவது:—* நிரஞ்சனமாக நின்ற வவதாரத்தில் விளைகிற பரபோதத்தை யனுபவிக்கை. (கக)

---

சிவ சுபாவமாவது:—தத்துவாதீதமாய் நிற்றல். (க)

சிவ வியாப்தியாவது:—சர்வலோகங்களிலும் சர்வான்மாக் களிலும் ஒழிவற நிறைந்து நிற்கை. (உ)

* நீராஞ்சனம் எனவும் பாடம்.

சிவ வியாபகமாவது :—பூரணமாய் நிராமயமாய் நிற்கிற நிலையிலே ஆன்மாக்களை இரட்சிக்கை காரணமாகத் திருமேனி கொண்டு தோன்றுதல். (ங)

சிவ குணமாவது :—அனவரதமும் ஒழியா அறிவாய் நிற்கை.

சிவ விசேடமாவது :—அறிவுக் கறிவாயுஞ் சடத்துக்குச் செயலாகியு நின்றறிவித்தும் சேட்டித்து நிற்கை. (ரு)

சிவ ரூபகமாவது :—அப்படி நிறைந்த அறிவுக்குப் பிராணனாய் நிற்பானொரு முதலுண்டெனத் தோன்றல். (சா)

சிவ ரூபமாவது :—இச்சா ஞானக் கிரியா சொரூபனாய் நிற்கை: இச்சையாவது, சர்வான்மாக்களையும், தேக இந்திரியங்களாதிகளையும் கூட்டிக் கன்மங்களுக் கீடாகப் புசிப்பிக்கை. (எ)

சிவ சோரூபமாவது :—இச்சா ஞானக் கிரியைகளையுடைய தான் நிர்விகற்பமாய் நின்றநிலை. (அ)

சிவ தரிசனமாவது :—நிர்விகற்பமாய்ப் பூரணமாய் நின்ற பொருளை இரண்டற நின்று காண்கை. (கூ)

சிவயோகமாவது :—அந்த நிலையிலே கலந்து பூரணனாய் விடுகை. (ய)

சிவபோகமாவது :—அந்த ஒழியாத பரமானந்தமாய்த் தோன்றுதல். ஆன்மலாபமென்றது, இந்தச் சிவபோகந்தன்னை.

பதி பசு பாச வகை

முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சாவூர்.

(தொடர்ச்சி துணர் 3, பக்கம் 368.)

௩௧. செய்தவத்தைப் பேணித் தெறுகனலிற் புன்புனலிற்
செய்தவத்தைப் பட்டுத் தெரிந்தவன்—செய்தவத்தைத்
தேண்டாதே யெந்தை திருச்சுழியற் சென்றடைமின்
வேண்டாதே தந்தருளும் வீடு.

செய்தவம்--செம்மையானதவம். பேணுதல்--விரும்புதல். செய்து அவத்தைப்பட்டு-அத்தவத்தைச் செய்து சிரமத்தை அடைந்ததனால். செய்து அவத்தை வேண்டாதே-இங்ஙனங் காயக்கிலேசத்தைச் செய்து பிரயோசனமற்றதொன்றைத் தேடாமல். தேண்டுதல்-தேடுதல். "தேண்டிநேர் கண்டேன் வாழி" என்றார் கல்வியிற் பெரியாரும். வீடுதான் வேண்டாமை வேண்டுவார்க்குக் கிடைப்பதாகலான் "வேண்டாதே தந்து" என்றார் என்க.

௩௨. வீடு தருஞ்சுழியல் வேந்தே! உனையொருகாற்
கூடு பெறுமுன் குறித்தறியேன்—வாடும்
பொறையிது போய்ப்பிறந்து போற்றவோ மாட்டேன்
குறையிது நீபொறுத்துக் கொள்.

பொறை-சரீரம். குறை-குற்றம்.

மேல் தமக்குப் பிறப்பில்லை என்னுந்துணிவால் "பொறையிது போய்ப்பிறந்து போற்றவோ மாட்டேன் என்றார்" அஞ்ஞானம், ஞானம் இவ்விருநிலையிலும் ஈசன் உணர்வரியனாகலான்,

"குறித்தறியேன், போற்றவோ மாட்டேன்" என்றார். ஞான நிலையினும் ஈசன் உணர்வரியான் என்பதை "உணர்ந்தார்க் குணர் வரியோன்" என்ற திருச்சிற்றம்பலக் கோவையாரால் அறிக. உன்னை நான் ஒரு பொழுதேனுந் துதித்திருப்பேனாயின் எனக்கு இச்சரீரம் வந்திராது. வந்ததுகொண்டு முன் துதித்தறியேன் என்பது நிச்சயம். இப்போது உன்னைத் திருவடிதொழப்பெற்ற மையின் இனி யெனக்குப் பிறவியில்லை; ஆகவே இனியும் நான் உன்னைத் துதிக்கமாட்டேன் என்பது நிச்சயம்; சுழியல் நாத! முன்னர் உன்னைத் துதியாதிருந்ததும், இனித் துதியாதிருக்க போவதுமாகிய இந்த எனது குற்றத்தை பொறுத்தருளல் வேண்டு மென்கிறார் இப்பாசுரத்தில்.

ருரு. கொள்வா ரிலாமைக் கொடுப்பா ரிலாக்குறைசேர்
கள்வார் பொழிற்சுழிகைக் கற்பகத்தை—வள்வார்
துடிநூ லிடைத்துணையைச் சூழ்ந்துதொழா மாக்கள்
படிநால் பலபலவும் பாழ்.

"தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே பூவிரிய மதுநுகரும்" வண்டினங்கள் மிகுந்திராமையின், பொழிலும் மதுவை வறுநிலத்திற் சிந்துகின்றன என்பார், "கள்வார் பொழில்" என்றார்; இவ்வாறு கூறிய நகர்ச்சிறப்பினன், திருமேனிப் பெருமானாகிய கற்பகமும் தன்னைத் திருவடிதொழுது வணங்கியுய்வாரைத் தேடுகின்றதென்க. நான்காமடி—முற்று மோனை.

ருச. பாழ்பெறுஞ் செல்வரைப் பாரியெனப் பாழ்மனமே!
கூழ்பெறுங் கூறைக்காக் கூறுதே—கேழ்பெறுங்
கற்றவரை யேந்துங் கலியாண சுந்தரனைப்
பெற்றவரை யுற்றவனைப் பேசு.

"உண்ணார், ஒளிகிறார், ஒங்கு புகழ் செய்யார், துன்னருங் கேளிர் துயர்களையார், கொன்னே பொருள் சாத்திழப்பார்" ஆகலான், பாழ்பெறுஞ் செல்வர் எனப்பட்டார். "சிறுவீமுல்லைக் குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்,

பறம்பிற் கோமான் பாரி,'' கடை யெழுவள்ளல்களில் ஒருவன். இவனது கொடைச்சிறப்பு "கொடுக்கி லாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப் பாரிலை'' என்ற சுந்தரமூர்த்திகள் திருவாக்கினாற் போதரும். கல்தவர்—மேருபருவதமாகிய வில்லை. பெற்ற வரை—பெருமையுற்ற கைலையங்கிரி. கற்றவர்களை ஆதரிப் பவனும் கலியாணகோலத்துடன் விளங்குகின்ற அழகிய வடி வத்தை யுடையவனும், பெற்ற தாய் தந்தையர்களைப் போன்ற வனுமாகிய சுழியற்பிரானைப் பாடு'' என்பதாக மற்றொரு பொரு ளும் ஈற்றிரண்டடிகளில் கிடைக்க வைத்தார்.

௩௫. பேசப் பெருவியப்பு மாயம் பிறரறியார்
வாசப் பழன வயலூரான்—ஏசத்
தரும்பிச்சை யேற்பான் தராதிபராய்த் தன்பால்
வரும்பிச்சை யேற்பாரை வைத்து.

தன்பால் வரும்பிச்சை ஏற்பாரை—தன்விடயமாக வருகின்ற பயித்தியத்தை மேற்கொள்ளும் மெய்யடியார்களை. பிச்சு—பித்து என்பதன் போலி. ஏசத்தரும் பிச்சை ஏற்பான்—(தன்னை)யாரும் இகழும்படி (பிறர்) கொடுக்கும் பிச்சையைத் தான் அலைந்து இரந்துகொள்வான்.

நிலம் இல்லாதவன் இரத்தல் சகசம்; விளைநிலங்களை யுடை யான் இரத்தல் ஆச்சரியமன்றோ என்பதை அறிவித்தற்கு "வயலூரான்'' என்றார் போலும். இச்செய்யுளை

"இருந்தவா காணீ ரிதுவென்ன மாயம்
அருந்தண் கயிலாயத் தண்ணல்—வருந்திப்போய்த்
தானாளும் பிச்சை புகும்போலுந் தன்னடியார்
வானாள மண்ணாள வைத்து''

என்ற மேலோர் கவியோடு ஒப்புநோக்குக.

தொடரும்.